உ

சிவமயம்

# அருள்மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்




# 2013

## எதிர்காலம் இன்புற்றிருக்க
## எம்பெருமான் நல்லருள் நல்குவாராக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
220,008

**வங்கி கணக்குகள் திருப்பணி**

**இலங்கை வங்கி**
பருத்தித்துறை - 7345648
வல்வெட்டித்துறை - 72090184

**மக்கள் வங்கி பருத்தித்துறை**
அறக்கட்டளை நிதியம் 265-063125-2

**செலான் வங்கி**
யாழ்ப்பாணம் 0850-01308424-101

**கொமர்சல் வங்கி**
நெல்லியடி

நித்திய அன்னதானப் பணி
08108036333

நிர்வாக வைத்தியசேவைக்கான நிதி
8108036334




Telephone - 021-3734392 Internet - www sannathy.com
E.mail - sriselvasannathy@sannathy.com Reg.No - HA/05/JA/421


# தற்போதைய பரிபாலனசபை விபரங்கள்

**போஷகர்** - திரு. க. உலக குருநாத ஐயர்

**தலைவர்** -திரு. ஆ. சிவசண்முக ஐயர் (சமாதான நீதவான்)

**செயலாளர்** -திரு. வி.தெய்வேந்திர ஐயர் (சமாதான நீதவான்)

**பொருளாளர்** -திரு. வி. சுரேஸ்குமார்

**நிர்வாக உறுப்பினர்கள்**

திரு. க. ஆறுமுகசாமி ஐயர்
திரு. த. பாலசுப்பிரமணிய ஐயர்
திரு. த. அகிலேந்திர ஐயர்
திரு. ஆ. லோகேஸ்வர ஐயர்
திரு. வ. சுந்தரமூர்த்தி ஐயர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீ
# செல்வச்சந்நிதி ஆலயம்



**எதிர்காலம் இன்புற்றிருக்க**

**எம்பெருமான் நல்லருள் நல்குவாராக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

கந்தவேற் பெருமான் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் 19 நூற்றாண்டின் முற்பதியில் எம் மூதாதையரான திரு.மருதர் கதிர்காமர் அவர்களுக்குக் காட்சி கொடுத்துத் தனக்குப் பூஜை செய்யப் பணித்தருள அவரும் பெருமானுக்கு பக்தியுடன் பூசை வழிபாடு செய்து வந்தார். அவருக்குப்பின் அவர் சந்ததியினரும் தொடர்ந்து பக்தியுடன் பூசை செய்வதால் பெருமான் ஆலயம் பெருமையுடன் விளங்க அடியார்களும் ஆனந்த வழிபாடுகள் செய்து அருட்பிரவாகங்களைப் பெறுகின்றனர். ஆலயம் பெருமான் சித்தப்படி மருதர் கதிர்காமரும் அவரது சந்ததியினராகிய நாமும் அன்றைய மரபுப்பிரகாரம் அடியார்கள் உதவி கொண்டுபல புனரமைப்பு பணிகளிலும் சிறப்புற்று புனிதமாக்கி வருகின்றோம். இடையே சிற்சில அனர்த்தங்கள் ஏற்பட்டபோதும் அவை நாளடைவில் சீர் பெற்று 1988லும் 20 வருட காலத்தின் பின் 2008லும் மகாகும்பாபிஷகங்களை நடாத்தி பலபுனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் பெருமான் வீதியுலாக்கள்.கும்ப ஆராதனைகள். அடியார்கள் நேர்த்திகள். வெய்யில் மழைத்தாக்கங்களிலும் எற்பட்ட கஸ்டங்கள் தற்போது அமைக்கப்பட்ட சுற்று மண்டப அமைப்புகளினால் மிகுந்த ஆறுதல் அடையும் நிலையேற்பட்டுள்ளது. மகாகும்பாபிஷேகங்களும் மற்றும் பணிகளும் அத்துடன் சுற்று மண்டபமும் திட்டமிட்டவாறு நிறைவேறியமை பெருமான் திருவருளும் அடியார்களின் ஆக்க ஊக்கங்களுமே. பெருமான் பணிகளில் சுற்றுமண்டபணி யாவரையும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கவைத்துள்ளது. இப்பணிகள் பற்றிய விபரங்களை இம்மணங்கமழும் இதழ்கள் கொண்ட வாடாமலரை நம்மெல்லோர் சார்பிலும் பெருமான் பாதார விந்தங்களில் பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

சைவப்பெருமக்களின் பெருமதிப்பிற்கும் அருள் மிகுபக்திக்கும் உரிய ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பற்றிய விபரங்களை அமரர் திரு.வே.முருகேசு சுவாமியர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 20ம் நூற்றாண்டு ஆரம்பத்தி லும் பின் 2004 ல் இரண்டாவது பதிப்பிலும் ஆலய வரலாறு பூசை முறைகள் வழிபாடுகள் போன்றவைவற்றோடு திருப்பணிகள் கடந்த கால இன்னல்கள் ஆகியவற்றை அனைவரும் திருப்தியுடன் தெரிந்த கொண்டனர் 1986 வன் முறைக்குப்பின் ஆலயம் ஓரளவு புனரைப்புடன் மகா கும்பாபிஷேகத்தடன் வழமைப்பூஜை வழிபாடுகள் உற்சவ மகோற்சவங்களும் தொடர்ந்தன

ஆரம்ப காலத்தில் சுண்ணாம்புக் கலவையினால் கட்டடப்பெற்ற இவ்வாலயக் கட்டிடங்கள் நாளடைவில் சேதமாயின இதனால் ஸ்திரமாக ஆலயத்தை புரனமைக்க கைதடி அன்பர் அமரர் திரு வேலாயுதம் அவர்களின் ஆரம்ப உதவியுடன் முன்னைய உபயகாரர்கள் மற்றும் அடியார்கள் பங்களிப்புக ளினால் ஸ்திரமாக புனரமைக்கப்பட்டு 7.4.2008 ல் மறுபடியும் 20 ஆண்டுக ளுக்குப்பின் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது இடைக்காலத்தில் கடந்த கால சேதமுற்ற வன்முறையில் காண்டாமணி மணிக்கோபுரம் மண்டபங்கள் சித்திரத்தேர்கள் வாகனங்கள் படிப்படியாக புனரமைக்கப்பட்டன அத் துடன் ஆலயத்தின் பாரிய பணியாக சுற்றுமண்டபமும் முற்றுபெற்று பெருமான் நிகழ்வுகளும் அடியார்கள் நேர்த்திகளும் வெயில் மழைத் தாக்க மின்றி நடைபெறுவதும் யாவர்க்கும் மிகுந்த திருப்தியாகின்றது

ஆலயத் திருப்பணிகளோடு சுற்றாடலிலும் அபிவிருத்திப் பணிகளில் நாட்டங் கொண்டுநித்திய அன்னதானப்பணி,இலவசவைத்தியசேவை கண்பார்வையற் றோருக்கான உதவிகளோடு தொ.வீ.பிமகாவித்தியாலத்திலும் இராமநாதன் பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு மாணவர்கட்கும் கல்வி விருத்திக்காக உதவிகளை வழங்கி வருவதும் மகிழ்ச்சிக்குரியது இவ்வாலய விபரங்களை இம்மலர் மூலம் நான்காவதாக வெளியிடும் வேளை சந்நிதி ஆலய மூர்த்திக ளுக்கான பாடல்களும் மற்றும் அன்பர்கள் பாடல்களும் பிரமுகர்களின் ஆசி யுரைகளும் வேற்பெருமான் திருவருள் பற்றியும் சிறப்புற அமைவது ஆனந்த மாகின்றது. முன்னைய மலர்களுக்கு விசேட பிரமுகர்கள் அளித்த ஆசியுரை கட்டுரைகள் எக்காலத்திற்கும் ஏற்கும் வண்ணம் அமைந்தமையால் அவை மீண்டும் இடம் பெற்றுள்ளன. அதே வேளை இம்மலரில் குற்றங் குறைகள் இருப்பின் அவற்றைப் பெருமனதுடன் பொறுத்து பெருந்தன்மையுடன் வர வேற்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் பணிவாகக் கேட்டுக் கொள்கின்றேன்

நன்றி

தொலைபேசி 021-3212914, 0773526917

**வி.தெய்வேந்திர ஐயர்**
(சமாதானநீதவான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துதிகள்

காப்பு
விநாயகர்
திருச்சிற்றம்பலம்

திகடசக்கரச் செம்முக மைந்துளான்
சகடசக்கர தாமரை நாயகன்
அகடசக்கர வின்மணி யாவுறை
விகடசக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம்.

உச்சியின் மகுட மின்ன வொளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள் கிம்புரி வயங்க
மெய்ச் செவிக்கவரி தாங்க வேழமா முகங்கொண்டுற்ற
கச்சியின் விகடசக்கர கணபதிக் காப்பு செய்வாம்.

## திருவாதவூரடிகள் புராணம்

பவனமால் வரையி லிலவெறிப் பதுபோல்
பந்தநீற் றழகுபச் சுடம்பிற்
றிவளமா துடலின் றாடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும் போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்திற்
றரித்துயர் கிரப்புறத் தெழுதங்
கவளமா களிற்றின் றிருமுகம் படைத்த
கடவுளை நினைத்து கைதொழுவாம்.

## சுப்பிரமணியர் துதி

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற வீராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

## தெய்வானையம்மை வள்ளியம்மை துதி

வாரணம் போற்றும் மருட்செல்வி யேவள்ளி மாமணியே
ஆரணம் போற்றும் ஆறுமுகச் சோதியென் னாண்டவர்பால்
பூரணமாஞ் செல்வச்சந்நிதி மேவிப் புவன முய்யுங்
காரணை மாய்ப்பொலி வீரர்கடை யேனையுங் காத்திடுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயிரவக் கடவுள் துதி

செய்வினை யேய்பில்லி சூனியம் யாவுமுன் சீரருளை
மெய்யெனப் பேற்ற மடியவர் தம்மை விலகியையா
ஒய்யென வோட அருள்புரி வாயுயர் சந்திநார்
தெய்விக வாலிலிற் கூலமுற் றேங்கிய சேவகனே.

## சனீஸ்வரன், நாகதம்பிரான் துதி

சொல்லார்செல் வச்சந் நிதிப்பூ வரசிற் றெழுமடியார்
பல்லாயி ரந்துன்பய மெல்லா மகலப் பரிவுடனே
நல்லாய் விளங்குஞ் சனீஸ்வர னேமணி நாகமுத்தே
கல்லாத புல்லன் சரணடைந் தேனெனைக் காப்பதுவே
தந்தை பிரியத் தமியேன் வருந்தும் தருணத்திலே
வந்த கருத்து மருந்தாகச் செய்த வரோதயனே
சந்தத முந்துணை நின்றருள் வாய்செல்வச் சந்நிதியா
யந்தமோ டாதியில் லாயடி யேனுன் னடைக்கலமே.

## கண்ணகையம்மன்

திருமருவு சந்தனச்சோலை செறிபுகழ் பெருகு
காவேரிவாழ் தேவர்தெருத் தொங்கன்
மாநாகர் மகளெனச் செகந்தனிலுதித்து
பொருவலிய செழியனுடன் வாதிட மதுரையிலே
பொங்கொழில் தனைக்கெழுத்திப் புகழ்இடையர்
வளருமனை எரிதரா திவிதருள் புரிந்த விமலயே
கருது கோவலனுடன் பொருதிய பவானியே
கலியுகந் தன்னில் வருது புதுமையுள்ள
சுந்தரக் கற்புடைய பொற்பூவையே
அருமறைகள் பரவுசிவ ஆனந்தரூபியே அழகுசெறி
சந்நிதியில் வாழ் அன்னநடை மின்னலிடை
என்ன கண்ணகை அம்மனே.

ஆடும் பரிவேல் அணிசேவ லென
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடும் தனியானை சகோ தரனே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வரலாறு

இலங்கைத் திருநாட்டில் அமைந்த சைவத்திருத்தலங்களில் வரலாற்றுச் சிறப்பும் திருவருட்தன்மையும் கோடானு கோடி பக்தர்களின் பக்திக்குரிய ஆலயமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகின்றது. இவ்வாலயம் யாழ் மாவட்டத்தின் வடமராட்சிப் பகுதியில் சரித்திர தொடர்புடைய தொண்டைமானாறு எனும் வளம்மிக்க கிராமத்தில் அமைந்துள்ளது. உலகில் எவ்விடத்திலும் காணப்படாத தனித்துவமும் தெய்வத்திருவருள் தன்மையும் புதுமை பொலிவும் கொண்டுள்ள இவ்வாலயத்தில் முருகப்பெருமானது திருவருளானது மிகுந்து பிராகசித்துக் கொண்டிருக்கிறது. கந்தப் பெருமானின் கருணை வெள்ளம் மடைதிறந்து பாய்கின்றது. அவரை நாடிவரும் அடியார்கள் மட்டுமன்றி ஆங்காங்கே இருந்து பக்தி வழிபாடு செய்வோரும் கருணை கடலில் மூழ்கி திருவருட் பிரசாதங்களை தினமும் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இவ்வாலயமானது மூர்த்தி.தலம்.தீர்த்தம் ஆகிய அபரிதமார்க்கத்தை கொண்டு பூரணம் என்று கூறும் படியாக பத்திர சத்தி முகூர்த்தத்தில் பொலிந்த தன்மையிலுல் திரு.ஆ.வேதநாயகம் என்ற பக்த சிரோன்மணி செல்வச் சந்நிதி மேவிய பூரணனே எனக் கசிந்து பாடியுள்ளார்.

இவ்வாலயம் தெய்வீக கந்தபுராணத்துடன் தொடர்புடையாதலால் இதன் பழமை அளவிடற்கரிதான தொன்மையைக் கொண்டுள்ளது. புலனாகின்றது திருச்செந்தூர் பதியிலிருந்து கந்தப்பெருமான் வீரவாகுத்தேவரை மகேந்திராபுரிக்கு சூரனிடத்து தூதனிப்பியதாகக் குறிப்பிட்டு தூதுவரான வீரவாகுத்தேவர் வட இலங்கையின் வல்லி நதிக்கரையில் (தற்போது ஆலயத்தின் மேற்குப்புறத்தே) உள்ள கல்லோடையில் (ஆலயத்தின் வட புறத்தே) காலடி பதித்துச் சூரனிடம் சென்றார். காலடி பதித்த பாதச்சுவடுகள் இன்றும் ஆலய உரிமையாளர்களால் பாதுகாக்கப்படுகின்றது ஏராளமான பக்தர்கள் பார்வையிட்டு வணங்கிச் செல்கின்றனர். சூரனிடத்துச்சென்று திரும்பிய வீரவாகுத்தேவர் சந்திக்கால மேற்பட்ட தன்மையினால் சந்திக்காலபூசைக்கடனை வல்லிநதிக்கரையில் செய்தார் இச்சந்திக்காலக்கடன் செய்த இடம் இன்று சந்நிதியாக மருவி ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமாக மிளிர்க்கின்றது. இவ்விடத்தில் கந்தப்பெருமானை வழிபாடு செய்த தேவலோக கந்தர்வரின் வரலாறு பக்தி பூர்வமானது.

தேவலோகத்தில் வியாழபகவானது கட்டளைக்கு ஒழுகத்தவறிய கந்தர்வரான ஐராவசு. பகவானின் சாபத்திற்கு ஆளாகி பூமியில் பிறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் கந்தர்வரான ஐராவசு பகவானிடம் தனக்கு சாபவிமோசனந்தருமாறு வேண்டுதல் செய்த போது பகவான் சாபத்தை மாற்ற முடியாது என்றும் கதிர்காமக்காட்டுப்பகுதியில் யானையாக அவதரிக்கும் போது கதிர்காமக்கந்தனை தரிசிக்க வரும் சிகண்டி முனிவரால்விமோசனம்அளிக்கப்படுமென்று பணித்தருளிகினார். சாபம் பெற்ற ஐராவசு அக்காட்டில் யானையாக அவதரித்து பல அட்டகாசங்கள் செய்தது.

இது இவ்வாறிருக்கையில் தேவலோகத்தில் உள்ள சிகண்டி முனிவர் இசைப்பிரியனாக இசைநுணுக்கங்களை அறிய விருப்பமுடையோனாக முருகப்பெருமானிடம் வேண்டுதல் செய்தார். பெருமான் முத்தமிழ் வித்தரான அகத்தியர் தென் பொதிகையில் இருப்பதாகவும் அவரிடம் சென்று அறியுமாறு பணித்தருளினார் இதன் பிரகாரம் சிகண்டி முனிவர் பொதிகை சென்று அகத்தியரிடம் இசை நுணுக்கங்களைத் தெரிந்து கதிர்காமக் கந்தனை வழிபாடு செய்யும் நோக்கில் சீடர்களுடன் வந்து கொண்டிருக்கையில் ஐராகவசு எனும் கந்தர்வரான யானை அவர்களைத்தாக்க முற்பட்டது. முனிவர் தனது ஞானத்திருஷ்டியனால் சாபத்தையும் விமோசனத்தையும் தெரிந்து முருகப் பெருமானை நினைத்து சண்முக மந்திரத்தை உச்சிசரித்து அருகில் இருந்து வெற்றிலையை நுள்ளி எடுத்து வேலாகச் சென்று அழிக்க விடுத்தார். வெற்றிலையானது கதிர்வேலாக மாறி யானையை வீழ்த்த அவ்விடத்தில் கந்தர்வன் தோன்றி தனது வரலாற்றைக் கூற முனிவர்களும் சீடர்களும் அபயம் அளித்து கதிர்காமம் கூட்டிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று வழிபட்டனர் பின்னர் சிகண்டி முனிவர் ஐராவசு கந்தர்வனிடம் இலங்கையின் வடபால் அமைந்த வல்லி நதிக்கரையில் வீரபாகு தேவர் வணங்கிய புனித இடத்திற்க்குச் சென்று முருகப்பெருமானை தியானித்து வழிபாடுகள் செய்யுமாறு பணித்தார். அதன் பிரகாரம்ஐராவசும் வல்லி நதிக்கரையில் தற்போது பூவரசு விருட்சம் அமைந்த இடத்தில் பெருமானை தியானித்து பக்தியுடன் மௌனப்பூசை வழிபாடு செய்து முத்தி நிலை பெற்றார். சிகண்டி முனிவர் ஐராவசுவின் சாபத்தை போக்க விடுத்த வெற்றிலை இன்று பெருமான் வீதிவலம் வரும் வேளையில் கதிர்வேற் பெருமானின் நடுப்பாகதத்தில் காட்சி தந்து பத்திர சத்தி முகூர்த்தம் பரவசம் ஆகி பிரகாசிக்கின்றது ஐராவசு வழிபாடு செய்த இடத்தில் அமைந்த பூவரசு விருட்சம் அடியார்கள் பக்தி கொண்டு பூசித்து துன்பங்களை நீக்கும் தெய்வத்தன்மையை கொண்டுள்ளது. இவ்வாலயத் தோற்றத்துக்கு காரணமான ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் ஸ்தபாகரனான மருதர் கதிர்காமரின் வரலாறும் இவ்வாறு பக்தி பூர்வமானது. வீரவாகுத்தேவரும் ஐராவசு கந்தர்வரும் பூஜித்து வழிபாடு செய்த இத்தலத்தில் மூன்றாம் ஆளாக அன்பாக பூசை செய்ய ஆளில்லை என்பதனால் தேவலோகத்தில் பணிவிடை செய்த மருதர் கதிர்காமரை இப்பகுதியில் பெருமான் தோற்றுவித்தார். இவ்வாறு தோற்றிய கதிகாமர் நாள்தோறும் பூவரசு மரத்தடியில் முருகப்பெருமானை வணங்கியே தன் தொழிலை செய்து வந்தார். நாளடைவில் கதிர்காமரின் பரி பக்குவ நிலை உணர்ந்த பெருமான் அவன் முன் தோன்றி தனக்குப்பூசை செய்யும்மாறு பணித்தார். கதிர்காமர் பதைபதைத்து தனக்கு பூசை முறை தெரியாது என்று கதறியழவே கண்ணை மூடுமாறு பணித்து அவரை கதிர்காமம் அழைத்துச் சென்று கதிர்காமப்பூசை முறைகளை காண்பித்து வழியில் அவரது வரலாற்றையும் கூறி ஆலமிலையில் அமுது படைத்து பூசை செய்யுமாறு பணித்தருளினார் கதிர்காமரும் பக்தியுடன் பூசை வழிபாடு செய்தார். இந்நிலை தொடரவே ஆலயம் அமைத்து வாசலில் வலது பக்கத்தில் பெருமான் தோன்றி இடதுபக்கத்தில் கதிர்காமரை அமர்த்தி நடக்கவிருக்கும் முறைகளை விளக்கி பக்தியுடன் தொடர்ந்து பூசை செய்யவும் வேண்டிய வேளைகளில் சிரமங்களை போக்கி குறையின்றி நடத்தவும் அருள்பாலித்தார். கதிர்காமரும் தினமும் பூஜை வழிபாடு முடித்து இடத்து பக்கத்தில் அமர்ந்து தியானித்து வழிபாடு செயதது போல அவரது சந்ததியினரும் இன்றும் அவ்வாறே பூஜை வழிபாடுகள் முடித்ததும் அமர்ந்து தியானித்து வேண்டுதல் செய்வது வழக்கமாகியுள்ளது. பெருமான் அனுக்கிரகத்தினால் ஆலயம் பொலிவு பெற்று அடியார்களின் நெஞ்சங்களிலும் குடி புகுந்து சிறப்பாகி வருகின்றது. இவ்வாறு சிறப்பான ஆலயம் அமைந்த கிரமமான தொண்டைமானாறு புராதான உன்னத சரித்திர பின்னணியைக் கொண்டுள்ளது. இவ்வாலயத்தின் மேற்குப்புறமாக அமைந்த வல்லிநதியான ஆறு பின்னால் அரசியலுடன் பின்னிப்பிணைந்து முன்பு கடலுடன் சங்கமித்த இந்நதியை அண்டிய பகுதி வல்லிப்பெருவெளியாக விளங்கி பின் வல்லை பெருவெளி என்றும் இந்நதியின் மேலே தென்புறத்தே அமைந்த பாலத்தை வல்லைப்பாலம் என்றும் கூறப்பட்டது. இந்த நதியின் தொடுவாயில் தொண்டமான் என்னும் அரசன் நதியை வெட்டிக்கடலுடன் சங்கமிக்க விட்டதால் அது ஆறாகியதுடன் இவ் ஆற்றுப்பகுதியை தொண்டைமானாறு என்றும் அழைக்கப்பட்டது.கடல் நீருடன் தொடர்பு கொண்டதால் உப்பு நீர் ஆற்றின் பகுதிகளுகுச் சென்று கரணவாய் பகுதியில் உப்பு விளையல் ஆயிற்று இவ் உப்புக்களை ஆற்று முனையில் சேமிக்க நாளடைவில் இக்கரை உப்புமால் எனப் பெயர் பெற்று வாணிபமும் சிறப்பானது அக்காலத்தே ஆட்சி செயத போர்த்துக்கேயர். ஒல்லாந்தர். ஆங்கிலயரும் வணிகமுறையினால் இப்பகுதி க் காணிகளுக்கு பதிவேடுகள் உண்டாக்கி தோம்பு என்னும் காணி உறுதிகளை ஏற்படுத்தினர் இத்தோம்பு உறுதிகளில் செல்வச்சந்நிதி ஆலய தோற்ற விபரங்கள் இருப்பதும் தொடரந்து ஆலயப்பதிவேடுகள் உண்டாகியதும் பதிவேடு முறையும் உருவாகியதால் திரு.மருதர் கதிரகாமருக்கு செலவச்சந்நிதி ஆலய தொடர்பு விபரிக்கப்பட்டுள்ளது.இவ்வாறான பழமை வாய்ந்த பக்திக்குரிய ஆலயம் 1984 முதல் பல கஸ்டங்களை எதிர்நோக்கி 1986ல் ஆலயம் பலத்த சேதம் ஆகி உடமைகளின்றி பூசைகளின்றி பூட்டிய நிலையில் இருந்தது எனினும் பெருமான் திருவருளால் ஆலய உரிமையாளர்கள் அடியார்கள் ஆக்கஊக்கங்களினால் 1988 மகாகும்பபிஷேகத்துடன் வழமையான பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி தொடர்ந்து பல புனருத்தாரன பணிகள் பூர்த்தியாகி புது பொலிவுடன் திகழ்கின்றது. ஆலயப்பணிகளும் அன்றாட வசதிகளும் முன்னேற்றமாகி வருவதோடு யாவரும் பரம திருப்த்தி பெறுகின்றனர்

இவ்வாலயத்தில் தொன்று தொட்டு கதிர்காமக்கொடியேற்றத்தின்போது பெருமானை உழுத்தம்பிட்டு நிவேதித்து அனுப்புவதும் பின் தீர்த்தமாடியபின் பயத்தம்தம்துவயலும் இளநீரும் படைத்து வரவேற்பதும் இன்று பக்தியுடன் கொண்டாடும் வழிபாடுகளாக அமைந்துள்ளது.இவ்வூர் ஆண்டியப்பர் என்வபர் இவ்வாலயத்தில் முதல்முதலாக பூசை நேர்த்தியினைச்செய்தார் நாளடைவில் அடியார்கள் பலரும் நேர்த்திகளை

இன்று நாட்டில் ஏற்பட்ட சமூக சூழ்நிலையால் வெளியூர், வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் பெருமான் ஆலயத்திற்கு வருகை தருவதடன் ஆலயம் மேலோங்கி வருவதை உணர்ந்து பல்வேறு பங்களிப்புக்களைச் செய்து திருவருளைப் பெறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாடுகளும் உற்சவங்களும்

கந்தவேற் பெருமானின் அருளால் ஸ்தாபகர் மருதர் கதிர்காமரும் அவரது சந்ததியினரும் அன்று தொட்டு இன்றுவரை பூசை முறைகளில் மாற்றம் எதுவுமின்றி பழைய மரபுபேணிக் கந்தப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகட்கும் பக்திப் பூசை வழிபாட்டினைச் செய்து வருகின்றனர். தற்போது தினசரி மூன்றுகாலப் பூசைகளும் வெள்ளி மற்றும் விசேட தினங்களில் விசேட பூசைகளும் இடம் பெறுகின்றன. அத்தோடு விசேட தினங்களில் விசேட உற்சவங்களும், ஆண்டிற்கொரு முறை ஹோற்சமும் இடம் பெறுகின்றன. பிரதி சனிக்கிழமைகளில் திருமுழுக்குப் பூசையும் மாலையில் பிட்டுப்பிரசாதமும் பழமைக்குரிய சிறப்பு வழிபாடாகும். தைப்பொங்கல், புதுவருடப் பொங்கலுடன் ஆனியில் குளிர்ச்சி(வருடாந்த)ப் பொங்கலும் வழமையாகும். ஆனிப்பொங்கலின் போது மட்டும் அடியார்கள் ஆலய வீதியில் பொங்கிப்படைக்கும் வழக்கமும் உண்டு.

தைப்பூசம், மஹாசிவராத்திரி, சித்திரைப்புதுவருடதினம், வைகாசி விசாகம், ஆனி உத்தரம், கதிர்காமத் தீர்த்தம், சூரசம்ஹாரம், தெய்வானை அம்மன், வள்ளி அம்மன் திருக்கல்யாணங்கள், திருக்கார்த்திகை, திருவாதிரை போன்ற தினங்களில் பெருமானுக்கு விசேட உற்சவம் நடைபெற்று வீதியுலாவும் இடம்பெறும். கதிர்காமக் கொடியேற்றத்தின் போது வேற் பெருமானை வழிபனுப்பும் பக்தி வைபவத்தில் அடியார்களின் அருட்பிரவாக பக்தி வழிபாடுகளும் மெய்சிலிர்க்கும் மரபுப் பூசை வழிபாடுகளும் விசேடமானதாகும். ஆனிப் பொங்கலுக்கு முதல் வாரம் கடலில் தீர்த்தமெடுத்து விளக்கேற்றிப் பூசை வழிபாடும் பழமைக்குரியதாகும்.

இவை தவிர விநாயகசஷ்டி, நவராத்திரி தினங்கள், திருவெம்பாவை தினங்களில் விசேட விரத பூசை வழிபாடுகளும், கார்த்திகை ஆனிக்கடைசி ஞாயிறு தினங்களில் வழமைப் பூசை நேர்த்திகளும் புரட்டாதிச் சனிக்கிழமைகளிலும் ஐப்பசி வெள்ளிக்கிழமைகளிலும் ஐப்பசி வெள்ளிக்கிழமைகளிலும் விசேட விரத வழிபாடுகளும் இவ்வாலயத்தில் வழமையானவை.

# மஹோற்சவம்

ஆவணி மாதத்து பூரணையில் தீர்த்த வைபவமும் அதற்கு முன் உண்டான அமாவாசை நீங்கிப் பிரதமை கூடும் வேளையில் கொடியேற்ற உற்சவமும் ஐந்தாம்நாள் உற்சவத்தில் பகல் உற்சவம் ஆரம்பமாவதும் பத்தாம் நாள் உற்சவத்தில் பூங்காவனமும் பதினோராம் நாள் உற்சவத்தில் கைலாய வாகனமும் தீர்த்தத்திற்கு முதல்நாள் தேரும் தேருக்கு முதல் நாள் சப்பறமும் இடம்பெறும். தீர்த்த மறுநாள் ஆலயத்தொண்டு புரிந்த அன்பருக்கும், பூக்காரர், விளக்கெடுக்கும் பெண்பிள்ளைகட்குமாக விசேட பூசையும் நடைபெறும். தீர்த்தத்தின் பின் ஒருவாரத்துக்குள் வரும் திங்கட்கிழமையில் பிராயச்சித்த அபிசேகமும் நடைபெறுவது வழக்கமாகும்.

# கந்த சஷ்டி விரதம்

தீபாவளி அடுத்து வரும் அமாவாசை நீங்கிப் பிரதமை கூடும் தினத்தில் கந்தசஷ்டி விரதம் ஆரம்பமாகும். சஷ்டி தினத்தன்று உபவாசம் இருந்து மறுநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை பாரணை இடம்பெறும். மாலை தெய்வானை அம்மன் திருக்கல்யாணமும் அடுத்து வரும் சுப தினத்தில் வள்ளியம்மன் திருக்கல்யாணமும் வழமைபோல் நடைபெறும்.

## புராண படலங்கள்

சைவப்பெருமக்கள் போற்றும் பிள்ளையார்புராணம், கந்தபுராணம், திருவாவூரவடிகள் புராணம் மற்றும் கண்ணகி கதை என்பன இவ்வாலயத்தில் பூஜைவழிபாடுகளின் பின்னர் வருடந்தோறும் நடைபெறுகின்றன. பிள்ளையார் புராணத்தை விநாய சஷ்டிதினத்திலும் கந்தபுராணத்தை நவராத்திரி கும்பபூசையுடனும் திருவாவூரவடிகள் புராணத்தை திருவெம்பாவை பூஜாரம்பத்துடனும் கண்ணகி கதையினை தீர்தமெடுப்புப் பூசையன்றும் ஆரம்பித்து தொடர்வது வழக்கமாகும். செல்வச்சந்நிதி பூசகர் பரம்பரை திரு. ஆ. வேதநாயகம் திரு. செ. பொன்னுத்துரை ஐயர், திரு. செ. விசாகரத்தின ஐயர், திரு. வே.கந்தசாமி திரு. சி. சுப்பிரமணியம் (இளைப்பாறிய சார்ஜன்ட்) ஆகியோருடன் குடாநாட்டில் பலபாக பண்டிதர்களும் மிகுந்த ஈடுபாடு கொண்டதும் கண்ணகி கதையினை கதிரிப்பாய் திரு செல்லையா (ஆசை) என்பவரின் கனிவாள கனகச்சித கீத ஒலிகளும் இன்றும் நெஞ்சைவிட்டு நீங்காதுள்ளது. தற்போது திரு. ஆ. சிவசண்முக ஐயர் அவர்கள் இப்புராணங்களை முக்கிய பொறுப்பேற்று நடாத்துவது குறிப்பிடத்தக்கது. அவருடன் க. ஆறுமுகசாமி ஐயர் (சின்ன) திரு. க. உலகநாதக்குருஐயர் செல்வன். உ. றமணன் மற்றும் உ.கார்த்திகேயன் தெ.சசிந்திர ஐயர் திரு. இராசேந்திரம், திரு. விநாசித்தம்பி, வல்வை திரு. கட்டி ஆகியோரும் புராண படலத்தில் ஈடுபாடு கொண்டுள்ளதை குறிப்பிடவேண்டும்.

## சங்காபிஷேகம்

ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகப் பெருமானின் விசேட பூசை வழிபாடுகளில் சங்காபிஷேகம் விசேடமானதாகக் கருதப்படுகின்றது. முதன் முதலாக 1938ம் ஆண்டிலே இவ்வாலயத்தில் சங்காபிஷேகம் ஆரம்பிக்கப்பட்டது. மற்றும் சைவ ஆலயங்களில் நடைபெறுவது போலவே இவ்வாலயத்தில் சங்காபிஷேகம் நடைபெற்றாலும் தனித்தன்மையுடன் பக்திமயமாக நடத்தப்படுகின்றது. 1938ம் ஆண்டு முதல் பங்குனி மாதத்தில் நடைபெறும். இச் சங்காபிஷேகத்தை கம்பர் மலையைச் சேர்ந்த திரு. சி. கதிர்காமு (சிந்தாமணி) ஓவசியர் என்பவரே இதனை உபயமாக செய் து வருகின்றார். தற்போது அவரின் சந்ததியினர் சிறப்புடன் செய்கின்றனர்

## சண்முக அர்ச்சனை

இவ்வாலயத்தில் நடைபெறும் மற்றொரு பூஜை வழிபாடு சண்முக அர்ச்சனையாகும். 6 வகைப்பழங்களும் 6வகை பிரசாதங்களும் பெருமானுக்கு நிவேதித்து 6 பூசுகர்களால் 6 வகை வில்வங்களால் அர்ச்சித்து 6 பஞ்சாரத்தி தீப ஒளி காட்டி நடாத்தப்படும் இவ்வழிபாடும் பக்திபூர்வமானது. முதன்முதலில் புறாப்பொறுக்கியைச் சேர்ந்த திரு. சுந்தரம் என்பவரே இப்பூஜை வழிபாட்டினை ஆரம்பித்து உபயஞ் செய்வித்தார்.

சங்காபிஷேக, சண்முகஅர்ச்சனை பூஜை வழிபாடுகளை முதன்முதலாக இவ்வாலயத்தில் இடம்பெறச் செய்தவர் பழம்பெரும் பூசகரான திரு. செ. விசாகரத்தின ஐயர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலவிருட்சம்

இவ்வாலயத்தின் தலவிருட்சமாக இங்கு பூவரசு நாவரசு ஆல் மற்றும் பயறி விருட்சங்கள் சிறப்பானவையாகும் இவற்றுள் பூவரச விருட்சம் வீரவாகு தேவர் வழிபட்டதும் கந்தர்வரானஐராவசு சமாதியடைந்ததும் வழிபட்ட இடமுமாகும் இன்று இவ்விடம் அடியார்களுக்கு அமைதியும் ஆத்மதிருப்திபெறுவதுடன் இஸ்ட சித்திகள் கிடைக்கும் புனித பூமியாகவும் உள்ளது அடுத்து நாவல் இவ்விருட்சம் பெருமான் வீதியுலாவிற்கு எழுந்தருழுவதோடு வீரபத்திரர் வழிபாட்டுக்கும் சூரியதேவவணக்கத்திற்குரிய இடத்தில் அமைந்துள்ளது. அடுத்து ஆல்விருட்சம் இங்கே வைரவப்பெருமான் குடிகொண்டு ஆலயத்தையுப் சுற்றாடலையும் காத்து வருகின்றார். பெருமான் ஆலய வாசலில் நிற்கும் பயறிவிருட்சம் கதிர்காம பயணத்தின்போதும் தீர்த்தோற்சவம் முடிந்து எழுந்தருளும் போதும் விசேடத்துக்குரியன. இவையாவும் ஸ்தாபகர் மருதர் கதிர்காமர் காலத்துக்கு முன்னேயே புனிதமாகப் போற்றப்பட்டன அன்றுமுதல் அவர் சந்ததியினரும் அடியார்களும் இன்று இவற்றை வழிபாடு செய்வது மரபாகிவிட்டது.

## திண்ணைகள்

பெருமான் வாசலில் அமைந்த திண்ணைகள் ஆரம்பத்தில் மண்ணினால் கட்டப்பட்டிருந்தது அக்காலத்தில் ஆலயம் கொட்டிலாகவும் தென்னை. பனை ஓலைகளால் வேயப்பட்டும் இருந்தன ஆண்டுக்கொருமுறை அக்கரையிலிருந்து ஓலைகள் பெறப்பட்டு வேயப்பட்டன. அவ்வோலைகள் நேர்த்திகளாக்கி உபயஞ்செய்யும் வழக்கம் இன்றும் உண்டு கொட்டகை அமைந்த ஆலயத்தின் முன்பாக உள்ள திண்ணையின் வலது பக்கத்தில் பெருமான் எழுந்தருளி இடது பக்கத்தில் மருதர் கதிர்காமரை அமர்த்தி ஆலயக்கடமைகள் அமைப்புகள் பற்றிய விபரங்களைத் தெரிவித்து. பெருமான் சித்தப்படி ஆலயம் விருத்தியானது ஆரம்பத்தில் இருந்த கொட்டில் மண்டபமாக மாறிய போது திண்ணைகள் சீமெந்தினால் கட்டப்பட்டு யாரும் உட்காராது புனிதமாகப் போற்றப்படுவது இன்றும் நடைமுறையில் உள்ளது இன்றும் பூசகர்கள் இடது திண்ணையருகே பூசை வழிபாடுகள் முடிந்த பின்னர் அமர்ந்து வலது பக்கத்தில் பெருமானை மானசீகமாக நினைத்து ஆலயச் செயற்பாடுகளை மேற்கொள்வர்.

## திருத்தல புராணம்

செங்கமல மலரடியின் செம்பொற் சிலம்பதிர
திருவதன மாறும் மிளிர
சீரான ஈராறு கரவரிசை தெரியஇளம்
செவ்வாய் சிரிப்பு மலர
பொங்கு நவசோதி முடிபொலிய வரைத்தோள்களில்
புனிதக் கடம்பு புரள
புனுகு சந்தன பனிப்புனலுறு நீறுமணிப்
பூமாலை மார்பி லசைய
மங்களத் திருவிழிகள் வளர்செவிகள் அழகுதர
மணிச் சுட்டி நிலவெறிக்க
மயிலாட வாரணக் கொடியாட வள்ளிதெய்
வானையுடன் நியு மாடி
தங்கு பரமானந்த மெங்குமுறவே கருணைத்
தங்கரத மேறி வருவாய்
சரவண பவானந்தனே முருகனே செல்வச்
சந்நிதி கதிர் வேலவனே.

*அருட்கவி சீ. விநாசித்தம்பி*
ஆசிரியர் அவர்கள் இயற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HISTORY OF SELVA SANNITHY

by. V. Theiventhira Iyer

Among the temples of Eelam, Selva Sannithy stands out, as few other temples have such religious and historical associations. The classic religious work, kanthappuranam says the Lord Skanda directed Veeravaku to go from Thiruchenthur to Mahendrapuri as His messenger. On his way, Veeravaku set foot at Kallodai, on the banks of the river, Valli (now called Thondaman river) in nortern Sri lanka. His footprint, in stone can still be seen there now. On his way back, he temple built there was later called Sannithy temple. Another sacred event occurred at that place. Airavasu,an inhabitant of the land of the Gods was condemned to become an elephant jungles of Kataragama. As the elephant rampaged for advive. When Sikandi returned to Kataragama, the elephant charged at him. Sikandi touched the elephant's forehead with the tip of a betel leaf and said the mantra he had been given. The elephant regained its original form as Airabasu. Airavasu begged to be allowed to return to the abode of the Gods. Sikandi asked him to go to Kallodai temple, on the banks of the Valli river, and spend the rest of his mortal life in prayer. He did so, and attained samathi. Since he was buried beside the poovarasa tree at the temple, that site has become sacred. Even now devotes who pray at that site have their wishes fulfilled. Valli river later became involved in historival chanfes. It was known as Valli Peruveli. The bridge to its south was called Vallai bridge. In the 12th century, the Indian general, Karunakara Thondaiman constructed the canal which gave an outlet for the Vadamaradchy lagoon to the sea. It thus became known as the Thondaiman river, and the adjacent village also took on the same name. Because of the temple, the village also became well known. The influx of sea water caused places like Karanavai to become salt beds. Since salt was stored on the shore before export, that area got the name Uppumal (Salt store) With colonial rule, the lands were given title deeds (thombu) Titles to the temple were also defined / Maruthar Kathirkamar's right to the temple land was also formalised. Maruthar Kathikamar's connection to the temple is interwoven with the divine. In the 19th century, Maruthar Kathirkamar used to pray at the site of the poovarasa tree and work nearby. Lord Muruga Kathirkamar was shocked. and said that he was ignorant of prayers and religious rituals. kathirkamar was then miraculously trans

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ported to Kataragama, and shown the way prayers were conducted there in silence, and with the mouth covered. Lord Muruga assured him of help to manage the temple. On the way, lord Muruga told him of Veeravaku and Airavasu and their connection to that site. He was told to make offerings of milk rice on banyan leaves. Latter, when Lord Muruga was leaving for the Kataragama temple festival, he asked Kathirkamar to prepare ulutham pittu for the journey. On his returm e was to be served coconut water, and baked green peas. By conducting the prayers and rituals, Kathirkamar gained peace of mind. is deseendents continue to observe the rituals and customs begun by him. Chinna Aandi Appar of the village sponsored the first prayer at the temple. People from the neighbouring villages of Kerudavil, Valvettiturai, Kathirippai, regulary come to the temple. People from the opposite bank used to bring coconut and palmyrah leavse to thatch the temple roof. Now they still remeber their links with the temple and help it regulary. With time, buildings, ceremonies, and facilities, have improved as has the religious faith of the people. Many devotees, including Manipay's Sellamuthu Somasundram (who provided lighting and the bell tower) and N. Yogasigamani, have contributed to the growth to the temple and its surrounding facilities.

Travslate by Dr. M. Kumaradava



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සෙල්වා සන්නිතියේ ඉතිහාසය

වී තෙයිංවේදිර අයියර් විසිනි

ඊලාම් දේශයේ දේවාල අතරින් සෙල්වා සන්නිතියට විශේෂ තැනක් හිමි වේ. ඊට හේතුව එබඳු ආගමික සහ ඓතිහාසික සම්බන්ධතා ඇත්තේ වෙනත් දේවාල කීපයකට පමණක් වීමයි. සම්භාව්‍ය ආගමික කෘතියක් වන කන්නප්පුරානම්හි දැක්වෙන අන්දමට ස්කන්ධ සාමිවරයා තම පණිවුඩකරු ලෙස තිරුචෙන්තුරයෙන් මහේන්ද්‍රාපුරියට යන ලෙස වීරවකුට විධානය කළේය. වීරවකු එසේ යන අතරමග දී උතුරු දිග ශ්‍රී ලංකාවේ (දැනට තොන්ඩමන් ගඟ ලෙස හඳුන්වන) වල්ලි ගඟ ඉවුරේ පිහිටි කල්ලෝඩායි ගමෙයි අඩිය තැබීය. ගල මත පිහිටි ඔහුගේ පා සලකුණ දැන් එහි දක්නට ලැබේ. ඔහු ආපසු යන ගමනේ දී ද කල්ලෝඩායිහි නාවතී යාඥා පවත්වා ඇත. කල්ලෝඩායි කාන්න් නම එයින් ලැබුණි. එහි තැනූ දේවාලය සන්නිති දේවාලය ලෙස පසුව නම් කරන ලදී. මෙහි දී තවත් හාස්කමක් සිදු විය. දෙවියන්ගේ අඩවි යේ පදිංචිකරුවකු වූ අයිරවාසුට කතරගම වන පෙතේ අලියෙකු වන ලෙස ශාප කරන ලදී. අලියා වන පියසේ කුලප්පු වී දඟලන විට සිකන්දි සාමිවරයා ස්කන්ධ දෙවියන්ගේ පිහිට පැතිය. අගනස සාමි වෙත ගොස් උපදෙසක් ගන්නා ලෙස ඔහුට දන්වන ලදී. සිකන්දි කතරගමට ආපසු පැමිණි විට අලියා ඔහුට පහර දුනි. සිකන්දි බුලත් කොළයක අගිස්සෙන් අලියාගේ නලල ස්පර්ශ කොට ඔහුට දී තිබූ මන්ත්‍රය ජප කළ විට අලියා අයිරවාසු ලෙස මුල් ස්වභාවයට පත් විය. දෙවියන්ගේ පියසට නැවත යාමට ඉඩ දෙන ලෙස අයිරවාසු ඇයැදීය. වල්ලි ගඟ ඉවුරේ කල්ලෝඩායි දේවාලයට ගොස් යාඥා කරමින් ජීවිතයේ ඉතිරි කොටස ගෙවන ලෙස සිකන්දි ඔහුට දැන්විය. එසේ ක්‍රියා කළ ඔහු සමාති ලැබීය. ඔහු මිහිදන් කරන ලද්දේ දේවාලයේ ප්‍රචාරය ගස අසළ හෙයින් එම ස්ථානය ශුද්ධ බවට පත්විය. අද දින පවා එහි යාඥා කරන බැතිමතුන්ගේ පැතුම් ඉටුවේ. ඉන්පසු කාලයේදී වල්ලි ගඟ ඓතිහාසික වෙනස්වීම් වලට භාජනය විය. එය වල්ලි පෙරුවෙලි යනුවෙන්ද නැවත වළලායි පෙරුවෙලි යනුවෙන් ද වෙනස් විය. එහි දකුණට ඇති පාලම වල්ලායි පාලම නම් විය. 12වන සිය වසේදී ඉන්දීය සෙන්පතියෙකු වූ කරුණාකාර තොන්ඩාමන් වඩමාරච්චි කළපුවේ වතුර මුහුදට ගලා යාම පිණිස ඇලක් කැප්ප විය. එය තොන්ඩමන් ගඟ ලෙස ද



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අසල ප්‍රදේශය ද ඒ නමින් පතළ විය. දේවාලය නිසා ගම ද සුපතළ විය. මුහුදු වතුර ගලා ඒම නිසා කරනාවයි වැනි ප්‍රදේශ ලුණු තැන්පතු බවට පත්විය. ලුණු පිටරට යැවීමට පෙර වෙරලේ ගබඩා කර තැබූ හෙයින් ඒ ප්‍රදේශය උප්පුමාල් නම් විය. යටත් විජිත පාලන සමයේදී ඉඩම්වලට ඔප්ප(තෝම්බු) දෙන ලදී. දේවාලයේ හිමිකම් ද සටහන් කරන ලදී. දේවාලය පිළිබඳ මරුනාර් කතිර්කාමාර්ගේ අයිතිය ද විධිමත් කරන ලදී. දේවාලය පිළිබඳ ඔහුගේ අයිතිවාසිකම් දේවක්‍රියා සමග සම්බන්ධ වී ඇත. 19වන සිය වසේදී මරුනාර් කතිරකාමාර් පුවාරස ගස අබියස යාඥා කරමින් අසළ වැඩ කර ඇත. මුරුගා දේවියන් ඔහු ළඟට කොල්ලෙකු වෙසින් පැමිණ කල්ලෝඩියි හි යාඥා කරන ලෙස දන්වා ඇත. එයින් කම්පනයට පත් කතිර්කාමාර් තමා යාඥා ගැන හෝ ආගමික වතාවත් ගැන හෝ නොදන්නා බව පවසා ඇත. එහිදී කතිර්කාමාර් භාස්කමකින් කතරගමට ගෙන ගොස් කට වසාගෙන නිහඬව යාඥා කරන හැටි පෙන්වා දී ඇත.. දේවාලය පවත්වාගෙන යාමට උදව් දෙන බව මුරුගා දෙවියන් ඔහුට සහතික වී ඇත. අතරමගදී වීරවකු ගැනත් අසිරවාසු ගැනත් එම ස්ථානයට ඔවුන්ගේ සම්බන්ධය ගැනත් මුරුගා දෙවියන් ඔහුට පවසා ඇත. නුග පත්වල කිරිබත් පිළිගන්වන ලෙස ඔහුට දන්වා ඇත. පසුව මුරුගා සාමි කතරගම උත්සවය සඳහා කතරගම බලා යන විට අතරමග කෑමට උලුකම් පිට්ටු සාදන ලෙස ඔහුට දන්වා ඇත. ආපසු එන ගමනේ දී කසපැන් සහ බැදපු කොළ කඩල එහුට පිදීමට ද නියම විය. යාඥ සහ වතාවත් පිරීමෙන් කතිරකාමාර්ට මානසික සහනය අත්විය. ඔහුගෙන් පැවතෙන අයද නව වතාවක් එලෙසම ඉටු කරන්නට වූහ. ගමේ වින්නා ආන්ඩි අප්පන් නමැත්තා දේවාලයෙහි පළමු යාඥාව පැවැත්විය. කැරුඬුවිල් , වල්වැටිතුරේ, කදිරිප්පායි යන ගම්වල ජනයා නිතිපතා දේවාලයට පැමිණියහ. එහා ඉවුරේ වෙසෙන ජනයා දේවාලය සෙවිලි කිරීම සඳහා පොල් සහ තල්අතු ගෙන ආහ. දේවාලය සමග තම සබඳතා දැන් හොඳින් වටහාගෙන සිටින ඔවුහු නිතිපතා දේවාලයට උදව් කරති. කාලයාගේ ඇවෑමෙන් ගොඩනැගිලි, උත්සව සහ පහසුකම් මෙන්ම ජනයාගේ භක්තියද දියුණු වී ඇත. ආලෝකය සහ ශබ්ධ කුළුන සැපයූ මනිපායිහි සෙල්ලමුත්තු සෝමසුන්දරම්, එන්. යෝගසිගමනී වැනි බොහෝ බැතිමත්හු දේවාලය සහ ඒ අමට වියණවට දායක වහ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கான

# திருப்பள்ளியெழுச்சி

திருச்சிற்றம்பலம்

சீருறு நினதருள் செறியடி யவர்தஞ்
சிந்தையி னிலமில கினவவ ருளமா
மேருறு கிரியெழு சிதமென எல்லோன்
இந்திர திசைவரை யினிலெழு கின்றான்
பேருறும் அரிமுதல் அமரர்கள் பரவப்
பேசரு மறைமிகும் ஒலியொடு பரவ
நேருறு தொண்டைநன் நகருறு வளசந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 1

ஆண்டலை கூவின வள்ளிய புட்ட
மன்பொடு கூவின புள்ளொலி பரந்த
மாண்டகு சங்கமொ லித்தன வானின்
மருவிய தாரகை மறைந்தன கடன்மேல்
ஏண்டகு கதிரவன் தோன்றினன் அன்பர்க்
கெளிவரு மறுமுக விறையவ மிகவே
நீண்டிடு மரநிறை வனமுறு வளசந்
நிதிபரசே பள்ளியெழுந்தரு ளாயே. 2

தோத்திர மிசைத்திடு மடியவ ரொருபால்
சுற்றியஞ் சலிசெயு மடியவ ரொருபால்
காத்திடு னெவரு மடியவ ரொருபால்
கைகுவித் தேதொழு மடியவ ரொருபால்
பூத்திரள் சிந்திடு மடியவ ரொருபால்
பொற்புற வெங்காணு நிறையவந் தடுத்தார்
நேந்திர மணியென குருபர வளசந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 3

மணிமயி லதன்மிசை நீ யிருந்தாங்கு
மறிகடன் மிசையொடு கதிரவ னுதித்தான்
அணியுறு மரைமலர் நிவதரு ளடைந்த
வன்பர்த முகமென விகிசித மான
கணியுறு புனமதில் வருநற மாது
காதலோ டனைதரு வாகுமுன் நான்கா
நிணமுறு படைநிசி சா[illegible]தமை யடுசந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயனரி முதலிய வமரர்க ளறியா
வானந்த மெய்ப்பொரு ளேறின தடித்தொண்
டியன்முறை புரியடி யவர்தமக் கெளியாய்
இன்னமு தேகரும் பேமுடி மணியே
நயனமை திடைநின்று களிதரு தேனே
நாயக னேகுக னேயறு முகனே
நியமமோ டுறுபவர்க் கருடரு வளசந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 5

ஓதரு மொளிவிடு முனதயில் கண்ட
வுறுமயில் புரியும்வஞ் சனிபடை யொப்பக்
கோதறு கதிரரி யெழுவது கண்ட
கூரிரு ளழிந்தது குலவிய மதிய
மூதொளி மழுங்கிய துனதமர்க் கழிந்த
மொய்யறு மவுணர்த முகமென வறமார்
நீதரு மறிஞரும் வருதிரு வளசந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 6

திறற்புய ளாதிய வீரர்கள் சூழத்
திண்டிறல் கெழுமிய பூதர்கள் சூழப்
பிறப்படு முனிவரொ டமரர்கள் சூழப்
பேரயில் முதலிய படைதிறஞ் சூழ
வறற்படு சூழ்ச்சி மகள்குற மகளோ
டருடர வமரர்தரு வறுமுக வர்த்த
நிறக்கடம் பணிபுய நிறைதரு வளசந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 7

பச்சிலை யொடுமலர் பரிவொடு கொணர்ந்தார்
பாலுறு காவடி பலப்பல கொணர்ந்தார்
வச்சிர நவமணி மாலைகள் கொணர்ந்தார்
மாமணி செறிநன் மகுடங்கள் கொணர்ந்தார்
இச்சையொ டிருவிழி முதலிய கொணர்ந்தா
ரெண்ணிய வரம்பெற வீண்டின ரிங்கன்
நிச்சய முறுதவர் தொழுதிரு வளசந்த்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 8

ஐந்தொழில் நடம்புரி யையனு யுமையு
மன்பொடு தழுவுதற் சுகநினை வுற்றார்
சிந்துர வதனவைங் கரத்தலை வனுநற்
சிரமுகந் திடவிவரும் பின்னரி முதலாஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர வமரர்கள் பணிசெய வந்தாய்
தூயதன் மறைமுதற் கலையுணர் புலவ
நிந்தையி லவர்துதி புரிநிறை வளசந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 9

தென்மலை முனிவனுக்குக் கருளிய குருவே
தேவர்க ளிடர்களைந் திடவரு முருகே
அன்னையம் பிகைக்குமுன் னுலவிடு பாதா
வரன்செவி யினிற்பிர ணவமுரை நாதா
முன்னடு முடிவில தாகிய சோதீ
முத்தர்க டமதுள மேவிய வாதீ
நெல்மணி வயல்புடை சூழ்திரு வளசந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்.

## திருஊஞ்சல்

பொன்னுலக மன்னவர்கற்குப் பூங்கா விரியருளும்
முன்னவனே ஆனை முகத்தவனே - என்னுடைய
தீத் தொழிலகல நீக்கியே சிந்தைதனில்
உறைந்து காத்தருளல் உந்தன் கடன்.

பொன் பொருந்தும் தென்கதிரைப் பதிபோ லொன்றும்
புகழ் பொருந்தும் தொண்டர் வேலவன் பதிவாழ்
மின் பொருந்தும் செங்கதிரைக் கந்தர் தன்மேல்
விந்தை பெறும் அன்ன ஊஞ்சல் விரும்பிப்பாட
வன் பொருந்தும் கொங்கைமலை மங்கை பாகன் மைந்தனொடு
கந்த ணிந்து மகுடம் தாங்கும்
கொன் பொருந்தும் சிந்தூர மாமுகன் கல்லோடை
குணபதியாம் கண பதிதாழ் கும்பிட்டோமே. 01

திருமருவுபுணரி இருபுறமு மேவும் தெய்வசின்னச்
சந்நிதியில் சிறந்து மேவும்
உருமருவு ஓங்காரத்து முதல்வனாகும் உத்தமன்போல்
ஊஞ்சலிசை உவந்து பாட
மருமருவும் மலர்மாலை மதியமொடு வைத்த
சடை உத்தமனார் மகிழ்வினீன்ற
கருமருவு மும்மதத்து கும்பதம்ப கணபதியை
எஞ்ஞான்றும் கருது வோமே. 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதமுறும் ஓங்காரக் கோயில் மூட்டி
நம்புகை மேருவைப்போல் தம்பம் நாட்டி
சோதிநிறை பாதமதி வளையைச் சூட்டி
தூங்கு கதிர்தாங்கு கரவடத்தைப் பூட்டி
பூதலமாம் மாதரெனும் பொற்பலகை ஈட்டி
புற்ப சயனம் பரப்பி பூதராற்க
வேத விதிப்படி ஏறிஆடி ரூஞ்சல்
வேதநாயக முதல்வா ஆடீ ரூஞ்சல் 03

நகர உகரங்கள் இரு தூணதாக
நால்வேத ஓங்காரம் வளையதாக
பகர அகரம் புரிந்த கயிறதாக
பன்னரிய ரீங்காரம் பலகையாக
சிகாமொடு தகரமுறும் அடியார் வாழ்க
தெய்வசின்னச் சந்நிதியில் சிறந்துமேவி
அகர முதலானவரே ஆடீ ரூஞ்சல்
ஆறுமுக ஆண்டவரே ஆடீ ரூஞ்சல். 04

வட்டமலை எட்டுமிரு தம்பமாக
வன்னமுறும் ஆகாயம் வளையதாக
விட்டமுறும் உலகமது பலகையாக
வீரமணி வாசுகியே கயிறதாக
சிட்டர் இருபாங்கில் தொட்டே ஆட்ட
சின்னவன்னச் சந்நிதியில் சிறந்து மேவும்
அட்டதிக்கும் கொண்டாட ஆடீ ரூஞ்சல்
ஆறுமுக ஆண்டவரே ஆடீ ரூஞ்சல். 05

தேவர் முனிவோர்கள் வருடந் தொட்டே ஆட்ட
சித்தவித்தியா தரகள் சேர்ந்துபாட
பூமடந்தை நாமடந்தை முதலானோர் தேட
பொன்னுலகு மன்னனுடன் புகழுந்து கூட
தேன் மொழிசேர் இமயவரும் அன்பு கூர
சின்னஷண்ணச் சந்நிதியில் சிறந்துமேவி
கோமளஞ்சேர் ஆறுமுகா ஆடீ ரூஞ்சல்
குளக்கொடிக்கு நாயகரே ஆடீ ரூஞ்சல். 06

வாமமுறு வாரணத்தில் பிள்ளை மேவ
மற்றவலப் பக்கத்தில் வள்ளி மேவ
ஏமன்முதல் இந்திரனும் கவரி சாய்ப்ப
இமயவரும் கூடப்பமதை ஏந்தி நிற்பக்
கோமுறைசேர் இருஷிகளும் குடைக ளேந்த
குலவுசின்னச் சந்நிதியில் குழந்தையான
மேவிவளர் வேலவரே ஆடீ ரூஞ்சல்
வேதநாயக முதல்வா ஆடீ ரூஞ்சல். 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தாட முடியாட மாலை ஆட
முண்டகத்தோய் செய்யகருங் குண்டலங்களாட
மத்தாரும் மருவில்செறி ஓடை யாட
வளமை செறிவாகு வளையங்களாட
கர்த்தாவின் காற்சிலம்பு கலீரென் றாட
கருதுசின்னச் சந்நிதியில் கருணையான
வித்தார மோடிருந்து ஆடி ருஞ்சல்
வீரமணி வாசுகியே ஆடி ருஞ்சல். 08

கருணைசெறி ஆறுமுகா கார்த்தி கேயா
கங்கையருள் காங்கேயா கருணைநேயா
பொருனர் தொழும் மந்திரதந்திர சொந்தகந்த
புனிதவனை அனுதினமும் போற்றுவோர்கள்
வருணமுறு நான்கினுமே வார்த்தை யீந்து
வருணமுறு சின்னச்சந்நிதியில் வாழும்
அருண வடிவேற் கரத்தாய் ஆடி ருஞ்சல்
ஆறுமுக ஆண்டவரே ஆடி ருஞ்சல். 09

## வாழி

மருமேவு சிவபரனும் உமையும் வாழி
வயங்கு திருநீறு சிவமணியும் வாழி
உருமேவு அரசன் மனுநீதி வாழி
உலகமுயிர் பரவகல் லோடை வாழி
கருமேவு முகில் வாழி கடலும் வாழி
கற்றியா அடியேன் சொற்கவிதை
திருமேவு சேவலுடன் மயிலும் வாழி
சின்ன சந்நிதி முருகர் வாழிதானே. 10

## மங்களம்

மங்களம் ஜெய மங்களம் நித்திய சுப மங்களம்
ஆனைமுகவர்க்கு மங்களம் எங்கள் ஆறிரண்டு கையருக்கு மங்களம்
செங்கமல நாதருக்கு மங்களம் செல்வச் சந்நிதிவாழ் முருகருக்கு மங்களம்
வீராதி வீரருக்கு மங்களம் நல்லவெள்ளி மயில் வாகனருக்கு மங்களம்
சோதிவடி வேலருக்கு மங்களம் சிவசுப்பிர மணியருக்கு மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச் சந்நிதி அகவல்

சிந்தையி லெழுந்த செஞ்சுடர் வெள்ள
செங்க மலத்துள் செந்திப் பதியே
உந்தியி லுதித்த ஓங்காரத்துள்
அந்தமி லொத்த ஐங்கர முதல்வா
உகார உயிராய் ஓரைந் தெழுத்தாய்
சிகாரத்தி னுள்ளே செம்மை சிறந்தும்
அகாரத்தி னுள்ளே ஆட்டிய தாயும்
நகாரத்தி னின்ற நண்பா சரணம்
நாலிதழ் இருக்கும் நாதா சரணம்
ஆறிதழ் இருக்கும் ஆதீ சரணம்
பத்திதழ் இருக்கும் பதியே சரணம்
பன்னிரண்டு இதழில் பரமா சரணம்
பதினாறு இதழில் புருடா சரணம்
இரண்டாம் இதழில் இறைவா சரணம்
எல்லாம் தானாய் ஏகாந்தத்தில்
நில்லா நிலையில் நிறுத்தியே என்னை
ஒத்த இடத்தில் ஒருவரு மறியா
அந்த வெளியதனில் ஆக்குமந் தன்னில்
நித்திய மான நிலாவு மண்டபத்தில்
மூல நாடியின் மும்மண் டலத்தில்
மேலை வாசல் ஆலயந் தன்னில்
ஆயிரம் இதழ் அனந்த கோடி
ஆதித்தன் ஒளியும் அனந்தகோடி சந்திரனொளியும்
மனந்தனில் உதித்த மதிமுக மாறும்
கதுவிய கன்ன கவச குண்டலமும்
விண்களிற் றோன்றிய கண்க ளீராறும்
வேத வொளியில் அணிமுடி யாறும்
விந்து நாதமும் மேலாந் தரத்தில்
சோதி நீறும் சுந்தரத் தழகும்
செவ்விதழ் கனிவாய் செம்முகச் சிரிப்பும்
பங்கையை இதழ்சேர் பன்னிரு புயமும்
பன்மணி யணிந்த பதக்கமு மார்பும்
நன்மணி முத்தும் நவரத்தின மாலையும்
பொற்புரி நூலும் பொருந்திய அழகும்
விற்பொரு வேளை வென்றதோர் வீறும்
உந்திச் சுழியும் உரோமத் தொழுங்கும்
செந்தீயை ஒத்த செவ்வரிப் பட்டும்
சிறந்த மருங்கிற் சீரா வழங்கும்
பாதச் சிலம்பும் பன்மணித் தண்டையும்
ஓங்கார மென்னும் ஓமையி லேறி
பாங்கான கோழிக் கொடியொரு கையும்
அங்குசம் தன்னை அணிந்த கையொன்று
பாசந் தன்னைப் பகர்ந்த கையொன்றும்
வச்சிரம் தன்னை வகுத்த கையொன்றும்
கடகம் கவர்ந்த கை யொன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளியை மணந்து அணைத்த கையொன்றும்
தெய்வத யானையை சேர்த்த கையொன்றும்
நகார மொருகையும் தனு வொருகையும்
சங்கொரு கையும் சக்கர மொருகையும்
மின்னிய வயிறும் பன்னிரு கையும்
விண்ணும் மண்ணும் மேருவும் தானாய்
என் கண்ணுள் நிறைந்த கந்தா சரணம்
காலும் கனலும் புனலு மாகப்
பொருந்தி யிருந்த புதல்வா சரணம்
சாக்கிரம் சாக்கிரம் சாக்கிரம் தன்னில்
தாங்கி யிருந்த சண்முகா சரணம்
சொப்பணம் சுறாத்தி துரியம் துரியாதீதந்தனில்
விற்பொருளாகி விழித்தாய் சரணம்
திசையும் திக்கும் தேவரும் தானாய்
அசைவா யமர்ந்தாய் சரணம்
பசுவும் பாசமும் நேசமும் தானாய்
இதய மாகிய இறைவா சரணம்
ஊனாய் உயிராய் ஒன்றாய் எங்கும்
நீயாய் நானாய் நின்றாய் சரணம்
நின்சரணம் தன்னை நினைப்பவர் தங்கள்
நீண்ட பிறப்பைத் தவிர்ப்பாய் சரணம்
நிலவுலாவிய நீண்மணி மண்டபத்துள்
உலாவு கின்றதோர் ஒருவன் பெருமையை
அகில சோதியோ டானந்த மாகி
திலக மாமயில் தித்தியென் றாடும்
திருச்செங் கோட்டுறை செல்வமென் சிந்தையே.

## எச்சரிக்கை புலவர் ஆண்டியப்பர் சின்னப்பரியாரியார்

கருணாகரப் பொருளே கணபதியே எச்சரிக்கை
கதிராபுரி நகர்மேவிய கந்தா எச்சரிக்கை - அருள் கந்தா எச்சரிக்கை
கந்த செல்வநகர்மேவிய கருணா எச்சரிக்கை
வந்து துயர்நீக்கும் எங்கள் வணிகா எச்சரிக்கை - எங்கள் வணிகா எச்சரிக்கை
வணிகா செட்டிகுமரா கார்த்திகேகா எச்சரிக்கை
வருவார்பிணிநீக்கிய முருகா எச்சரிக்கை - அருள் முருகா எச்சரிக்கை
முருகா அரிமருகா ஆறுமுகனே எச்சரிக்கை
கருவானது தீர்க்கும் எங்கள் கந்தா எச்சரிக்கை - எங்கள் கந்தா எச்சரிக்கை
கந்தா கடம்பணிகா திருத்தணிகா சுப்பிரமணியா
எந்தாகிய பேரூர் வருகந்தா எச்சரிக்கை - எங்கள் கந்தா எச்சரிக்கை
கதிரமலைக்கரசே என்றும் கருணைக் கிருமைக்கடலே
அதிருப சிங்காரா ஆறுமுகனே எச்சரிக்கை - அருள்முருகா எச்சரிக்கை.

## பராக்கு

ஐந்துகரத் தந்திமுகா அம்பி பராக்கு
கந்தர்துணை வந்த ஒற்றைக் கொம்பா பராக்கு
கதிரமலை தனிலும் வந்த கந்தா பராக்கு
களகமணி குஞ்சரிதான் கணவா பராக்கு
போத வடிவாயமர்ந்த புலவா பராக்கு
புள்ளிமயில் ஏறிவரும் புனிதா பராக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தொண்டைமானாறு செல்வச் சந்நிதிப் பூசகர் பரம்பரையினரும்,*
*கல்விமானுமாகிய*
***திரு. ஆ. வேதநாயகம் அவர்கள் இயற்றியது***

# திருச் சந்நிதிப் பதிகம்

**வெண்பா**

சுந்தரச்சீரச் சந்நிதிவாழ் சோதி திருத்தாடுதித்தா
சுந்தரச்சூர் போக்கத் துணையாமே - சுந்தரநீ
தாதாவே ரம்பவெனச் சார்ந்தோர்க் குதவுதிருத்
தாதாவே ரம்புயப் பொற்றாள்.

**நூல்**

சீர்பூத்த தினகரப் பிரகாச மொருகோடி
செறிவுற்ற திருவதனமுஞ்
சித்திக்கு மன்பர்களை தீரவே யருளொழுகு
திருநயன மோரிரண்டு
மேர்பூத்த திருநீறிலங்கு திரு நெற்றியு
மிறையிடப் பாகமேவு
மிகருட் பாலுண்ட சின்னவா யுந்தன்ன
ரிளநகையு மயவரத
நேர்பூத்த விருகரமு மிருசெவியு முபயரவி
சேர் குண்டலங்களுஞ்சீர்
நின்றசெங் கமலமல ரொன்றுதிரு வடிகளோடு
சேர்நின்ற பாலவடிவாய்
தார்பூத்த பொற்சிலம் படியனேன் காணவே
சாமிவந் தருள்கசெல்வச்
சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜ
சண்முகக் குமரேசனே.

தஞ்சமுன் சரணார விந்தமே யன்றியித்
தரணிதனில் வேறில்லைக்காண்
சருவலோ கைக்குண வாரிநீ யென்றுனது
சந்நிதியை வந்தடைந்தே
னெஞ்சலில் லாதோர் கோடாநு கோடிபவ
மீட்டுமொரு மாபாவிநா
னென்றாலு மவையெல்லாம் போக்கியெனை ரட்சிப்ப
திறைவனின் கடனாகுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சிநேர் வஞ்சியுமை கொஞ்சுமுக மாறுடைய
கடவுளே யடலவுணராங்
களைகட் டறப்பயிர் தளைத்தோங்க வைத்தமுரு
காகருணை மழைமேகமே
சஞ்சலந் தீரவரு மன்பர் களிகூரவே
சாற்றுதுதி யோங்கு செல்வச்
சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜ
சண்முகக் குமரேசனே. 03

இராசாதி ராசனீ பிரகாச சோதிநீ
யேழைபங் காளனுந்நீ
யென்றுமொழி யாதவொரு பொருளுநீ யருளுநீ
யேற்பவர்க் கீபவனுநீ
சரசாலம் முதலூ ரெறும்பிறுதி யானவுயிர்
காத்தளித் திடுமன்னைநீ
கங்குல்பக வில்லாக பேரின்ப பூரணக்
காட்சிதரு மோட்சமுதனீ
தராதல மனைத்துநீ யேயெனப் பகர்வரருள்
சாதித்த மெஞ்ஞானிகள்
சற்றேனு மறிவிலா நாயகனே னுன்பெருமை
சாற்றவெளி தாகிவருமோ
சராசரப் பிரபஞ்ச மீடறே வானரு
டரித்தவ தரித்தசெல்வச்
சந்நிதி தலவாச சின்மயக் குருராஜ
சண்முகக் குகனேசனே. 04

சூரனொடு தாரங்கன் சிங்கனே யாதியச்
சொலொணா வலிபடைத்த
தொலைவிலா வசுரருக் கஞ்சினோ மையநின்
றுணையடிகள் சரணமென்றே
பாராவிண் ணாதனரி பங்கயன் முதலாய
பண்ணவர்கள் வந்துவேண்டப்
பண்டவுண ரைத்தொலைத் தமரருக் கருடந்த
பரதனே வரதகோவே
தீரகத் தில்லாத தீசனே னானாலும்
நினதடிமை யென்றுமிந்த
நேர்மை யொன்றைக் கொண்டிரங்கி யெனையாளுவாய்
நேசனே நித்தமுத்தித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரகத் துருவான வேலகத் தமலனே
சச்சிதானந்த செல்வச்
சந்நிதித் தலவாச சிக்மயக் குருராஜ
சண்முகக் குமரேசனே. 05

உலகத்தி லேழைகளை மிகவாட்டி யேயவர்க்
குற்றப்பொருள் கொள்ளைகொண்டே
யுற்றமத யானைபோல் முற்றகங் காரமா
யொன்றையுங் கருதிடாமற்
பலமற்ற விவர்துரும் பாயிரஞ் சேர்ந்துமெம்
பருவலிக் கீடாவரோ
பாருமிது வெனவேபி னாடுவோர் தம்மொடு
பரிகாச வார்த்தைபேச
நலமற்ற பாவிகளை யருளற்ற லொபிகளை
நாஸ்திகம் பேசுவோரை
நானணுகி டாமலுன் சீலமுறு முடியரொடு
நாடியே வாழவைப்பாய்
சலமுற்று மமிர்தெனப் பிணிவீட்டி யணிகாட்டு
தவளத் தடாகமருவுஞ்
சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜ
சண்முகக் குமரேசனே. 06

பாம்பின் வாய்ப்பட்டதொரு தேரையைப் போலவும்
பாய்புலியின் வாய்ப்பட்டதோர்
பலமிலா மானைதைப் போலவு மியானேழை
யையுளூற் றயருநிலையை
யோம்பியருள் பொழிகின்ற வீராறு கண்கொண்ட
வுயர்சோதியான குமரா
வுணரா திருத்தலென் னோதெய்வ மேதுன்
பொழிந்தமரர் யாரும்வாழ
வாம்பிரப் பேர்மரம தாகியயர் சூர்முதலை
யட்டவடி வேன்முருகனே
யம்புவியில் மெய்யன்பர் சிந்தைக .ரி லோங்கவே
யாதியுமை யாதிபருள்கூர்
சாம்பசிவ மூர்த்திதர வந்ததிரு மைந்தனே
சார்ந்தவினை போக்குசெல்வச்
சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜ
சண்முகக் குமரேசனே. 07


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுள்வே தியரெலாங் கைவிட்டு மாறாத
வருநோய்க ளின்னதருளா
மருமருந் தாற்போக்கி யானந்த முறுகின்ற
வன்பர்கூறுங் களவுபொய்
யோயுநா ளில்லாத வஞ்சகக் கோண்மூட்
டுலுத்தர்தம் பொய்வழக்கி
னுக்ரமிகு தண்டனைச் சிறைமீளு மன்பரிவ
ரொருகோடி பேர்களுன்னை
வேயுள்வரு முத்தேயிவ் வுலகுக்கு வித்தேயெம்
வினைநீக்கி யாளவந்த
விமலவென் றிசைபாடி யுருகவே யானொருவன்
வேதனைப் படனீதியோ
தாயுமாய்த் தந்தையா யாவுமா வேகமாய்ச்
சற்குருவுமான செல்வச்
சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜ
சண்முகக் குமரேசனே. 08

ஐயகோ கானலைச் சலமென்று நம்பியே
யாரணிய மலைபுமான்போ
லடியனே னிவ்வுலக மாயை் லகப்பட்டீஇ
யஞ்சான வஞ்சருறையும்
பொய்யான வித்தேக மெய்யென்று நம்பியே
பொருட்படுத் தாதுனுபயப்
பொன்னடித் தாமரையி னன்நேச மாகமெய்ப்
போதமென் றோவருளுவாய்
மெய்யர்க்கு மெய்யானாய் மேதினி யெலாமாகி
மேலிடம் தாகியென்று
மேவுற்ற சோதியா யாதியாய் நீதியாய்
விண்ணவர்கள் போற்றுகின்ற
தையலுமை யான்பெற்ற செல்வனே செல்வமுறு
தண்டலைகள் சூழ்ந்திலங்குஞ்
சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜ
சண்முகக் குமரேசனே. 09

மாடுண்டு கன்றுண்டு மக்களுண் டழகான
மாடமா ளிகைகளுண்டு
மதியுண்டு குறையாத நிதியுண்டு சொகுசுண்டு
மாளாத சேனையுண்டு
நாடுண்டு நகருண் டெனக்கருதி வாழ்வுற்ற
நவகோடி முடிமன்னர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமனார்த முலகேற வுங்கண்டு மிவ்வுலக
நாட்டத்தி னோக்கமுற்றே
யாடுண்டு பெரியார்தம் வலியரென் றுலகோரை
யறைகூவு முறைகேடர்தம்
மறியாமை யாம்போயி தென்னவழி யாததோ
வயின்ஞான வேலேந்தியே
தாடுண்ட மாயவுணர் கோடுண்ட மாய்விழாச்
சமராடு குமரச் செல்வச்
சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜ
சண்முகக் குமரேசனே. 10

கற்றுமறியேன் பெருமை கேட்டுமறி யேன்சென்று
காதலுட னடியார்தம்மைக்
கண்டுமறியேன் றொண்டு செய்துமறி யேனொன்று
காசினியி லிட்டுமறியேன்
பற்றுமொழி யில்லாத பாவியே னினதருட்
பாங்குசெறி சந்நிதியிலாம்
பண்புவர வந்தடைந் தேனைய னேனையேனைப்
பாதுகாத் தருள்புரிவாய்
கற்றுபர மானந்த சோதிமழை மேகமே
தொல்வினை மாற்றுதெய்வச்
சுத்தமது ரப்பிரச மொத்தமல முத்தருரை
சொற்றதிரு மாமருந்தே
சற்றொழிவி லாதகிரு பைப்பெரிய வெள்ளமே
சந்தத முயர்ந்த செல்வச்
சந்நிதித தலவாச சின்மயக் குருராஜ
சண்முகக் குமரேசனே. 11

காலாயு தத்துவச நாதாவொ ராதரவு
காணேன் கடற்புவியிலே
கருதுதுணை தந்துநீ கடுநோ யடுக்கிலொரு
கைமருந் தாகிநமனென்
பாலாயு நம்விடுங் காலதி நேர்நின்று
பாதுகாத் தருள்புரியவும்
பண்புதரு திருநாம மன்பினா லோதியே
பாடிக் கசிந்துருகவும்
வேலாயு தாதிரு வுளம்பெற்ற வேணு மருள்
வெள்ளமே வெள்ளவமுதே
விளையாடு மயிலேறு ஜெகதீச னேயமரர்
வேண்டுகார்த் திகைமாதரார்
தாலாட்டு கந்தசர வணபவா னந்தனே
தவராசர் போற்றுசெல்வச்
சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜ
சண்முகக் குமரேசனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகப்பெருமான் அந்தாதி

## நூன் முகம்

கந்தவேள் உறையும் தொல்பதிகளுள் தொண்டைமானாறு செல்வச் சந்நிதியும் சிறப்புடைத்து.

இப்பக்தியுறை கந்தவேளைப் பாவலர்கள் பள்ளியெழுச்சி, புராணம், ஊஞ்சல் பதிகம் போன்ற பல்வேறு பிரபந்தங்கள் பாடி ஏத்தியுள்ளனர்.

அந்தமிலா எம்பெருமானை நாமும் அந்தாதி, கிளித்தூது இவை பாடி ஏத்தி நின்றோம். முருக பக்தர்கள் இந்நுல்களின் பொருளை உணர்ந்து, செல்வச் சந்நிதி முருகனின் அருட்பேறு பெற்று உய்வார்களாக.

சந்தனா - நல்லலிங்கம்

## *விநாயகர் காப்பு*

நற்குஞ்சரக் கன்றாய் நல்கும் கலைஞானம்
எற்கு உடனிருந்து உய்த்துண - நொற்புடைய
ஆறுமகன் சந்நிதிவேள் அந்தாதி பாடிடவே
கூறுபுகழ் வாரணமே காப்பு.

## *வரலாறு*

கந்தவேள் உதித்தவாறும் கதிகொள்ள அமரர் வாழ்வும்
இந்திரன் முதலாந்தேவர் இறைமுறை கொண்டவாறும்
தந்திரங் கொண்டசூரைத் தமியனாய் வென்றவாறும்
முந்திய கதிரை வெப்பில் முறையுடன் நின்றவாறும்.

கந்தனை நினைத்த சீரார் கதிர்காமர் வழிபாடற்ற
வந்துமே சந்நிதியில் விருப்புடன் அமர்ந்தவாறு
சிந்தனை செய்து நாமே சிறப்புடன் விளம்பலுற்றோம்
வந்தனை செய்வார் யார்க்கும் வாராது கேடுதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்

போற்றிடுந் தூயநற் சோதியாய் நின்ற பெம்மான்
நோற்றிடும் உமையாளர் பாகன் நிகரில்லா வெற்றிதன்னில்
சாற்றாறும் சுடர்களாறும் தோன்றிடத் திகைத்ததேவர்
காற்றாறு சுடர்கள் தம்மை உய்த்ததே சரவணத்தே

தேசுடர் சரவணத்தின் பாகடைப் பரப்பின் ஓர்பால்
காசறு கமலத்தோட்டுப் பாயலில் மழலை யாறு
தேசுடைச் சுடர்கள் தேங்கத் தோன்றிற்றே தோன்றலோடும்
ஈசனும் உவக்க அம்மை எடுத்தனன் ஆறும் ஒன்றாய்

ஒன்றாக ஆக்கங்கொண்டு முகங்களோர் ஆறுகொண்ட
சண்முகன் தோற்றங்கொண்டு சாம்பவி மகிழ்ச்சிசெய்த
பண்புறப் பிரணவத்தைப் பரமனுக் குரைத்த வேளை
அண்மியே இந்திரதேவர் அருள்பெறத் தொழுதுநின்றார்.

அருளுடைத் தோற்றங்கண்டு அரனுரை செய்யலுற்றான்
புரமுடை மகேந்திரத்தைப் புரந்திடு சூரன் பெற்ற
வரங்கெடுத் தழித்துமேய மமரரைக் காக்கவேண்டும்
கரந்தன்னில் அயில்வேல் கொண்டே அடுசமர் புரிகவென்ன

சமர்த்துடைச் சூரன்றன்னைக் கதிபெற மயிலதாக்கி
அமரர்கோன் மகளாந் தேவ குஞ்சரி தனை மணந்தார்
அரியவர் குழந்தையாகி மானிற வள்ளி மங்கை
கரியுடைக் கதிரை யோங்கல் வளர்வதைநா ரதருங் கூற

கதிரையம்பதியை யண்மிக் கண்டனர் பரண்மேல் வள்ளி
கதிதெரளி கண்கள் காலக் கதிர்த்தினை கள்ளி உண்ணா
கரத்தினிற் கவணைப் பற்றிக் கடிந்துமே ஓச்சி நிற்கும்
கனவடிவதனைக் கண்டே கதிர்வளையுடன் எழுந்தார்.

எழுதொணா எழில்கொள் வள்ளி எயிற்குலத் தரசியாளை
பழுதிலா வெவ்வேள் பாணம் வருந்திட விரைவாய்ச் சென்று
தழுவமுட உபயங்கொண்டு தமையனை நினைத்து நின்று
தொழுதிட அவளைக் கொண்டே உறைந்தனர் கதிரை வெற்பில்

உறைவிடந் தன்னில் வேலவர் உவந்திடக் கே யில் கொண்டார்
கறைமிடற் றண்ணல் வாழ்த்தத் தேவகுஞ்சரியும் நண்ண
துறையுடைக் கங்கை பாய ஒளியுடை மணிகள் சிந்தும்
நிறையுடைக் கதிர்காமத்தில் நித்தமும் வைகலானார்.

நிறைதிருக் கதிர்காமரர்க்குக் கந்தவேள் தோன்றிநின்று
குறைவறப் பூசைதன்னைப் புரியென வேலுந் தந்து
மறைதிரைக் கதிர்காமத்தின் மருவிய கோலங்காட்டி
பொறையுடன் வாயுங்கட்டி வழிபடு மாறு செய்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுபடு சூரன் கிளைமதியுடன் வென்ற பின்னர்
மாண்புறு வீரவாகு தேவர் தாம் வேலையூன்றி
மாசறு பூசை செய்த மாட்சிமை கொண்ட நல்ல
மாபெரும் புண்ணிய பூமி மருவு தொண்டைமானாறே

மருவிடு சீடனாக வியாழனாற் சாபங் கொண்ட
திருவரு ஐராவாசு கந்தர்வன் களிற தாகி
உருமிடி முழக்கியேதான் உலவிடக் கதிரைவெற்பில்
வருமுனி சிகண்டியாரும் வருமிடர் தீர்க்கவெண்ணி

வருகரி மதமடக்க வகையதாய் வெள்ளிலையை
திருவுடைச் சடாட்சரத்தைச் செபித்துமே ஏவி நிற்க
பருவுடல் வேழந்தன்னை வேலதாய் வெள்ளிலையுந்தாக்க
ஒரு தனி மனிதனானன் ஓங்கிய சாபம் நீக்கி.

மனிதனாம் ஐராவாசு சாயுச்சிய பதத்தை நாடி
பனிபடு சோலை சூழ்ந்த கதிர்காமக் கந்த வேளை
கனிவுடன் வேண்டி நிற்கக் கட்டளை பிறந்த தன்றே
தனிச்சிப் புடையவல்லி நதிக்கரை சேர்கவென்றே

சேர்ந்தனன் சிறப்புமிக்க செல்வச் சந்நிதி பதியை
சேர்ந்தனன் உயர்ந்தபூசை உஞற்றினான் உய்தியெய்த
ஓர்ந்தனன் உயர்வாம் வீடு அடைந்திடத்திடமே கொண்டு
சேர்ந்தனன் சேயோன் பாதம் சாயுச்சிய முத்தியாலே

முத்தொடு சங்குந் தேக்கும் முழங்கிடு கடலலைகள்
நத்தியே சேர்க்குந் தூய தொண்டை மானாற்றில் பாங்கர்
பத்தரைப் பணியச் செய்யும் பாங்குடை பரமன் சேயும்
எத்திசை அடியார் போற்றத் தப்பிலா விழாவுங் கொண்டார்

தப்பிடா தேற்றி வங்கம் வழங்கிடுந் திசைகடோறும்
உப்பொடு சங்கத் தேக்கு உரிய நற்பொருள் யாவும்
செப்பிட அருமைத்தான வணிகத்தின் களனாய்க் காணும்
தப்பிதழ் வள்ளி பாகன்றாய் மறைசாலும் நாடு

சாலி நெல்விளைக்கும் மாதர் சொரிந்திடுமரிசி கொண்டு
ஆலி லையதனிற் சாதம் அமைவுறப் படைத்து வெள்ளி
வேலினைப் பூசகர்கள் விருப்புடன் பூசித் தென்றும்
மாலினல் மருகனார்க்கு ஆவணி விழாவுங் கொண்டவர்.

ஆவணித் திங்க டன்னில் அடியவர் கூடும் நல்ல
அமாவாசை நாள தனில் அமைவுடன் கொடியுமேற்றி
தேசமே புகழும் செவ்வேள் சந்நிதி யமர்ந்த செல்வன்
தேசுடைப் பௌர்ணமியிற் நேர்ந்துமே தீர்த்தங்காண்பார்

தீர்த்திடு நேர்த்திக்கா தூக்கு நற் காவடிகள்
ஆர்த்திடு தாளத்தோடு ஆடு நற்காவடிகள்
பார்த்திடு பாற்செம்போடு பாட்டுடைக் காவடிகள்
சார்த்திடு தொடையலோடு ஆடுமே வேல்களோடு

வேலாட வேலினிரு மருங்கு தோறும் வேய்த்தோளாட
சேவலாட சீர்மதிய முகங்களாடச் செத்திருவுமாட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலாட மங்கை சிவகாமியுடன் முக்கண்ணாட
தாலாடு மடியரெல்லாம் கற்பூர வொளியேற்றி வாழ்த்தியாடும்

கற்பூர வொளியை மாதர் சிகைதனிற் சட்டி கால
பொற்புறு பூவைமார்கள் அடியழித் தழுது போற்ற
மற்பொரு புயவீரர்கள் அங்கத்தாற் பிரதட்சணம் செய்ய
சொற்கொடு துதிகள்பாடி ஏத்துமே அடியார் வெள்ளம்

வெள்ளமாய் மக்களீண்டி வெள்ளிவேல் அருளைக் கொள்ள
பள்ளமாய்ச் சந்நிதியிற் பரவுவார் பாவநோய் தீர
கள்ளமாய்க் குறவர் பெண்ணைக் காதலாற் கொண்டவேலர்
உள்ளமாய் அருளுங் கொண்டு உலவுவார் கடைக்கணித்தே.

தேனோடு நெய்யும் பாலும் தெவிட்டாக்கருப்பஞ் சாறும்
தேங்கதலியும் பலாவும் தேமாங்கனியும் கொண்டு
மால்மகள் வள்ளி மங்கை உடனுறை செவ்வேளுக்கு
நாக்கொடு நவிலொணாது நல்லபிடேகம்

மற்றொணா நோய்களென்று வந்திடுமடி யவர்கள்
சாற்றுவர் துதிகள் சொல்லிச் சார்த்துவர் விபூதிதன்னை
மாற்றிடு வலிமைகொண்ட மருந்தெனும் பிரசாதங்கொள்வர்
நோற்றிடு மடியார் நோயும் நீங்குமே வறுமை தீரும்

வறுமையால் வாடுவோர்க்கும் வருத்தத்தால் வாடுவோர்க்கும்
சிறுமையால் வாடுவோர்க்கும் சீரின்றி வாடுவோர்க்கும்
அறும் அறும் வினைகளென்றே அண்டிடும் அடியார் யார்க்கும்
பொறுமையாய் பொருவேல் கொண்டார் பெருவினை அரியநம்பி

பிரபு சோல்பரியார் மைந்தர் சேர்மணி கௌரிபாலர்
பிரமைகொள் வேற்பரிசை விளங்கிட மடத்தை நாடி
பிரமைகள் போக்கினாரே பிரணவப் பொருளின் மாண்பால்
பிரமிக்க அன்ன தானம் பெருமையாய் பெருக்கலானார்

பெருகிடு பக்தியாலே பிதற்றுவார் நெஞ்சிலுள்ளான்
உருகிடக் கந்தா வென்று உளுற்றுவார் நாவிலுள்ளான்
அருளுக அடியெற் கென்று அரற்றுவார் அறிவிலுள்ளான்
செருவினில் வென்ற வேலான் செம்மனத்தார் கணுள்ளான்

உள்ளுநாற் றறுவோர் ஞானச் சித்தர்கள் யோகிகள்
கள்ளுடைக் கடப்ப மார்பன் கழலினை இறைஞ்சிநிற்பர்
உள்ளத்தை வெறோராக உயர்வுறு முனிவர் தாமும்
வெள்ளிவேற் கையன்றன் பால் வீட்டின்பம் பெறவே நச்சி

சித்திரத் தேருமற்று சிறந்த சல் மணியுமற்று
பத்திரமாகப் பன்னாள் பதியினில் உறைத்த வேலார்
முத்துடைமுன்னைத் தேரில் முழுமகிழ்வுடனே ஏறி
பத்துடை அடியார் சூழப் பாங்குடன் பவனி செல்வார்

செல்வச் சந்நிதியுறையும் சிறந்திடும் செந்தில் வேலன்
வல்ல வினைகளோடு வழிவழி வினைகள் தீர்க்கும்
பொல்லா வினைகள் தம்மைப் போக்கியே பொலியச் செய்யும்
எல்லையில் வீடு நல்கும் எம்பிரான் பாதம் போற்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரவாகுத் தேவரின் புனித பாதச்சுவடு பாதுகாக்கப்படுகின்றது



பாதச்சுவட்டை தரிசிக்க அமைக்கப்பட்ட பாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முதல் முதல் பூங்காவனம்



திருச்செந்தூரில் புனித நீராடல்



பழம் பெரும் பூசகர் திரு.சி.தர்மரத்தின ஐயர்
திரு. செ. விசாகரத்தினஐயர் ஆகியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone: 021-222 2235

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone: 021-222 2233, 021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.


මගේ අංකය / எனது எண் / My No.: Message from GA

ඔබේ අංකය / உமது எண் / Your No.:

දිනය / திகதி / Date: 21.01.2013

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

இந்து சமயத்தைத் தாங்கி நிற்கும் தூண்களில் ஒன்றுதான் புனிதம்மிக்க ஆலயங்கள். இந்த ஆலயங்கள் எண்ணற்ற உள்ளங்களுக்குப் பக்தியையும், தூய்மையையும் வழங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த வகையில் ஒரு ஆலயத்திற்கு அணிகலனாய் அமையும் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முச்சிறப்புக்களும் அமையப்பெற்ற முருகன் ஆலயங்களில் ஒன்றாகவும், வரலாற்றுப் பெருமைகளுடனும் அமைந்துள்ளது ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம்.

இவ் ஆலயம் சைவமக்கள் மட்டுமன்றி ஏனைய மத மக்களும் வழிபடும் பக்தித் தலமாக அமைந்து, நாட்டின் பல பாகங்களிலிருந்தும் தன்னைநாடி வரும் அடியார்க்கெல்லாம் அருளோடு அன்னம்பாலித்து அன்னதானக் கந்தனாய்ப் போற்றப்பட்டும், ஆதரவற்றோர்க்கும், முதியோர்க்கும் தன் மடங்களில் ஆதரவளித்து வருவதும், ஆலயச் சூழலில் வாழும் மக்களுக்கு வைத்திய சேவையை வழங்கி வருவதும் இதன் தனித்துவமான சிறப்புக்களாகும்.

இத்தகைய பெருமைகளைத் தன்னகத்தே கொண்டு வடமராட்சியில் அருள்பாலித்துவரும் ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தின் வரலாற்றையும், அற்புதங்களையும் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் உகந்ததொரு ஆவணப்படுத்தலாய் இந்நூல் அமையவும், எல்லாம்வல்ல முருகப் பெருமானின் அருள் எல்லோருக்கும் கிட்டவும் எனது மனமுவந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுந்தரம் அருமைநாயகம்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,
யாழ் மாவட்டம்.

**சுந்தரம் அருமைநாயகம்**
**அரசாங்க அதிபர் /**
**மாவட்டச் செயலாளர்**
**யாழ்ப்பாண மாவட்டம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பாரா இன்னல்

நல்லருளுடன் சீா சிறப்புப் பெற்ற செல்வச்சந்நிதி ஆலயத்தில் சைவமக்கள் எவருமே சிந்தித்துப் பாரா வகையில் ஏற்பட்ட இன்னல் என்றென்றும் எளிதில் ஜீரணிக்க முடியாதுள்ளது. வடக்கு கிழக்கு வாழ் சைவமக்களுக்கு ஈடேற்றமான அனேக புனித ஆலயங்கள் பலவும் அண்மைக்கால வன்முறைகளால் பாரிய சேதமானதும் பூசை வழிபாடுகளின்றிப் பூட்டப்பட்டதும் பெரும் வேதனை பொதுவாக இப்பகுதியில் ஆனம ஈடேற்ற வழிபாட்டிற்குரிய அனைத்து மத ஆலயங்களும் பெரும் பாதிப்புக்களுக்காகி விட்டது. இப்பகுதிக்கேற்பட்ட இயற்கை நியதி என்ற சிறு எண்ணமும் எமது அணைவரது நெஞ்சிலும் ஆறுதலாக அமைகின்றது.

இவ்வாலயத்திற்கு ஏற்பட்ட துரதிஸ்ரநிலை 11-08-1984ல் ஆரம்பமானது. வழமைபோல் வருடா வருடம் எம்பெருமானைக் கதிர்காமத்துக்கு வழியனுப்பி அங்கு மகோற்சவம் முடிவடைந்து தீர்த்தமாடியபின் இங்கு வருகை தந்து வீதியுலா வந்தவேளை பீரங்கித் தாக்குதல் நிகழ்ந்தது. எனினும் சேதமெதுவும் ஏற்படவில்லை. அதே வருடம் திருக்கார்த்திகை தினத்தன்று பூசகர்களின் இளம் வாலிபர்கள் கைது செய்யப்பட்டு அழைத்துச் சென்று மறுநாள் விடுதலையானார்கள். அதனைத் தொடர்ந்து 14-01-1985 தைப்பொங்கல் தினத்தன்று ஆற்றங்கரையின் மேற்குப் புறத்தே இராணுவம் முகாமிட்டது. அன்று முதல் ஆலயத்திற்கு பொலிவு குன்றி அடியார்கள் மனதில் அச்சம் நிலவிப் பூசை வழிபாடுகளில் பதட்டம் நிலவியது. எனினும் அவ்வருடம் மகோற்சவம் ஒழுங்காக நடைபெற்றது. வருடப்பிற்பகுதியில் பதட்டங்கள் அதிகரித்தது. சில வேளைகளில் பூசைகள் ஒரு பூசையாகவும் ஆலயச் செயற்பாடுகள் இருந்தன. தொடர் சம்பவங்களினால் 21-03-1986ன் பின் பூசையேதுவுமின்றி எவரும் ஆலயச் சுற்றாடலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. 08-04-1986ல் பெரிய கண்டாமணி சேதமாகி உடைந்து சிதறியது. 21-04-1986ல் ஆலயச்சித்திரத்தேர் சுற்றாடல் மடங்கள், கடைகள் பாரிய சேதமடைந்தன. பூசகர்கள் யாவரும் இல்லங்களில் இருந்து வெளியேறி அயற் கிராமங்களில் அகதிகளாயினர். 23-04-1986ல் அரச அதிபர் பிரிகேடியர் ஆலய உரிமையாளர்கள் ஆலயத்தைப் பார்வையிட்டு வேதனையடைந்தனர். எனினும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை ஆலயம் பாலைவனமாகியது. கொழும்பில் திரு. நல்லலிங்கம் ஐயர் அவர்களும் இங்கு ஏனைய ஆலய உரிமையாளர்களும் பல முயற்சிகள் செய்தும் பலன் ஏதும் கிடைக்க வில்லை.

01-10-1986ல் ஆலய உரிமையாளர்கள் ஜனாதிபதிக்கு ஆலயத்தில் மீண்டும் பூசை வழிபாடுகள் ஆரம்பிக்க ஆவன செய்யுமாறு மகஜர் அனுப்பியும் பதில் ஏதும் கிடைக்கவில்லை. 11-10-1986ல் ஆலயத்திலும் தொண்டைமானாறு சந்திவரையிலும் இராணுவமுகாம் ஏற்பட்டது. இதனால் ஊர் மக்களும் வெளியேறினர். வருடபிற் பகுதியில் ஆலய உரிமையாளர்கள் கொழும்பில் ஜனாதிபதி அவர்களைச் சந்திக்க ஏற்பாடான நிகழ்வு கைகூடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26-05-1987 வடமராட்சி தாக்குதல்கள் ஆரம்பமாகி ஓரளவு ஓய்ந்தபின் ஆலய உரிமையாளர்கள் மந்திகையில் பிரிகேடியரைச் சந்தித்து உரையாடினர். ஆனாலும் மீண்டும் வன்முறை ஆரம்பித்தது. மீண்டும் ஓய்ந்தவேளை 27-07-1987ல் பிரிகேடியர் ரூபசிங்க அவர்கள் முயற்சியால் ஒரு சில பூசகர்கள் ஆலயத்தைப் பார்க்க அனுமதிக்கப்பட்டது. ஆலயத்தையும் சுற்றாடலையும் பார்த்ததும் பெரும் வேதனை உண்டானது. 29-07-1987ல் இலங்கை இந்திய சமாதானம் ஏற்பட்டு ஆலய உரிமை யாளர்களும், ஊர்மக்களும் மேற்கொண்ட விடாமுயற்சியினால் 07-08-1987ல் இராணுவ முகாம் அகற்றப்பட்டு ஆலயப்பகுதிக்கும், ஊருக்கும் செல்ல முடிந்தது. எனினும் 14-08-1987ன் பின்னரே சொந்த இடங்களில் தங்க முடிந்தது. இதன் பின்னர் இந்திய இராணுவத்தினரும் பரவலாக வருகை தந்தனர். 24-08-1987ல் ஆலயப் புனருத்தாரனப் பணிகள் ஆரம்பித்தது. சில நாட்களில் மீண்டும் வன்முறைகள் ஆரம்பித்தது. பணிகள் தொடர முடியாது போய்விட்டது. ஆலய உரிமையாளர்கள் பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. வை. வேலும்மயிலும், பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் ஆகியோருடன் ஆலோசனைகள் செய்து மீண்டும் மகஜர்களை அனுப்பினர். எனினும் பலன் கிடைக்காது போகவே வருட பிற்பகுதியில் ஆலய உரிமையாளர்கள் கொழும்பு சென்றும் நிவாரண உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை. 14-011988ல் இந்திய உயர் ஸ்தானிகர் திரு டிக்ஸிற் அவர்களிடமும் மகஜர் கையளிக்கப்பட்டது.

உதவிகள் கிடைக்காமையால் ஆலய உரிமையாளர்கள் ஒன்று கூடி பணிகளை தெல்லிப்பழை திரு. இரத்தினம் என்ஜியரிடம் உதவி கோரி அவரிடம் பொறுப்புகளை ஒப்படைத்தது. அவரும் சிறு முற்பணத்துடன் பணிகளை 05-02-1988 தைப்பூச தினத்தில் ஆரம்பித்து தொடர்ந்து செயற்படுத்தி விரைவாகப் பூர்த்தியாக்கினார். அத்துடன் இந்திய ஸ்தானிகராலய முயற்சியால் இந்திய இராணுவ புனர்நிர்மாணப் பிரிவினரும் உதவினர். அடியார்களும் ஈடுபாடு கொண்ட தால் வேலைகள் முற்றுப் பெற்று 20-03-1988ல் மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதனால் இவ்வாலயத்திற்கு இரு வருடங்களாக பீடித்த பேரிருள் நீங்கி மீண்டும் அருள் ஒளி பிரகாசிக்கத் தொடங்கி வழமைப் போல் பூசை வழிபாடுகளும் வழமையாயின.

## மகா கும்பாபிஷேகம்

1986ல் ஏற்பட்ட எதிர்பாரா இன்னல்களால ஆலயம் சேதமாகியதுடன் பூசைகளின்றிப் பூட்டப்பட்டு பூசகர்களும் வெளியேறினர். கால மாற்றத்தினால் ஆலய உரிமையாளர்கள் பலரும் பகீரதப் பிரத்தன முயற்சிகளை மேற்கொண்ட தால் புனருத்தாரணப் பணிகள் ஆரம்பித்து அடியார்களும் அதிக ஈடுபாடு கொண்ட தால் 20-03-1988ல் மகா கும்பாபிஷேகம் நடைபெற முடிந்தது. இக்கும்பாபிஷேகத் தின் போது புனருத்தாரண பணிகளின் போதும் பேருதவிகள் புரிந்த திரு. முருகேசு சாமியார் அவர்களின் முயற்சிகள் விசேடமானவை அவரும் அவரது அடியார்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க ஆர்வத்துடன் பங்கு கொண்டனர். இதனால் பெருமானும் திரு. முருகேசு சாமியார் அவர்கட்கு நல்லருட் பிரவாகங்களைப் பொழிந்து அவரும் இத்தலத்தி லேயே இறைபதம் எய்தினார். வன்முறையினால் பாதிப்புற்ற ஆலயத்தில் பூசையின் றிப் பூட்டப்பட்டதால் மிக்க வைராக்கியம் கொண்டு பக்தியுடன் செயற்பட்டதுடன் தம் அடியார்களையும் ஈடுபடுத்தியதுடன் கும்பாபிஷேகத்தன்று ஏற்பட்ட செலவினங் களையும் ஏற்று ஆலய உடமைகளையும் அன்பளிப்புச் செய்தார். அது மாத்திர மன்றி இக் கும்பாபிஷேகதினத்தை வருடாவருடம் தொடர்ந்து சிறப்பாக நடாத்தவும் ஏற்பாடாக்கியுள்ளார்.

20-03-1988 பங்குனித்திங்கள் பூர்வபக்க அச்சுவினித் தினத்தன்று அதிகாலை யில் பெருமான் ஆலயச் சுற்றாடல் மங்களகரமாகக் காட்சியளித்தது. வருகை தந்த அடியார்கள் சுற்றாடலைச் சுத்தம் செய்ததுடன் தாமும் மங்களகரமாக வருகை தந்தனர். கும்பாபிஷேகத்திற்குரிய அபிஷேக திரவியங்கள் மற்றும் பொருட் கள் ஆலய உடமைகளும் அடியார் மடத்திலிருந்து திரு. முருகேசு சாமியாரும் அவரது அடியார்களும் திரு. வெங்கடாசலம் ஆசிரியர் அவர்களும் மேள தாளத் துடனும் பக்திப் பஜனைப் பாடல்களுடனும் எடுத்து ஆலயத்தை வலம் வந்து பெருமான் ஆலயத்திற்குக் கொண்டுவந்தனர். முருகப்பெருமானின் வாயிலில் பூரண புண்ணியானக்கும்பத்திற்கு பூசை வழிபாடுகள் ஆரம்பித்தன. சிரேஷ்ட பூசகர்கள் ஆலயச் சுற்றாடலையும், குளங்கள், கிணறுகள், ஆற்றங்கரை, பெருமான், பரிவார மூர்த்திகளின் மண்டபங்கள், வீதிகளையும் புண்ணியானம் செய்து பூரணகும்பம் தீர்த்தம் சேர்த்து வெளிவீதி, உள்வீதிவலம் வந்து நந்தியம் பெருமான் ஆசிபெற்று மூலஸ்தானத்தை அடைந்தனர். அடியார்களும் பின்தொடர்ந்து அரோகரா கோசமிட்ட னர். பின்னர் எண்ணைக்காப்பு நடைபெற்றது. ஆலயப் பூசகர்களும் அடியார்களும் பக்தியுடன் எண்ணைக்காப்பு சாத்தினர்.

10 மணியளவில் முருகப்பெருமான் வாயிலில் முருகப்பெருமானுக்கும் மற்றும் பரிவார மூர்த்திகட்கும் கலச அபிஷேகத்திற்கான கும்பபூசை வழிபாடுகள் ஆறு பூசகர்களும் ஏககாலத்தில் நிகழ்த்தினார். பின்னர் ஆறு கும்பங்களும் உள்வீதியில் அடியார்கள் புடைசூழ மேளதாள சகிதம் வலம் வந்து அவ்வவ் மூர்த்திகளின் விமானக் கலசங்களில் அபிசேகம் செய்யப்பட்டன. முருகப்பெருமான் மூலஸ்தானத்திற்கு திரு. வி. தெய்வேந்திர ஐயரும், விநாயகப் பெருமானுக்கு திரு. வி. இராசேந்திரம் ஐயரும், ஆறுமுகப் பெருமானுக்கு திரு. க. உலககுருநாத ஐயரும், வள்ளியம்மனுக்கு திரு. பொ. பாலேந்திர ஐயரும், நாதம்பிரானுக்கு திரு. இ. தங்கராசா ஐயரும், வைரவப் பெருமானுக்கு திரு. க. ஆறுமுகசாமி ஐயரும் ஏக காலத்தில் கலாதூபி அபிஷேகம் செய்தனர். அடியார்களும் ஓடிஓடி அனைத்து அபிஷேக தீர்த்தங்களையும் பெற்றுப்பேரானந்த மடைந்தனர்.

பின்னர் ஆறு திருமூர்த்திகட்கும் விஷேட கும்பங்கள் வைத்து அபிஷேக மும் வழமையான அமுதுகளும் நிவேதித்து முருகப்பெருமானுக்கு சண்முக அர்ச்சனையும் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து அடியார்கட்கு தீர்த்தம் திருநீறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசாதங்கள் வழங்கப்பட்டன. பல நாட்களுக்குப் பின் பெருமான் பிரசாதங்கள் பெற்ற அடியார்கள் பேரானந்தமடைந்தார்கள். பின்னா அடியார் மடத்தில் அறுசுவை அன்னதானமும் அன்னதானக் கந்தனருளால் வழங்கப்பட்டது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்றது இம் மண்டலாபிஷேக நாட்களில் விசேட கும்பங்கள் வைத்து தினமும் அபிஷேக பூசை வழிபாடுகளும் சண்முக அர்ச்சனைகளும் நடைபெற்றன. இறுதி நாளன்று 1008 சங்காபிஷேகமும் விநாயகப் பெருமான், வேற்பெருமான் வீதியுலா வந்தருளியமை அடியார்கட்கு மிக்க திருப்தியாகியது. அன்று விஷேட மேளக்கச்சேரிகளும், பஜனைகளும் இடம்பெற்றன. இறுதி நாள் பூசை வழிபாடுகளை சிரேஸ்டபூசகர் திரு. பொ. பாலேந்திர ஐயர் அவர்கள் நிகழ்த்தினார்.

நாளடைவில் அடியார்களின் நேர்த்தி வழிபாடுகள் அன்னதானங்கள் தொடர கந்தவேற் பெருமானின் அருளாட்சியும் அடியார்களின் மனத்திருப்தியும் நிலைக்கத் தொடங்கின.

கொழும்பு இந்துக் கல்லூரி இசை ஆசிரியரும் செல்வச்சந்நிதி வேற்பெருமான் பக்தருமான திரு. கே. கே. கிருஷ்ணபிள்ளை அவர்களின் ஆக்கமான செல்வச்சந்நிதி கீர்த்தனா மாலையில் இடம்பெற்ற பாடல்கள்

## சந்நிதிக் கந்தனை

இராகம்: ரிஷபப் பிரியா தாளம் : ஆதி

**பல்லவி**

சந்நிதிக் கந்தனைச் சங்கவி மைந்தனை
சதாநினை நன்னெஞ்சே...... செல்வச் (சந்நிதி)

**அனுபல்லவி**

சென்நெல் வயல்சூழும் தென் கதிரையூரான்
செந்திலாண்டவன் சிவ குருபரன் செல்வச் (சந்நிதி)

**சரணம்**

மன்னு தொண்ட மாநகர் தனில் வாழுமெங்கள்
அன்னதானக் கந்தன் அபய மளிப்பானென்றும்
முன்வினை முழுவதும் தன்னாலகன்றிடவே
வண்ண மயிலேறி வந்து ரட்சிப்பான் செல்வச் (சந்நிதி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வச் சந்நிதியானை

இராகம்: ஜோன்றலி　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

செல்வச் சந்நிதியானை சிந்தனை செய்திடப்
வந்த வினைகள் சிந்திச் சிதறிடுமே - தினம்　　　　(செல்வ)

அனுபல்லவி

சொல்ல வாய் தித்திக்கும் வல்ல வேல் முருகனின்
எல்லையில்லாக் கருணை என்ன வென்றியம்புவதோ　　(செல்வ)

சரணம்

தஞ்சமடைந்தோரைத் தாங்கும் குருபரன்
அஞ்சலென்று அபயம் அளிக்கும் தயாபரன்
மிஞ்சிவரும் பகைகளைப் பஞ்சு பட உதைப்பான்
வஞ்சமிலார் தூய நெஞ்சினிலே இருப்பான்.　　　　(செல்வ)

## வரந்தருவாய் முருகா

இராகம்: ஸாமா　　　　　　　　　　தாளம்: ரூபகம்

பல்லவி

வரந்தருவாய் முருகா - என்
வாழ்வெலாம் உனை வந்தித்து வாழ்த்திட வோர்

அனுபல்லவி

அரனார். தரும் அறுகனற் குமரா
அரக்கர் மடியப் பொருதும் வீரா　　　　(வரந்)

சரணம்

எத்தனை பிறவி நான் எடுத்தலைந்தாலும்
உன்திருநாமமே பாடிடவேண்டும்
உன் அடியாரொடு கூடிட வேண்டும்
கண் குளிர உனைக் காணவேண்டும்
கருணா சமுத்திர கலியுக வரதா　　　　(வரந்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்காரர்

தீர்த்த தலமும், மூர்த்தி தலமும் அமையப்பெற்ற தொண்டைமானாறு ஆற்றங்கரை வேலவன் தன்னை நம்பி வந்தவர்களுக்கு நோயற்ற செல்வம், புத்திர செல்வம், அருட்செல்வம், பொருட்செல்வம் என பதினாறு செல்வங்களை பெற்று வாழ நித்தமும் அருள் புரியவென சந்நிதி கொண்டுள்ள செல்வச் சந்நிதி முருகன், அன்னதானக் கந்தன், அபிஷேகக் கந்தன் எனப் பலவாறு அடியவர்களால் போற்றி வணங்கப்படும் வேலவனின் வரலாற்றில் பூக்காரரின் பங்களிப்பு இணை பிரியாத ஒன்றாகும். செல்வச் சந்நிதி முருகனின் நைமித்திய (வருடாந்த திருவிழா, விஷேட தினங்கள்) தினங்களில் பூக்காரரின் தொண்டு வரலாறு தொட்டு அளப்பரியதாகும். கதிர்காமரரின் காலத்திலிருந்து அவர்களின் உறவினர்களிலிருந்து பூக்காரர் அங்கீ கரிக்கப்படுவர்கள்.

ஆவணிமாதம் பூரணையில் தீர்த்தம் கொள்ளும் குமரனின் 15 நாள் உற்சவத்தில் பூக்காரர்கள் கொடியேற்ற தினத்தின் முன் பஞ்ச கௌவியம் அடங்கிய தீர்த்தத்தை திருவிழா குருவிடம் பாதம் பணிந்து பெற்று திருவிழா முடிந்து மறுநாள் பூக்காரர் பூசை வரை முருகனின் தொண்டர்களாக செயற்படு கின்றார்கள். அவர்கள் அவர்களுக்கென பாரம்பரியமாக சில கட்டுப்பாடுகளுடன் தொண்டு செய்வார்கள். பஞ்ச கௌவியம் மூலம் பரிசுத்தமடையும் அவர்களை தீர்த்தோற்சவ மறுநாள் நடைபெறும் பூஜை முடியும் வரை தத்தமது வீடுகளுக்குச் செல்லாது ஆலயத்தில் நீராடி ஆலயத்தில் வழங்கப்படும் ஆகாரங்களை மட்டும் உண்டு தொண்டு புரிவார்கள். தீர்த்தோற்சவம் முடிந்து மறுநாள் பகல் ஆலயத்தின் தேர், சப்பறம், வாகனங்கள் எல்லாம் உரிய இடத்தில் வைத்து அன்று இரவு 12 மணியளவில் நடைபெறும் விஷேட அபிஷேகப் பூசைகளில் கலந்து குருவிடம் பாதபூசை செய்து விபூதி, ஆசீர்வாதம், பிரசாதங்கள் பெற்று ஆலய மணி ஒலிக்க தத்தமது வீடுகளுக்குச் செல்லும் அவர்களை வீட்டில் புனிதமாக மங்கள பூரண கும்பம் வைத்து ஆரத்தி எடுத்து வரவேற்று மகிழ்வார்கள்.

ஆலயத்தில் பூசைக்குரிய பூக்களையும் எங்குமே கிடைக்காத இயற்கை ததும்பும் முருகன் எழுந்தருளும் சாத்துப்படியை மிகச் சிறப்பாக அமைப்பார்கள். அதில் நாக சாத்துப்படி, செடிவேலை எனப்படும் செண்டு பொருந்திய அலங்காரம் எங்கும் காணமுடியாததாகும் அத்துடன் கோவிலின் சகல தொண்டுகளும் தேர், சப்பறம் அமைப்பது, வேலவனை வாகனத்தில் கொண்டு வந்து அமர்த்துவது வரை அவர்களின் தொண்டு அளப்பரியது. 10ம் திருவிழா பூங்காவன அமைப்பில் அவர்களின் முழுப் பங்களிப்பு சிறப்பானதாகும். ஆலய வாசலில் முருகன் திருஉலா முடிந்து வரும்போது பூரண கும்பம் வைத்து வரவேற்பது அவர்களின் சிறப்பம்சமா கும். வேலவன் வள்ளியம்மை வாசலில் பூஜை முடிந்து புறப்பட்டு மணிக்கோபுரம் செல்லும் வரை பூமழை பொழிந்து சிறப்பிப்பார்கள். அத்துடன் வீதிவலம் வரும்போது குருவுடன் குடை, தீவர்த்தியுடன் சென்று சிறப்பிப்பார்கள்.

இவர்களுள் ஒருவர் தலைவராக இருந்து சகல தொண்டுகளையும் வழிநடத்தும் பாங்கு சிறப்பானதாகும்.

விஷேட தினங்களிலும் அவர்கள் ஆலயம், வந்து தமது தொண்டுகளை சிறப்புற நிறைவேற்றுவார்கள்.

வாழ்க பூக்காரர், வளர்க சந்நிதியில் அவர்தம் தொண்டு.

ந. இந்திரகுமார்
கதிரிப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியுகவரதன் – சந்நிதி முருகன்

கலியுகவரதன், கந்தவேள், வேலவன், வேல்முருகன் என பற்பல நாமங்களைக் கொண்ட முருகப்பெருமான் தொண்டைமானாற்றங் கரையில் செல்வச் சந்நிதியில் ஆற்றங்கரையான், அன்னதானக்கந்தன், கல்லோடைக்கந்தன், சந்நிதி முருகன் எனப் பல வடிவமாக வீற்றிருந்து தனது பல கோடி அடியார்கள் வேண்டுவதை ஈய்ந்து பிணியகற்றி பசிதீர்த்து இன்னும் பற்பல குறைகளை நீக்கும் அற்புத தெய்வமாக அருள்புரியும் முருகனின் திவ்யஷேத்திரத்தை ஈழத்துத் திருச்செந்தூர், சின்னக் கதிர்காமம் என்றும் அழைப்பர். கதிர்காமக் கந்தன் மாணிக்க கங்கையருகில் இருந்து அருள்சுரக்க, செல்வச்சந்நிதி முருகன் தொண்டை மானாற்றங்கரையில் அடியார்கள் இன்னல் தீர்க்க அமர்ந்துள்ளார். ஆகமவிதிகளுக் கமையா இவ்விரு தலங்களிலும் பூசகர்கள் வாய்கட்டி பூசை செய்வது கவனிக்கற் பாலது. சந்நிதி முருகனுக்கு மூலஸ்தான பூசை நடைபெற்று கருவறையில் வீற்றிருக்கும் வேலவனுக்கு பஞ்சாராத்தி தீபாரதனைக்கு முன் விபூதித் தட்டில் கற்பூரம் கொளுத்தி நடாத்ும் தீபாரதனை எவரையும் இறைவன்பால் ஈர்க்க வல்லது. தொன்று தொட்டு வெளிவீதியிலிருந்து உள்வீதியில் பெருமான் ஆலயத்திற்குப் பிரவேசிக்கும் போது பூசகர்கள் கால்களைக் கழுவியும் பூஜைக்குப் பூஜை ஸ்நான வழிபாடு செய்வதும் பூஜை ஆரம்பத்தில் ஆதியில் விநாயகர் கோவில் கொண்ட ஸ்தானத்தில் புண்ணிய தீர்த்தம் ஊற்றி வணங்கி விநாயக பூஜை ஆரம்பிப்பதும் கற்பூர, பஞ்சாரத்தி தீபாராதனை முடிவில் ஈசானங்களுக்குக் காண்பிப்பதும் பெருமான் வீதியுலாவின் போது ஈசானத்திலும் இவ்வண்ணம் நடைபெறுவது ' வேறெந்த ஆலயத் திலும் காணப்படாத தெய்வீக நிகழ்வுகளாகும். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடியிருக்கும் விழாக் காலங்களிலும் தீர்த்தம் முதலில் வழங்கப்பட்டு அடுத்து இவ் வீபூதித்தட்டில் இருந்தே பிரதம பூசகரால் சகலருக்கும் விபூதி வழங்கப்படு வது இங்குள்ள வழக்கம். பெரும்பாலான அடியார்கள் பூசகரின் பாதத்தை வணங்கி விபூதி பிரசாதம் பெறுவர். இவர்களுக்கு தலையில் விபூதி போடுவித்தால் தங்களுக்கு எவ்வித இன்னல்களும் அணுகாது என்பது ஐதீகம். இவ் அற்புத தலத்தில் பூசை கள் மணியோசை, பறையோசைகளுடன் ஆரம்பித்து பூசைகள் முடியும்வரை ஒலித்துக் கொண்டே இருக்கும். மஹோற்சவ காலத்தில் இரவு உற்சவத்தில் வடக்கு வீதியில் எச்சரிக்கை பாடுவதும், காலை மாலை உற்சவங்கள் முடிவுற்ற தும் பன்னிரு பருவமடையாப் பெண்பிள்ளைகள் விளக்கெடுப்பதும் பக்தகோடிகளைப் பரவசமடையச் செய்வதை அவதானிக்கலாம். மற்றும் அடியார்கள் தங்கள் நேர்த்திக் கடன்களை கரகம், காவடி, பாற்செம்பு, கற்பூரச்சட்டி, பறவைக்காவடி, தூக்குக் காவடி, செடில்க்காவடி ஆகியவற்றை எடுத்து நிறைவேற்றுவர். தீர்த்தோற்சவத்திற்கு முருகப்பெருமான் பல்லக்கில் புறப்பட தளப்பத்தோலையால் மறைத்துச் செல்வர். தீர்த்தம் ஆடியதும் தளப்பத்தோலையில் ஒரு பாகத்தையாவது பெறும் நோக்குடன் அடியார்கள் முண்டியடித்து எடுப்போரின் எண்ணிக்கை எண்ணிலடங்கா. அப்படி பெறப்படும் ஓலையைப் பாதுகாத்து வைத்திருந்தால் தமக்கு ஒருவித தீங்கும் நிகழாது என்னும் நம்பிக்கை மக்களுக்குண்டு. சந்நிதி முருகன் ஆலயத்தில் தலவிருட்சமாக இருக்கும் பூவரசமரத்தின் கீழ் தவமிருந்து முத்தியடைந்த பக்தர் களும், சித்தர்களும் பலர் அண்மைக்காலத்தில் சிறந்த முருக பக்தனாக விளங்கிய தவத்திரு. முருகேசு சுவாமிகள் இப் பூவரசம் இலையை மருந்தாகப் பாவித்துப் பயனடைந்தது மட்டுமல்ல பல அடியார்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மருந்தைக் கொடுத்து விமோசனமளித்தார். சிறந்த முருகபக்தராகிய சுவாமிகளின் வேண்டுகோளுக்கிணங்கி பூசாரியாரின் ஆறாவது பரம்பரையில் தோன்றிய விசாகரத்தின ஐயர், தெய்வேந்திர ஐயர் இம் மலரை ஆக்கி வெளியிடுவது சாலப் பொருத்தமானதே. 1985, 1986, 1987ல் நடைபெற்ற அனர்த்தங்களால் கோவிலில் சேதமேற்பட்ட போதிலும் மூலஸ்தானக் கட்டிடத்தில் சிறிது தாக்குதல் தன்னும் நடைபெறாததையும் அதில் சேதம் ஏதும் விளையாததும் விந்தையே. என்றாலும் கோவிலில் ஏற்பட்ட ஏனைய சேதங்களை திருத்தியமைத்து 20-03-1988ல் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தை பூசாரியாரின் ஆறாவது பரம்பரையைச் சேர்ந்த ஆறு அர்ச்சகர்களுக்கு தலைமைதாங்கி நடாத்திவைத்த திரு. தெய்வேந்திரம் ஐயரால் வெளியிடப்படுவது இரட்டிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. வரலாற்றுக் குறிப்புகள் இல்லாதவிடத்திலும் கர்ணபரம்பரைக் கதைகளை மையமாக வைத்து இத் தலத்தைப் பற்றிய நூல்கள் காலத்துக்குக் காலம் பல அடியார்களாலும், அறிஞர்களாலும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் சந்நிதி முருகனின் பல அற்புதங்களும், அனுக்கிரகங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

செல்வச் சந்நிதி முருகன்பெருமையும், வரலாற்றையும் பூசை முறைகள், விழாக்கள் போன்ற பல அம்சங்களை உள்ளடக்கிய இம்மலர் முருகபக்தர் அனைவருக்கும் ஒரு அரும்பெரும் பொக்கிஷமாக திகழும் என்பது திண்ணம்.

*திரு. க. சிவக்கொழுந்து*
சமாதான நீதவான், உடுப்பிட்டி.

# நீதிபதி அவர்களின் கருத்துரை

"சந்நிதியான்" என்றும் "ஆற்றங்கரையான்" என்றும் "கல்லோடைக்கந்தன்" என்றும் பலவாறாகப் பக்தியுடன் போற்றிவழிபடப் பெறும் செல்வச் சந்நிதி முருகன் புகழ்பாடும் மலர் ஒன்று வெளியிடப்படுவது அந்த முருகன் அடியார்கட்கெல்லாம் உவப்பான செய்தியாகும்.

தனக்கே உரித்தான எழிமையான சூழலில் அமைந்துள்ள இவ்வாலயத்தில் கடைப்பிடிக்கப்படும் வழிபாட்டு முறைகள் இவ்வாலயத்திற்கென்றே வகுக்கப்பட்டுள்ள தனிமுறையாக இருக்கும் காரணத்தினால் அவை பேணப்பட வேண்டியதாகும். அப்படிப் பேணப்படுவதற்கு அச்சிலிட்டுப் பாதுகாக்க இப்படியான மலர் அத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் உதவுகின்றது. இவ்வாலய தலவரலாற்றுடன் சம்பந்தமான தகவல்கள் வழிபாட்டு முறைகள் மற்றும் சாதாரண, விஷேட பூசை உற்சவ காலங்களில் கடைப்பிடிக்கப்படும் பாரம்பரிய சடங்குகள் ஆகியன இம் மலரில் எடுத்து உருவாக்கியமை எமது பிற்சந்ததியினருக்கு பாதுகாத்துக் கொடுக்கும் மகத்தான பணியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியானின் அருட்பிரவாகம் முருகன் அடியார்கட்கு தங்குதடையின்றிக் கிடைக்கவும் இம் மலர் வெளியீடு பலரும் போற்றிப்பேணும் வகையில் அமையவும் அந்தக் அந்தக் கல்லோடைக் கந்தனே அருள்புரிய வேண்டுமென இறைஞ்சுகின்றேன்.

"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"

திரு. ந. யோகசிகாமணி
மேலதிக மாவட்ட நீதிபதி,
கொழும்பு.

## ஸ்ரீ செல்வச் சந்நதிக் கந்தப்பெருமான்

புத்தாயிரம் ஆண்டு பிறக்கின்ற பொழுது செல்வச் சந்நிதி முருகன் ஆலய சஞ்சிகைக்கு இச் சிறிய கட்டுரையை எழுத முருகன் அருள் புரிந்துள்ளான். தொண்டைமானாற்றில் இவ்வாலயம் பிறந்த நாள் தொட்டு இங்கு பூசைகள் அவன் பணிப்பின் பேரில் வேறெந்த ஆலயங்களில் இல்லாத பாரம்பரிய முறையில் பேணி நடாத்தப்படுவது போற்றத்தக்கதாகும். தொண்டைமானாற்றில் வாழ்கின்ற மக்கள் பெரும்பேறு பெற்றவர்கள். சூழவுள்ள கிராமத்தவர்களும் புண்ணிய பலனைச் செய்தவர்கள். இருப்பினும் வல்வை நகரைச் சேர்ந்த வள்ளல்கள் முருகன் ஆலயத் திற்கு இந்திர விமானம், தேர், சப்பறம் மற்றும் மின் வசதிகள் போன்றவற்றை வழங்கியுள்ளார்கள். முருகன் ஆலயத்தில் நடைபெறும் சூரன்போர் விழாவில் வல்வை வாலிபர்களின் பங்களிப்பை யாரும் அறிவர். வல்வை மக்கள் இலங்கையில் அன்னதானக் கந்தன் எனப் புகழ்பெற்ற செல்வச்சந்நிதி முருகனிடம் விழாக்காலங் களிலும், வெள்ளிக்கிழமை தோறும் முருகனை வணங்கி அன்னதானத்திலும் பங்கு கொண்டு அன்னதானத்தையும் வழங்கி அதற்குரிய பொருளுதவிகளையும் வழங்கி வருவதைப் பாராட்டவேண்டும். புது யுகத்தில் யாவருக்கும் நல்ல வாழ்வையும் சமாதானத்தையும் கொடுக்கவேண்டுமென முருகன் பாதங்களை வணங்குகின்றேன்.

*திரு. செ. யோகச்சந்திரன்*
அதிபர்,
சிதம்பரக்கல்லூரி,
வல்வெட்டித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரத நெறி

விரதம் என்பது கட்டுப்பாடு உபவாசம் என்பது ஒன்றும் புசியாது இருப்பது இறைவனை அண்மித்து வாசம் செய்தல் என இரு பொருள்படும். இது உத்தமம் மத்திமம், அதமம், அதமத்தமம் என நால்வகைப்படும்.

| | | |
|---|---|---|
| உத்தமம் | - | உழுந்து அமிழ்ந்தநீர் மூன்று முறை ஆசமித்தல் |
| மத்திமம் | - | சிறிதளவு பால் |
| அதமம் | - | சிறிதளவு பழம் |
| அதமத்தமம் | - | சோறுதவிர்ந்த ஏனையவை |

**விரதங்கள் 4 முறை :-**

1. தெய்வவாக்குமுறை
2. குருமுறை
3. நூல்முறை

4. பரம்பரைமுறை வர்ணாச்சிரமதர்மமுறை பக்திமுறை எனப்பலவகையிலும் அநுட்டிக்கப்படுகின்றன. விரதங்கள் அனைத்தும் தெய்வங்கட்கும் தனித்தனியே காணப்படுகின்றன. இவைகளுக் கலியுகவரதனாய் கந்தப்பெருமானின் விரதமே பிரதிபலிக்கின்றன. அவை மூன்று வகை.

1. வாரம்
2. நட்சத்திரம்
3. திதி

| | | |
|---|---|---|
| வாரவிரதம் | - | வெள்ளிக்கிழமை |
| நட்சத்திரவிரதம் | - | கார்த்திகை |
| திதி | - | சஷ்டி |

**1. வெள்ளி - மூன்றுவருடங்கள்**

விண்ணவர் உலகம் காத்த வள்ளல்தான் விரதம் எனக் கச்சியப்ப சுவாமிகள் விதந்துள்ளார். மேலும் அநுட்டிக்கும் முறையை

"வெள்ளி முற்றும் உறவினைத் துறந்து முன்பின்சென்றிடும் இரண்டு நாளும்
திவாவினில் அடிசில் மாந்தி இன்துயில் அதனை நீத்து மூன்று அளவு நோற்றார்.

| | | |
|---|---|---|
| திவா | - | ஓர்நேர உணவு |
| வியாழ வாரத்தில் | - | சாயங்காலத்தில் உண்ணல் |
| சனிவாரத்தில் | - | முற்பகலில் உண்ணல் (பாறணை) |

இதுவாரம் வாரமாக அநுட்டித்தல் வேண்டும். வருடத்தில் 52 வெள்ளிகள் வருகின்றன. மூன்று வருடத்திற்கொருமுறை 53 வெள்ளிகளும் வருகின்றன.

உதாரணம்:- 52x3= 156+1 = 157 நாட்கள்

நட்சத்திர விரதம் - கார்த்திகை விரதம் - 12 வருடங்கள்

கார்த்திகை நட்சத்திரத்திற்கு முதல் பரணி நட்சத்திரத்தில் சாயங்கால உணவும் (அபரணம்) அபரணம் - (சூரிய அஸ்தமனமாக 5 நாளிகைக்குள்) கார்த்திகை நட்சத்திரம் இரவு பகல் உபவாசமும் ரோகிணி நட்சத்திரத்தில் பாரணப் புரிதல் (பாரணம் சூரியன் உதித்து 5 நாழிகைக்குள் 5 நாழிகை - 2 மணித்தியாலம்)

இது "ரோகிணி அடைந்த காலை சந்தியா நியமம் எல்லாம் சடக் முடித்துக்கொண்டு கந்தவேற் செம்பொற்கென தண்டைக் கான்முறை வழிபட்டேத்தி வந்த மாதவர்களோடும் மகிழ்ந்து செய்தாள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் கச்சியப்ப சுவாமிகளது கூற்று மூலம் விளக்கப்படுகிறது. சடக்கென என்பதற்கும் வந்த மாதவர்கள் என்பதற்கும் முக்கிய பொருளாம் நேரம் தவறுபடாமை (சூரிய உதயமாகி 2 மணிக்குள் 6+2 = 8 மணிக்கும்

12x13 = 156 +1 =157

திதிவிரதம் - சஷ்டிதிதி

சஷ்டி - கந்தசஷ்டி விநாயகசஷ்டி என இரு வகையாம் விநாயக சஷ்டி மார்கழிமாத பூர்வபக்க கந்தசஷ்டி ஐப்பசிமாத பூர்வபக்க சஷ்டிதிதி பூர்வம் - வளர்பக்கம் - வளர்பிறை)

இவ்விரதம் "பெற்பொடும் அவுணன் தன்னை வீட்டிய
தனிவேற் செங்கை அற்புதன் தன்னைப் போற்றி
அமரரும் முனிவர் யாரும் சொற்பொடு துலையின் திங்கள்
சுக்கிலபக்கம் தன்னில் முற்பகலாதியாக மூவிருவைகல் நோற்று."

கச்சியப்ப சுவாமிகள் மூவிருவகைகள் என்பது பூர்வபக்க பிரதமைதிதி முதல் ஆறும் திதியாம் சஸ்டிபுத்திதி ஈராக அமைந்த நாட்கள் அவை 5, 6, 7 நாட்களாக அமையும் இதில் திதியே விரதமாகக் கணிக்கப்படும் (நாட்களின் தொகைகள் அல்ல)

வார, நட்சத்திர, திதி உபவாச அனைத்துப்பகலிலோ இரவிலோ நித்திரை செய்தல் ஆகாது. ஓர்நேர உணவு நாளில் (நோன்பு) பகலிலும் உபவாச நாளில் இரவு பகலிலும் பாரணை நாளில் பகலிலும் நித்திரை செய்தல் ஆகாது. சமயதீட்சை பெறத்த தகுதியுள்ளோர் சமயதீட்சை பெறாது விரதம் அநுட்டித்தல் மாபெரும் தவறு. சட்டி விரதமும் மாதம் மாதம் பூர்வ அபரபக்கங்களில் அநுட்டித்தல் உத்தமமோத்தமம். கந்தபுராண ஒருபகுதியை கந்தபுராணமாக கச்சி குமரேசுகோட்டப்பெருமாள் கருணைவடிவில் முடிவு படலமான வள்ளிதிருமண படலத்திற்குமுன் கந்தவிரதப்படலத்தில் சூரபத்மனது கொடூர காட்சியில் சிக்காத சத்தியத்திற்காக தன் இராசபோகத்தைத் துறந்து சுடலை போகத்தில் முடிஉரிமை பூண்ட அரிச்சந்திரனின் பின்வழியினை (பிற்சந்ததி) முசுகுந்தன் தன்குலகுருவான வசிட்டமுனிவரின் அடிமுறை பணிந்து கந்தவேள் விரதமெல்லாம் கட்டுரை பெரியோய் என்ன மைந்தனன் கேட்டி வழிது மொழிந்தவை "மேற்காட்டியவற்றை புலப்படுத்தும் இவ்விரதங்களில் ஒன்றான வெள்ளிநாள் விரதத்தை பகிரத அரசன் தான் ஆண்ட உலகத்தை சேரன் அசுர அரசன் கைக்கொள்ள தானும் மனைவியும், பிள்ளையும் வனத்தில் நாட்டைவிட்டு ஒழிந்து வெள்ளிபகவானுக்கு முறையிட 3 வருடம் நித்திய வெள்ளி அநுட்டித்தால் உன்பதன்பம் தீரும் என, அவ்வாறே அநுட்டிக்க கந்தஐயனின் துதிவேல் பகைவனை வென்றது.

"முனிவருள் உயர்பதவிபெறவும் மேலாம் சிறப்பு எய்தவும் நுண்ணிய உணர்வின் மிக்க நாரதன் மரபகு உதவும் முன்னோராம் விக்னேஸ்வர பதம் பணிந்து விரதம் ஒன்றை மேற்பட விளம்பதி என்ன அவ் ஆனைமுகன் ஆறுமுகதம்பியின் பொன்னடி வழிபாடாற்றி கார்த்திகை நாள் தன்னில் தான் அணிந்த அனைத்து ஆடைகளுடன் நீராடி தேசிகராகும் (குரு) விரததலைவனும் ஆறுமுகனது பாதங்களை சிரங்கொண்டு அந்நாள் புராணமும் வினவி பன்னிரு வருடத்தில் பூர்த்திப் பலன் பெற்றால் சூர, சிங்க, தாரக அசுரர்களால் துன்புற்ற அமர முனிவர்கள் தனிவேற்செய்கை அற்புதனைப் போற்றி தம்ப, விம்ப, கும்பத்தில் கங்குல் போதில் நிறைதருகட்டி கூட்டி நெய்யினால் சமைக்கப்பெற்ற குறைதவிர் போதகத்தை குமரநாயகற்கு அருந்திச் தாம் உறுபுனல் சிறிதே மாந்தி உபவசித்து பிரதமை முதலான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 திதி அடங்கிய நாளில் அநுட்டித்து மற்றவைகால சப்தமிதிதியில் சிறப்போடு பாரண பூசை ஆற்றி புராணம் விதியில் பராணம் புரிந்த பகற் காலத்தில் தாம் விழி மூடாது அநுட்டித்து அவுண் கொண்ட தம்பதத் தலைமை பெற்றார்.

பெற்ற இம்மூன்று விரதங்களையும் வசிட்ட முனிவர் உபதேசிக்க கேட்டமுசுகுந்தன் அநுட்டிக்க அறுமுக வள்ளல் மைரை (மயில்) தான வீரரும் என்மரும் இலக்கத்தும் (இலட்சத்தொன்பதின்மார்) சூழத்தோன்றத் தரிசித்த மன்னன் கைதொழுது பரவினான். பரவியதை ஏற்ற ஆறுமுகன் "முசுகமுகமன்னனே எந்த நல்வரம் வேண்டுமோ என்று வினவ வெற்றி மொய்பினான் ஆதியாம் வீரரை துணைவரா தகுதிர் என பெருமான் அவ்வாறே வரமளித்து கந்தகிரி நண்ணினான். அவ்விர உபாசனையால் இந்திரனைத் தோற்கடித்த வல்லசுரனை முசுகுந்தக் வென்ற நிறைவால் நாராண மூர்த்தி ஆசித்த சோமஸ்கந்த முகூர்த்தத்துடன் (சோ+உ+கந்த) இந்திரனால் முகுந்தனை ஏமாற்றச் செய்த 6 முகூர்த்தங்களுடன் ஏழாகப்பெற்று நாராயணன் பூசித்த சோமாஸ்கந்த முகூர்த்தத்தை திருவாரூரிலும் மற்றைய முகூர்த்தங்களை திருக்கடநாகை, திருநண்ணாறு, திருக்காரயல், திருக்கேணியூர், திருமறைக்கானம், திருவாமியூர் ஆகிய ஏழு தலங்களிலும் ஆவகனம் செய்து பூசிக்க தெங்வேந்திரனும் திருவாருந்தலத்தில் வந்து பூசித்து சோமஸ்கந்த முகூர்த்த கொடுந்தோஷம் நீங்கினான் முசுகுந்தனும் கந்தகிரிஅடைந்தான்.

உலகப்பெறும்பேறு விரும்ப தாம் கால அளவை எடுப்பினும் கால அளவு பெறாது விரதம் அனுட்டிப்பவர் தாம்விரும்பும் உலகப்பேற்றுடன் கந்தகிரி பத்தும் முத்திப்பதம் தப்பாது அடைவர். சோ-சிவன்

உ- உமையம்மை, கந்தன் - முருகன்
விரதங்களுக்கு கால அளவு கணக்கில்லை.

*கருத்துக்கள்: புலவர். வினாசித்தம்பி*

---

# ஆற்றங் கரை அன்பனும் கந்தன் கருணையும்

## அறிமுகம்

தென்மராட்சிப் பகுதியில் மிருசுவில் ஒட்டுவெளி என்னும் கிராமத்தில் தெய்வானை எனும் மூதாட்டி தனது பிள்ளைக்கு ஏற்பட்ட சுகவீனத்தால் முருகப்பெருமான் வாக்குப்பிரகாரம் செல்வச்சந்நிதியில் வைத்து வேற்பெருமானை வணங்கினாள். சிறிது நாளில் அப்பிள்ளை சுகமடைய வேலவனுக்கு விற்றது மட்டுமன்றி பிள்ளைகள் அனைவரையும் அவருக்கு விற்றுவிட்டாள். அப்பிள்ளைகள் யாவரும் செல்வச்சந்நிதி வேற்பெருமானுக்கு தொண்டர்களாகினர். பெருமான் கிருபையால் யாவரும் நல்நிலையடைந்தனர். தாயார் அடிக்கடி தன் பிள்ளைகளைக் கூட்டிவந்து பல்வேறு நேர்த்திகளை செய்து இறைவனடி சேர்ந்தார். பிள்ளைகள் யாவரும் தங்கள் கடமைகளைச் செய்வதுடன் அடிக்கடி வேற்பெருமானை தரிசித்து வேண்டிய அபிஷேகம் அன்னதானம் செய்து வருகின்றனர். அம்மூதாட்டியின் புதல்வியான சிவராசன் மல்லிகாவதி (அம்பி) அதிகம் கல்வியறிவு இல்லாவிடினும் ஆற்றங்கரை வேலன் அநுக்கிரகத்தால் அண்ணர் நடராஜா ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிநடத்தினாலும் செல்வச்சந்நிதி வேற்பெருமான் மீது கருணையுடன் வழங்கிய இப்பாக்களை பெருமான் திருவருளுடன் சமர்ப்பிக்கின்றேன்.

வி.தெய்வேந்திர ஐயர்.

சித்தி விநாயக புத்தி விநாயக வித்த விநாயக ஓம்
ஆறுமுக அண்ணனே ஓம் பெற்றவரை உலகம் என்றும் மதித்தாய் ஓம்
ஆற்றங்கரை வீற்றிருக்கும் பிள்ளையாரே அடியாரின் குறைநீக்க பிள்ளையாரே
உன் தம்பியோடு துணை நிற்க பிள்ளையாரே.

யாவருக்கும் வலிமையில்லே ஞான மந்திரன்
அன்பரை அழைக்கும் அந்த அன்பு மந்திரம்
அடியார்க்கு அருள்புரியும் ஓம் மந்திரம்
ஓம் என்ற மந்திரமே சரவணனே
ஓங்கி வளருதடா இவ்வுலகில்
ஓம் என்ற மந்திரமே சரவணனே
ஓங்கி வளருதடா இவ்வுலகில்

வேல் ஏந்தும் கந்தனுக்கு நீதியுண்டு
வேலனின் அன்பருக்கு நேர்மையுண்டு
பாலகனை கும்பிட்டால் பயமுமுண்டு
பாவங்கள் செய்வதற்கு பயமுண்டு

நீதியுள்ள கொள்கையிலே ஆசையுண்டு
நேர்மையுள்ள பாதையிலே இடமுண்டோ
ஆண்டவனின் சிலைதான் அன்பர் நெஞ்சில்
ஆடும் அறியாரோ இந்நிலையை.

செல்வசந்நிதியுறையும் வேலவனே
அருளை அள்ளி வழங்கும் பாலகனே
நல்ல பதியில் அமர்ந்த நாயகனே
நல்ல அருள் பொழியும் நாயகனே
கல் மனம் கரைக்கும் கந்தையனே
காந்தம் போல் இழுக்கும் கருணையனே
மெல்ல மெல்ல ஈர்த்தாய் வேலவனே
மேதை யாக்கி விட்டாய் வேலவனே.

முகப்பில் ஓம் என்ற மந்திரம் ஒலிக்குதையா
உள்ளத்திலும் ஓம் என்று பதியுதையா
மூலஸ்தான வேல் இங்கு ஒலிக்குதையா
பக்தி பரவசத்தை ஊட்டுதையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூலஸ்தான வேல் நெஞ்சில் இருக்குதையா**
**மூச்சிலிலே அவர் அருள் தெரியுதையா**
**மூலை முடக்கெல்லாம் வருகுதையா**
**அருளையும் தந்து விட்டு செல்லுதையா.**

# கால சுழற்சியில் ஆலயம்

இவ்வாலய ஸ்தாபகர் மருதர் கதிர்காமரின் சந்ததியினரும் பெருமான் சித்தப்படி பூஜை வழிபாடுகளையும் ஆரம்பத்தில் கலசமின்றி இருந்த இவ்வாலயம் அரை நூற்றாண்டுக்கு முன்னர் விமானம் அமைத்து கலசம் ஸ்தாபிக்கப்பட்டது. ஆதிமூலஸ்தானத்துடன் இணைந்த மண்டபங்களும் அமைக்கப்பட்டு பிள்ளையார் குளமும் பெருப்பிக்கப்பட்டது மானிப்பாய் திரு.செல்லமுத்து தம்பதிகள் 42 அடி உயரமான மணிக்கோபுரம் அமைத்து 5 மைல்களுக்கு ஒலிக்கும் காண்டா மணியையும் பொருத்தினார்கள் நாளடைவில் ஆலயமும் சுற்றாடலும் விருத்தி பெற்று பின்னர் இலங்கையில் முதன்மையாகவும் உலகில் 4 வதுமான சித்திரத்தேர் உருவாக்கப்பட்டது. ஏராளமான பொருட் செலவில் உருவாக்கப்பட்ட இத்தேர் 1984ல் வெள்ளோட்டத்துடன் இழுக்கப்பட்டது அடுத்த வருடமும் இழுக்கப்பட்டது இருவருடங்களே இத்தேர் இழுக்கப்பட்டது 1984ல் ஆரம்பித்த வன்முறை 1985 ஜனவரி 14 ல் தைப்பொங்கல் தினத்தில் தொண்டைமானாறு இராணுவ முகாம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆலயம் பொலிவு குன்றி பூஜை வழிபாடுகளில் அடியார்களின் பங்களிப்புகள் குறைந்து படிப்படியாகப் பதட்டநிலை தோன்றியது இதன் காரணமாக 21.03.1986ல் ஏற்பட்ட சம்பவங்களினால் பூசகர் இன்றி ஆலயத்திற்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. பின்னரும் அசம்பாவிதங்கள் நிகழ்ந்தன 08.04.1986ல் காண்டாமணி உடைக்கப்பட்டு சின்னாபின்னமாகச் சிதறியது. பின்னர் 21.04.1986ல் சித்திரைத்தேர் அழிக்கப்பட்டு சுற்றாடல் மடங்கள் கடைகள் யாவும் பாரிய சேதமடைந்தன பூசகர்களும் இல்லங்களிலிருந்து வெளியேறி அயல் ஊர்களில் அகதிகளாக வாழ்ந்தனர் 29.9.1987ல் இலங்கை. இந்திய ஒப்பந்தமேற்பட்டபின் ஆலய உரிமையாளர்களும் ஊர்மக்களும் பிரி[illegible] அவர்களின் முயற்சியால் சொந்த இடங்களுக்கு வந்தனர் எனினும் பூசைகள் ஆரம்பிக்க முடியாத நிலையில் ஆல[illegible] உடமைகள் கொள்ளையிடப்பட்டிருந்தன இதன் பின் இந்திய இராணுவத்தினரின் கெடுபிடிகளும் அதிகமாகியது இக்காலகட்டங்களில் பலமுறை தொண்டைமானாறு வீ.பி.ம.வி.அதிபர் அமரர் திரு.செ.யோகச்சந்திரன் முன்னாள் பருத்தித்துறை சித்திவிநாயகர் மகாவித்தியாலயம். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் திரு.த.அனந்தராஜ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் உப அதிபர் அமரர்.திரு.விநாயகமூர்த்தி ஆகியோர் மூலம் அரசிற்கும் அமைச்சர்கட்கும் மகஜர்களை அனுப்பியும் பலன் ஏதும் கிடைக்கவில்லை பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு.க.துரைரத்தினம் பருத்தித்துறை பிரதேச செயலர் திரு.y.வேலும்மயிலும் ஆகியோர் அனுசரணையில் மீண்டும் மகஜர் அனுப்பி பிரபல வர்த்தகரும் ஆண்டியப்பர் சந்ததியினருமாகிய திரு.V.R.வடிவேற்கரசன் அவர்கள் அனுசரணையுடன் இந்துகலாச்சார அமைச்சர் திரு.செ.இராஜதுரை அவர்களைச்சந்தித்த வேளை இவ்வாலயத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் சிலவிஷமிகள் செயல்பாட்டினால் தடைப்பட்டது தெரிந்து வேதனையானது.

இருப்பினும் திரு.V.R.வடிவேற்கரசன் அவர்கள் முயற்சியால் இந்திய உயர்ஸ்தானிகர் திரு.J.N.டிக்ஸித் அவர்களின் உதவியினால் சில உதவிகள் கிடைக்கப் பெற்றன இதனால் ஆலய உரிமையாளர்கள் ஒன்று கூடிப்பணிகளை தெல்லிப்பளை அமரர்.திரு.இரத்தினம் எஞ்சினியர் அவர்களிடம் சிறுதொகைப்பணத்தைக் கொடுத்து 05.02.1988ல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. பெருமான் திருவருளும் அடியார்கள் ஆக்க ஊக்கங்களினால் 20.03.1988ல் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்று வழமைச் செயற்பாடுகளும் தொடர்ந்தன இதற்கு சுவாமியார் திரு.வேலுமுருகேசு அவர்களும் அவரது அடியார்களும் பெரும் பங்களிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது மேற்படி வன்முறைச் சம்பவங்களினால் பாதிப்புற்ற ஆலய உரிமையாளர் குடும்பத்தினருக்கு அரசின் பொது நிவாரணமும் யாழ் சர்வோதய ஸ்தாபனத்தார் இந்திய செஞ்சிலுவைச்சங்க (C.V குப்தா) ஸ்தாபனத்தார் போன்ற தொண்டு ஸ்தாபனங்கள் அவ்வப்போது உலர் உணவு நிவாரணங்களை அளித்தமை ஆறுதலாக இருந்தது.

**மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிசேகமும் பின்னர் வழமையாக பூஜை வழிபாடுகள் உற்சவங்கள் யாவும் நடைபெற்றன மீண்டும் பெருமான் ஆலயம் பொலிவு பெற்று திருப்பணி வேலைகளும் தொடர்ந்தன மடைப்பள்ளி களஞ்சிய அறை உற்சவவாகனங்கள் மின்சார இணைப்புக்களும் சீராக்கப்பட்டன 1990ல் மீண்டும் வன்முறை ஆரம்பிக்கவே நாளுக்கு நாள் ஆலயம் சுற்றாடல். மடங்கள். மணிக்கோபுரம். ஆகியன சேதமாகின பூஜை வழிபாடுகள் பதட்டத்துடன் காலத்திற்கேற்ப எளிதாக நடைபெற்றன இந்நிலை 1995 வரை நீடித்து 1996ல் சற்று வன்முறை ஓய்ந்ததும் மணிக்கூட்டுக்கோபுரம் ஸ்திரமாக்கப்பட்டு 1997 தைப்பூசதினத்தில் கலசாபிஷேகம் நடைபெற்றது அன்றையதினமே முன்மணிமண்டபத்திற்கான அடிக்கல்லினை பிரதேச செயலர் திரு.ஆ.சிவசாமி நாட்டிப் பணியினை ஆரம்பித்தார். அடியார்களின் ஆர்வமிக்க பங்களிப்பினால் அவ்வருட மகோற்சவத்திற்கு முன்னரே அழகிய மணிமண்டபம் உருவாக்கி இன்று யாவருக்கும் திருப்தியேற்பட்டுள்ளது தொடர்ந்து நந்தி மண்டபமும் பூர்த்தியாகி ஆலயச்சுற்றாடல்களில் அத்தியாவசிய சேவைகளும் பூர்த்தியாகின.**

**தொடர்ந்து பூ மண்டபம் பூங்காவன மண்டபமும் லண்டனிலிருந்து காண்டாமணியும் கொண்டுவரப்பட்டுப் பொருத்தப்பட்டு மலரும் வெளியாகியது வெளிநாடுகளிலிருந்து பல அன்பர்கள் வருகை தந்து விசேடமாக சைவ சிரோன்மணி நீதியரசர் திரு.பொ.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களின் புதல்வியார் டாக்டர் திருமதி.இந்திராசிவயோகம் அவர்களும் வருகை தந்து பல**
**சமய சமூகப்பணிகளிலும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும். திரு.பொ.புவனேந்திரஐயர் இக் காண்டாமணி உருவாக்க பெருமுயற்சி செய்தமையும் பாராட்டுக்குரியது. தொடர்ந்து சித்திரத்தேர்களும் உருவாகி மேலும் ஆலயம் மீண்டும் சிறப்புறுகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

203.1988 முதல் கும்பாவிஷேக தினத்தில் கும்ப ஆராதனையில் திரு.வே. முருகேசுசுவாமிகள் கலந்து கொண்டமை



விநாயகர், வேற்பெருமான் வீதியுலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்காவன உற்சவம்



வெள்ளைக் குதிரை வீதியுலா



சருள் சாத்துப்படியில் பெருமான்



கைலாய வாகனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்பறம்



தேர்



சிவப்புக் குதிரையில்
தேரடித் திருவிழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாந்த சங்காபிஷேகத்தன்று பூந்தண்டிகையில் வேற்பெருமான் வள்ளி, தெய்வயானைசகிதம் மணவவாளக்கோல வீதியுலா




பூங்காவனக் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்காபிஷேகத்திற்கான சங்குகள் அமைத்த காட்சி



சங்காபிஷேக உபயகாரர் காளாஞ்சி பெறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கெடுத்தல்



வெள்ளை மயில் வாகனத்தில்




குருக்களிடம் பூக்காரர் விடைபெறுதல்
நி.செயலாளர் திரு.ச. மகாதேவனுடன்



சூரன் போர்



தீர்த்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07-04-2008 மகாகும்பாபிஷேகம்

1984 முதல் 1990 தொடர்ந்து வன்முறைச்சம்பவங்களினால் பாதிப்புற்று பூசையின்றிப்பூட்டிய ஆலயம் புனருத்தாரணப் பணிகள் நடைபெற்று 20-03-1995ல் மகாகும்பாபிஷேகத்துடன் வழமைச்செயற்பாடுகள் தொடர்ந்தன அத்துடன் பல பணிகள் தொடரப்பட்டன. அக்காலத்தில் மூலஸ்தானம் (கற்பக்கிரகம்) மேல்பாகம் சுண்ணாம்பினால் கட்டப்பட்டதால் அத்துடன் 30ம் ஆண்டுத் தாக்கத்தினால் நாளடைவில் அவை உழுத்து பல பாதிப்புக்கள் ஏற்பட்டன இவற்றைச்சீர்செய்ய முற்பட்ட வேளை கைதடியைச்சேர்ந்த அமரர் திரு.தம்பிநாதன் வேலாயுதம் அவர்கள் பாரிய பங்களிப்பை பொறுப்பேற்றுக்கொண்டார் ஆனாலும் அன்றய காலகட்டத்தில் நாட்டின் சூழ்நிலை பதட்டமாயும் பொருட்கள் கட்டுப்பாடு நிலையினால் பணி முடக்கமானது. எனினும் சென்ற 24-01 2008 சுபதினத்தில் பெருமான் ஆலயம் பாலஸ்தாபனஞ் செய்யப்பட்டது பெருமான் திருவருளும் அடியார்களின் ஆக்க ஊக்கங்களினாலும் வழமையான பங்குனி அச்சுவினி நட்சத்திரமான 07.04.2008 ல் சிறப்பாக மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றது. மூலஸ்தான கர்ப்பக்கிரக விமானங்கள் ஸ்திரமாகவும் சிறப்பாகவும் ஆலய உட்பிரவாகங்கள் சிறந்த பளிங்குக் கற்கள் (மாபிள்) பொருத்தி எழுந்தருளி மண்டப வாசலில் ஆறுமுகசாமி வள்ளி தெய்வானை அமைந்த அலங்கார விமானமும் அமைக்கப்பட்டு நாகதம்பிரான் ஆலயம் ஸ்திரமாகவும் வேலைப்பாடுகளும் கொண்டு அம்மன் நாகதம்பிரான் இணைப்பு மண்டபம் விஸ்தார மண்டபமாக்கி அமைக்கப்பட்டது யாவருக்கும் பரிபூரணதிருப்தியாகும்.

07-04-2008 அதிகாலை உதயப் பூஜையைத் தொடர்ந்து மணிமண்டபத்தில் புண்ணியாணப்பூஜை ஆரம்பமானது பூரண கும்பம் வைத்து விநாயகர் வழிபாட்டுடன் புண்ணியான கும்பத்திற்கு ஆராதனை நடை பெற்றது. இப்புண்ணியான கும்பத்தில் புனித கதிர்காம, காசி, கங்கை இராமேஸ்வர திருத்தலங்களிலிருந்து பெறப்பட்ட தீர்த்தங்கள் சேர்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும் அத்துடன் பெருமான் பரிவார மூர்த்திகளின் கலசக்கும்பங்களிலும் இப்புனித தீர்த்தங்கள் சேர்க்கப்பட்டனபுண்ணியான கும்ப தீர்த்தம் பெருமான் வீதியுலா எழுந்தருளும் நாவல் விருட்சத்திற்கும் பின் பிள்ளையார் குளம் வைரவப்பெருமான் ஆலயம், வெளிவீதி வலம் வந்து சரஸ்வதி மண்டபத்திலும் பின்னர் உள் வீதியில் நந்தியம் பெருமான் விநாயகப் பெருமான் ஆலயம் ஆறுமுகசுவாமி வாசல் வள்ளியம்மன் குளம் பூவரச விருட்சம் வள்ளியம்மன் தேவஸ்தானம் நாகதம்பிரான் மண்டபம் வந்து எழுந்தருளிப் பிள்ளையார் தேவஸ்தானம் வந்து வேற்பெருமான் ஆலயத்திற்கும் சேர்க்கப்பட்டு புண்ணியயானப் பூஜை இனிது நிறைவேறியது.

தொடர்ந்து நந்தியம் பெருமான் முன்னிலையில் பூரண கும்ப ஆராதனையில் சுமங்கலிகள் மங்களவிளக்கேற்றல் நடைபெற்றது. முதலில் ஸ்தாபகர்பரம்பரையினரும் பின்னர் ஏனைய சுமங்கலிகளும் இதில் பங்கு கொண்டனர் ஆரம்பத்தில் திரு. ஆறுமுகசாமி ஐயர புதல்வியும் திரு.வி.தெய்வேந்திர ஐயர் மனைவியுமாகிய திருமதி மாணிக்கம் அவர்களும் அடுத்து திரு தர்ம ரத்தின ஐயர் புதல்வியும் திரு.உலக குரு நாத ஐயர மனைவியும் ஆகியதிருமதி புஸ்பராணியும் அடுத்து உலககுருநாத ஐயர் மகளும் திரு. சுந்தரமூர்த்தி ஐயர் மனைவி திருமதி வனிதா அவர்களும் நெய்விளக்குகள் ஏற்றி நந்தியம் பெருமானை வழிபட்டு விநாயகப்பெருமானை வலம் வந்து பூவரச விருட்சம் நாகதம்பிரான் மூர்த்திகளை வலம் வந்து வள்ளியம்மன் வாசலில் வைத்து பெருமான் ஆலயம் ஒளி பெற வேண்டுதல் செய்தனர் இதனைத்தொடர்ந்து வருகை தந்த சுமங்கலிகளும் விளக்கேற்றி வேண்டுதல் செய்தனர் பின்பு யாவரும் பெருமான் வாசலில் வீழ்ந்து வணங்கி வேண்டுதல் செய்த நிகழ்வுகள் பக்திபூர்வமாக அமைந்தன.

அடுத்து தேவஸ்தான பிரதிஸ்டை நடைபெற்றது.முதலில் விநாயக பெருமான் ஸ்தானத்திற்கு பிரதிஸ்டையும் பின்னர் முருகப்பெருமான் தெய்வனை அம்மனும் பின் வள்ளியம்மனும் நாகதம்பிரான் ஸ்தானங்களுக்கு பிரதிஸ்டையும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் சிரேஸ்ட பூசகர்கள், அடியார்கள் புடை சூழ இனிது நடைபெற்றது.

பின்னர் சந்தனக்காப்பு ஆரம்பமானது விநாயகப்பெருமானுக்கு முதலிலும் பின் வேற்பெருமான் தெய்வானை ஆகியோருக்கும் அடுத்து வள்ளியம்மன் நாகதம்பிரான் ஆகிய மூர்த்தங்களுக்கும் சந்தனக்காப்பு நடைபெற்றது முதலில் பூசகர்களும் பின் அவர்கள் குடும்பத்தினரும் தொடர்ந்து பூக்காரர் மற்றும் அடியார்களும் ராகுகாலத்தின் முன் ஆரம்பித்து பகல் 11 மணிவரை யாவரும் சந்தனக்காப்பு சாத்தும் பெரும்பாக்கியத்தைப் பெற்றனர் வெளிவீதியிலிருந்து நீண்டவரிசையில் அடியார்கள் அனைவரும் அமைதியாக சந்தனக்காப்பு சாத்தியது யாவருக்கும் பரமதிருப்தி 11:30 மணியளவில் சிரேஸ்ட பூசகர்கள் பெருமான் வாயிலில் பஞ்சாரத்தி காண்பித்து நடைபெறவிருக்கும் கும்பாபிஷேகம் இனிது நிறைவேறப்பூஜித்தனர் அடியார்களும் அரோகரா கோசமிட்டனர். யாவரும் பெருமானை வலம்வந்து மணிக்கோபுர கலசகும்ப ஆராதனையில் ஈடுபட்டு மணிக்கோபுரத்தில் கலசவழிபாட்டுக்குப்பின் கோபுரக்கலசாபிஷேகம் (குடமுழுக்கு) நடைபெற்றது பின்பு ஏக கலச கும்ப ஆராதனைகள் நடைபெற்றன. விநாயகப்பெருமானுக்கு திரு.த.பாலசுப்பிரமணியஐயர் அவர்களும் முருகப்பெருமானுக்கு திரு.வி.தெய்வேந்திரஐயர் அவர்களும் ஆறுமுகப்பெருமானுக்கு திரு.க.உலக குருநாத ஐயர் அவர்களும் வள்ளியம்மனுக்கு திரு .ஆ.சிவசண்முகஐயர் அவர்களும் நாகதம்பிரானுக்கு திரு.த.அகிலேந்திர ஐயர் அவர்களும் வைரவப்பெருமானுக்கு திரு.க.ஆறுமுகசாமிஐயர் அவர்களும் சரஸ்வதிதேவிக்கு திரு.வ.சுந்தரமூர்த்திஐயர் அவர்களும் ஏக கலச கும்பாபிஷேகம் செய்தனர் அடியார்கள் அனைவரும் புனிதகும்பதீர்த்தங்களை பெற்றுப் பேரானந்தமடைந்தனர் பின்னர் அவர் அவர்களே மூர்த்திகட்கு கும்ப ஆராதனை அபிஷேகங்களையும் செய்தனர்.

பின்னர் பூஜை வழிபாடு நடைபெற்று பெருமான் வீதியுலா எழுந்தருளினார் வீதியுலாவில் அடியார்களின் ஆனந்த வழிபாடும் நாதஸ்வர தவில் மேளக்கச்சேரிகளுடன் பஜனைப்பாடல்களும் இடம் பெற்றன வீதியுலா நிறைவுற்றதும் பெண்பிள்ளைகளின் விளக்கெடுக்கும் நிகழ்வும் தொடர்ந்து சுற்றுமண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப்பெற்று அடியார்கட்கு விபூதி பிரசாதம் வழங்கப்பட்டு அறுசுவை அன்னதானமும் சிறப்பாக நடைபெற்றது. பொதுவாக அன்றையதினம் அனைத்து அடியார்கட்கும் பெருமானது அனைத்து நிகழ்வுகளும் பரிபூரண திருப்தியளித்து யாவரும் பெருமானின் அருட்பிரவாகங்களைப் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்

## தொண்டைமானாறு

# மஹா கும்பாபிஷேகம்





காலம் : 07.04.2008 பங்குனி 25 திங்கட்கிழமை
அச்சுவினி நட்சத்திரமும் துதியைத்திதியும் கூடிய சுபவேளை
பகல் 12.07 முதல் 1.39 வரை

## நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| அதிகாலை | 5.00 | உதயப்பூஜை |
| காலை | 6.00 | புண்ணியானப் பூஜை |
| காலை | 6.30 | சுமங்கலிகள் விளக்கேற்றல் |
| காலை | 6.45 | தேவஸ்தான பிரதிஷ்டை |
| காலை | 7.00 | சந்தனக்காப்பு ஆரம்பம் |
| பகல் | 11.30 | மணிக்கோபுர கலசாபிஷேகம் |
| பகல் | 12.00 | கும்ப ஆராதனை |
| பகல் | 12.07 | ஏக கலச கும்பாபிஷேகம் |
| பகல் | 1.00 | பெருமான் வீதியுலா எழுந்தருளல் |

ஸ்ரீ செல்வச்சந்நிதி மெய்யடியார்கள் யாவரும் ஆசாரசீலராய் பெருமானின் சந்தனக்காப்பிலும் மஹாகும்பாபிஷேகத்திலும் கலந்து தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெறுவீர்களாக.

சுப மங்களம்

ஆலய உரிமையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aum

# SRI SELVASANNATHY TEMPLE
## THONDAIMANAR
# MAHA KUMBAPISEGAM





*The above Maha Kumbapisegam of lord Selvasannathy Murugan will held on 07.04.2008 Monday between 12.07 and 1.37 p.m*

| | |
|---|---|
| 5.00 | Morning Pooja |
| 6.00 | Punniyana Pooja |
| 6.15 | Sumangali Pooja |
| 6.45 | Thevasthana Pirathisdai |
| 7.00 | Santhana Kappu |
| 11.00 | Kalasapisegam of bell Tower |
| 12.00 | Kumba Araathanai |
| 12.07 | Maha Kubapisegam |
| 1.00 | Festival |

*All get belessing of lord Murugan*

*Subamangalam*

**Owners of Selvasannathy**
**Thondaimanar**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகா கும்பாபிஷேக புண்ணியாகப் பூஜை



மங்களவிளக்கேற்றலில் பிரதமகுரு தேவேந்திர ஐயர் மனைவி திருமதி மாணிக்கம் விளக்கேற்றும் காட்சி



மங்கள விளக்கேற்றல் திருமதி புஸ்பராணி உலக குருநாத ஐயர்



மங்கள விளக்கேற்றல் திருமதி லலிதா சுந்தரமூர்த்தி ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமங்கலிங்கள் விளக்கேற்றுதல்




சிரேஸ்ட பூசகர் திரு.க ஆறுமுகசாமி ஐயர்
விநாயகப் பெருமானுக்கு சந்தனக்காப்பு சாத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகப் பெருமான் தேவஸ்தான பிரதிஸ்டை



மணிக்கோபுர கலசாபிஷேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணவர் உதவியுடன்
முருகப் பெருமானுக்கு
சந்தனக் காப்பு
சாத்தும் பக்தை

தில்லையம்பலம்
ஞாபகார்த்த
திருப்பணிச் சபை
செயலாளர்
திரு.தி.முருகதாஸன்
சந்தனக் காப்பு
சாத்துகின்றார்






பூக்காரத் தொண்டர்கள்
முருகப் பெருமானுக்கு
சந்தனக்காப்பு
சாத்துதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகப் பெருமான் கலசாபிஷேகம் திரு.த.பாலசுப்பிமணிய ஐயர்



முருகப்பெருமான் கலசாபிஷேகம் திரு.வி.தெய்வேந்திர ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகப் பெருமான் கும்ப ஆராதனை திரு.த.பாலசுப்பிமணிய ஐயர்



ஆறுமுகப்பெருமான் கும்ப ஆராதனை திரு.க.உலககுருநாத ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்ப ஆராதனை வள்ளியம்மன் திரு.ஆ.சிவசண்முக ஐயர்



நாகதம்பிரான் கும்ப ஆராதனை திரு.த.அகிலேந்திர ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவர் கும்பாராதனை திரு.த.மகேந்திரமூர்த்தி ஐயர்



சரஸ்வதிதேவி கும்பாராதனை திரு.வ.சுந்திரமூர்த்தி ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்திற்கான இணையதளம்

இன்றைய உலகில் சகல பாகங்களில் நடைபெறும் நிகழ்வுகள் விஷேடங்கள் பொழுது போக்குகள், யாவும் இணையதளத்தினூடாக வீட்டிலிருந்த படியே கண்டு அறியக் கூடியதாக உள்ளது அத மாத்திரமின்றி அரச தனியார் நிறுவன நடவடிக்கைகள் கலாச்சார செயற்பாடுகள் ஆன்மிக விழுமியங்கள் தொழிற்பாடுகள் யாவும் இவ்விணையதளத்துள் இணைந்துள்ளது. இவ்வாறான இணையத்தள நடவடிக்கைகளுக்கு எமது ஆலயமும் இன்று செயற்பட்டுயாவர்க்கும் திருப்தியளிக்க இப்பகுதி இளைஞர்கள் ஆர்வமுற்றனர். இதன் பயனாக இப்புனித ஆலயத்தின் இணையத்தள செயற்பாடுகளுக்கு வித்திடப்பட்டது. ஆனாலும் பல்வேறு தனி நபர்களும் ஸ்தாபனங்களும் எமது புனித ஆலயத்தை மையமாக வைத்து சந்நிதி என்ற பெயரோடு பல்வேறு இணையதளங்களை உருவாக்கி சுய தேவைகளையும் பூர்த்தி செய்தது மட்டு மன்றி மாயைத்தோற்றங்களையும் உருவாக்கி ஏமாற்று செயல்களிலும் ஈடுபட்டனர். இதனால் உண்மையான எமது சந்நிதிக்கென ஒரு இணையத்தளம் ஏற்படுவதில் சிரமாகிவிட்டது. இருப்பினும் எமது விடாமுயற்சியும் வேற்பெருமான் கிருபையும் சந்நிதி (SANNATHY) எனும் இணையத்தளத்தை உருவாக்க முடிந்தது. அத்துடன் வேற் பெருமான் எம் மூதாதையரான திரு மருதர் கதிர்காமாராலும் சந்ததினராலும் செய்த புனித செயற்பாடுகளையும் தொடர்புகளையும் விளக்கமாக எடுத்துக் காட்டி வரலாறு, பூசைநிகழ்வுகள் எம் பூசகர் சந்நிதி விபரம் அத்துடன் ஆலய நிகழ்ச்சிக ளையும் நிகழ்கால எதிர்கால நடவடிக்கைக ளையும் வெளிப்படுத்தியதால் இன்று யாவராலும் போற்றப்படுகின்றது.

இவ் இணையத்தளம் 10.09.2009 பங்குனி 28 வெள்ளிக்கிழமை சித்திரை நட்சத்திரமும் பிரதமைத் திதியும் கூடிய சுபவேளையில் யாழ் அரசாங்க அதிபர் திரு.கே கணேஸ் அவர்களினால் கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டது. பரு.பிரதேச செயலாளர் திரு.R வரதீஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இச்சிறப்பு விழாவில் யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் திரு. ஆ. சிவசுவாமி அவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். மிருசு வில் சிவராஜா பிரதீப் அவர்கள் இவ் இணையத்தளத்தை எமது ஆலயத்தில் மிகுந்த சிரமடங்களுடன் குறிப்பிட சுபநேரத்தில் உருவாக்கியதுடன் இன்றும் இதன் வளர்ச்சியில் அக்கறை கொள்வதும் பாராட்டுதலுக்குரியதாகும். இவ் இணையத்தள பணிகளை செல்வி அகிலா அகிலேஸ்வர ஐயர் அவர்கள் அவ்வப்போது ஆலய நிகழ்வுகளை வெளிப்படுத்தவும் ஆலயப் பணிகளை கணனி முறையில் உருவாக்க வும் உதவுகிறார். தற்போது எமது செயற்பாடுகள் திருநெல்வேலி IT கணனி நிறுவனத்தி னால் உலகின் பலபாகங்களும் வெளிப்படுத்தப்படுகின்றது. இந் நிறுவன பொறுப்பாளர் திரு.தவரூபன் அவர்கட்கு இவ்வாலய நிர்வாக சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள் கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம்

தொண்டைமானாறு

இணையதள ஆரம்பவிழா

# ஆலய இணையத்தள ஆரம்ப விழா அழைப்பிதழ் 10 . 04 . 2009



இணைய தளத்தினை அரச அதிபர் திரு.கே.கணேஸ் அவர்கள் ஆரம்பித்தமை

www.sannathy.com







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றுமண்டபம்

சுமார் இருவருடங்களுக்கு முன்பு அதாவது 2006ம் ஆண்டு நடுப்பகுதியில் ஆலயத்தில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கவிருந்தவேளை எதிர்பாராத இடையூறுகள் ஏற்பட்டுப்பணியும் இழுபறி நிலையில் இருந்தது எனினும் ஆலயத்தில் பல அசௌகரியங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன மழைகாலத்தில் ஆலய உட்புறங்களிலும் பூங்காவன மண்டபத்துள்ளும் ஒழுக்குகள் கசிவுகள் பக்கவெள்ளம் ஆகின சிரமங்களை உண்டு பண்ணின இவைதவிர உள்வீதியில் பெருமான் வீதியுலாக்கள் கும்ப ஆராதனைகள் அடியார்கள் நேர்த்திகள் வெயில் மழைத்தாக்கங்களினாலும் பல நெருக்கடிகள் உண்டுபண்ணின அத்துடன் தற்போதைய சூழ்நிலையில் பகல்நேரங்களிலேயே பல உற்சவங்கள் நடைபெறுவதால் உள்வீதியில் வீதி உலா வரும்போது நிலச்சூடும் மேல்வெயிலும் கடுமையாக யாவரையும் வாட்டிவதைத்தன. அங்கப்பிரதட்சணம் பண்ணுவோரும் அடியார்கட்கும் இது சிரமமே எனவேதான உள்வீதிக்கு உயர்ந்த சுற்றுக்கொட்டகை அமைந்த மண்டபம் அமைக்கவேண்டிய நிலை உருவானது.

சென்ற வருட கதிர்காம தீர்த்தோற்சவ தினத்தன்று பகல் கும்ப ஆராதனையின் போது இவ்வேதனை சுட்டிக்காட்டும் வண்ணம் பெருமான் அற்புத நிகழ்வால் இப்பணி மேற்கொள்ளும் பணி உதயமானது இதன் முதற்படியாக பூங்காவன மண்டபத்துள் வெள்ளம் வரா வண்ணம் சிறுபணி ஆரம்பிக்கப்பட்டது இப்பணியின் தொடராக தைப்பூச தினத்தின் மூன்றாம் நாள் பெருமான் ஆலயம் பாலஸ்தாபனஞ் செய்யப்பட்டுத் தொடராகப் பெருமான் திருவருளுடன் அடியார்களின் ஆர்வமிக்க ஆக்க ஊக்கங்களினாலும் பல புனருத்தாரன பணிகள் மேற்கொள்ளப்பட்டு வழமையான கும்பாபிஷேக தினத்திலேயே மகாகும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றது இப்பணிகளோடு சுற்றுமண்டபப் பணிகளும் நடைபெற முனைந்தபோது அதுமுற்றுப் பெறாது என்பதால் சுற்று மண்டபத்திற்கு அமைவாகப் பொருத்துகள் அமைப்புகள் வடிவமைக்கப்பட்டன.

பெருமான் கட்டடப் பணிகள் ஆரம்பமான தைமாத பிற்பகுதியிலும் மாசி முழுவதும் பங்குனி முற்பகுதியிலும் பலநாட்கள் அதிகாலையில் அடைமழை பெய்து கட்டிடங்கள் ஸ்திரமாகி குளிர்ச்சியையும் பெருமான் உண்டாக்கினார். பிற்பகுதியில் மழை ஓய்ந்து மையூசுதல் மின்சார இணைப்புக்களுடன் கும்பாபிஷேகத்துக்கு ஒருவார முன்பதாக பணிகள் முற்றுப்பெற்றன மகாகும்பாபிஷேக தினத்திலேயே சுற்று மண்டபப் பணிக்கான அத்திவார மிடப்பட்டது இவ்விடத்திலும் பெருமான் அற்புத நிகழ்வு நெகிழ்ச்சியாக உள்ளது. முருகபக்தரான திருஇராஜகுரு அவர்கள் பலநாட்கள் ஆலயத்திற்கு வருகை தராதிருந்து ஆலயப் பணிகள் நடைபெறுவதாகத் தெரிந்து திடீரென ஒரு நாள் வருகை தந்து தனது முக்கிய பங்களிப்புக்கு விருப்பம் கோரினார் எமக்கு இச்சுற்றுமண்டபப்பணிக்கு செலவினம் பாரியதாக இருக்கும் எனக் கலக்கம் கொண்ட வேளையே இவரும் கோரிக்கை விட அவரிடம் சுற்றுமண்டப விபரம் தெரிவிக்கப்பட்டது உடனேயே அவர் தான் நினைத்ததை இரட்டிப்பாக தருவதாகவும் மேலும் பலரிடம் இப் பணிக்கு பங்களிப்புகள் பெற்றுத்தருவதாகவும் பெருமான் நடாத்தி முடிப்பார் என்றும் உற்சாகமூட்டினார் அவர் வாக்குப்படி அது பெருமான் வாக்கென்றே எம்மால் கொள்ள முடிகிறது இன்று சிறு சிறு துளியாக வெளிநாட்டிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் ஆக்க ஊக்கங்கள் பெருமான் வழங்கப் பண்ணிக் கொண்டிருக்கின்றார்.

சுற்றுமண்டபப் பணி ஆரம்பித்து தூண்கள் அமைத்து மேல் மட்டம் கொங்றீற் பண்ண ஆயத்தம் சூழ்நிலை சற்று மாறுபட்டது எது எப்படி எப்போ என்ன நடக்குமோ என அச்சம் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை இரவு ஒருதொகை சிமெந்துடன் வேறிடங்களுக்குமாக ஆலயத்திற்கு வாகனம் வருகை தந்தது அதிகாலை மழை கொட்டியதால் உடனேயே அங்கு இறக்கி மீதி மூடப்பட்டது ஆனாலும் பின்பு முழுவதும் இங்கேயே இறக்கவேண்டிய பெருமான் சித்தமாகிவிட்டது. அத்தோடு வேறிடங்களிலிருந்தும் பெருமான் பணிக்காக சீமெந்துகள் வந்து குவிந்தன ஏற்கனவே ஒருதொகை கம்பிகள் இருந்தமையால் எவரும் எதிர்பாராவண்ணம் முதலில் விநாயகப்பெருமான் மூலஸ்தானத்தோடு அமைந்த பகுதியும் தொடர்ந்து எழுந்தருளி மண்டப முன்பாகவும் பூவரச விருட்ச பக்கமாகவும் மேல்த்தளங்கள் விரைவாகப் போடப்பட்டன யாழ் அரச அதிபரின் முயற்சியால் போதிய மண்ணும் கிடைத்த வண்ணம் இருந்தன இப்பணியை மேற்கொண்ட ருபின்ஸ் ஸ்தாபனத்தார் எமக்கு எவ்வித நெருக்குதலுமின்றி இன்முகத்துடன் எம்முடன் அடிக்கடி ஆலோசனை பெற்று அவர் எண்ணப்பிரகாரம் துரிதமாக பணிநடைபெற்றது அத்துடன் அவர் காலையிலேயே வருகை தந்து மாலை வரை தங்கி வேண்டிய பணிகளை சிறப்பாக்கினார் பணியாளர்களும் காலை 6 மணிக்கு வேலைகளை ஆரம்பித்து இரவு 1மணிவரை கூட பணியாற்றியமை பாராட்டுக்கும் பெரு நன்றிக்குரியதுமாகும்.

மகாகும்பாபிஷேகம் நடைபெற்று மண்டலாபிஷேகம் நிகழ்ந்த காலங்களில் இடை நிறுத்தி பின் 19.05.2008ல் விசாக தினத்தன்று மறுபடி சுற்று மண்டபப் பணி ஆரம்பித்து 22.08.2008ல் அச்சுவினி நட்சத்திரமும் சஷ்டி திதியும் கூடிய எழுந்திருப்பு சுப தினத்தில் மேல்த்தளமும் முக்கிய பணிகளும் முற்றுப் பெற்று முதல் முதலாக சுற்று மண்டபத்தினூடே வேற்பெருமான் வள்ளிதெய்வயானை சகிதம் வீதியுலா வரும்போது இருமருங்கிலும் அடியார்கள் பூமழை பொழிந்தமை கண்கொள்ளாக் காட்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுற்று மண்டபம்
புண்ணியானப்
பூஜை




புண்ணியானம்



பூசகர்கள்
பஞ்சாரார்த்தி
காண்பித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுற்று மண்டபத்தில்
முதல் முதலாக
வேற்பெருமான்
வள்ளி – தெய்வானை
சகிதம் வீதியுலா



பெருமான வீதியுலாவில்
தவில், நாதஸ்வரக் கச்சேரி



ரூபின்ஸ் ஸ்தாபன
உரிமையாளருக்கு
காளாஞ்சி வழங்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. சிவசண்முகம் ஐயர்

A.Sivashanmugam Iyer. J.P.
*High Priest,*
*Sri Selvachannathy Temple,*
*Thondaimanaru.*



## ஆலய நிர்வாகத் தலைவர் திரு. ஆ.சிவசண்முகஐயர் அவர்களின் கருத்துரைகள்

"ஒரு திரு முருகன் வந்து உதித்தனன் என்பது கச்சியப்பர் பெருமானின் திருவாக்கு - கந்தபுராணத்தின் உயிர் மூச்சு. இக்கந்தபுராணத் தொடர்புடைய செல்வச்சந்நதி ஆலயத்தில் ஆலிலை நிவேதனம் நித்திய பூசையில் அமைந்து கந்தனாய் அருள்பாலித்துக்கொண்டிருக்கும் தொண்டைமானாற்றங்கரைப் பூவரச மரத்தடியில். கதிர்காமறை" கதிர்காம முறைப்படி மௌனபூஜை செய்வித்து தடுத்காட் கொண்டு உலகை உய்விக்க உவந்தருளி. வேல் வடிவாய்-பாமரமக்களும் தொழுது உழகும் பக்திமார்க்கம் பரிணமிக்கும் தலமாகும்.

கடந்த சர்வசித்து வருடம் பங்குனி மாதம் அச்சுவினி நடசத்திரத்தில் 07.04.2008ல் (20 ஆண்டுகளுக்குப் பின்பும் அதே சுப நட்நத்திரத்தில்) கருணையே வடிவான கலியுகவரதனாகிய பொலியும் பொருட்டு வினையை குறைக்கும் திருவை. விநாயகர் முதற் கொண்டு கருவறையில் திருவருளைப் பொலியும் பொருட்டு அபிஷேகித்து எல்லா மூர்த்தங்கட்கும் ஏக காலத்தில் அபிஷேகித்து தரிசனம் தந்தமை சிறப்பிற்குச் சிறப்பாக அமைகிறது.

இக்கால சூழ் நிலையில் அநேகமாக எல்லா ஆலய திருவிழாக்களும் ட.:லிலேயே நடைபெற வேண்டிய நிலையும் வெயில் மழை காலநிலை மாற்றமும். செல்வச்சந்நியை சூழ அமைக்கப்பட்ட மடங்கள் போர்க்காலத்தில் அழிந்து சிதைந்துள்ளமையும் முன்னரைப்போல தங்கிநிற்க முடியாமையினாலும் வந்த அன்றே திரும்ப வேண்டிய தேவை கருதி சுற்று மண்டப பணி நடை பெற்று வருகின்றன கதிர்காம முன்தோற்றம் அமைந்த மண்டப முகப்பு பூர்விகத் தொடர்பு காட்டும் பேறாகும் மேலும் மண்டப வேலைகள் பூர்த்தியாக வேண்டியுள்ளன இவ்வாண்டு மகோற்சவத்தின் மூலம் திருப்பணி நிதி ஈடுசெய்ய வேண்டியும் உள்ளன எனவே இப்பணி பூர்த்தி பெற்று பெருமான் நிகழ்வுகளுக்கும் அடியவர்கள் நன்மைக்கும் ஏற்றதாக்க வேண்டுதல் செய்து நல்லாசியையும் நல்குகின்றேன்.

ஆ.சிவசண்முக ஐயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone: 021-222 2235

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone: 021-222 2233, 021-222 2234

**දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.**
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**
**District Secretariat, Jaffna.**

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 021-222 2355
E-mail: gajaffna@sltnet.lk

මගේ අංකය / எனது எண் / My No.: GA/JF/02

ඔබේ අංකය / உமது எண் / Your No.:

දිනය / திகதி / Date: 15.08.2008

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது ஆன்றோர் வாக்கு. இவ் ஆலயங்கள் பண்பாட்டின் நிலைக்களனாக விளங்குவதுடன் உடல், உள ஆன்மீக விருத்திக்கும் துணை நிற்கின்றன.

இன்று மதத்தின் பெரும் பிரிவுகளாக சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்று ஆறு வகைப்படுத்தப்படுகின்றது. இவ்வகையில் முருகனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் மதம் "கௌமாரம்" எனப்படும். மதங்கள் மக்களை மார்க்க நெறியில் வழிப்படுத்துவன. எந்த மார்க்க நெறிநின்று வழிபட்டாலும் அவை எல்லாம் இறுதியில் ஒரே இடத்தையே சேருகின்றன.

இவ்வகையில் இலங்கையின் வடபாகத்தே மிகவும் பிரபல்யமான முருகன் ஆலயமாக ஸ்ரீ செல்வச் சந்நிதி விளங்குகின்றது. புராதனமானதும், புதுமைமிக்கதுமான இவ்வாலயத்தில் "அன்னதானக் கந்தன்" என்ற பெருமையுடன் தன்னை நாடிவரும் அடியவர்கள் வேண்டும் வரங்களை ஈந்து நல்லருள் பாலிக்கின்றார்.

1986இல் ஏற்பட்ட வன்செயல்களில் மிகவும் பாதிக்கப்பட்ட போதிலும் இரு வருடங்களின் பின்னர் 1988இல் புனருத்தாரணம் செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டு மீண்டும் வழமைபோல பூஜை வழிபாடாற்றப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து 20 வருடங்களின் பின்னர் மீண்டும் 07.04.2008இல் மஹா கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எம்பெருமான் உள்வீதியில் வலம் வரும் வேளையில் மழை, வெயில் போன்ற இயற்கை இடையூறுகள் எதுவுமின்றி அடியார்கள் அமைதியாக மனதை ஒருமுகப்படுத்தி வழிபடவும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றவும் உதவும் வகையில் உள்வீதியில் சுற்று மண்டபம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது பக்தர்களுக்கு மிகவும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

இப்புனித பணியானது விரைவில் செவ்வனே நிறைவேற்றம் பெற வேண்டும் எனவும் எம்பெருமான் திருவருள் யாவர்க்கும் கிடைக்க வேண்டும் எனவும் கந்தப் பெருமான் பாதார விந்தங்களைப் பணிகின்றேன்.

"சரணம் சரணம் சண்முகா சரணம்"

க.கணேஷ்
க.கணேஷ்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,
யாழ் மாவட்டம்.

க.கணேஷ்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் திரு.ஆ.சிவசுவாமி அவர்களின் ஆசிச்செய்தி

### வாழ்த்துரை

ஈழத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய சுற்றுமண்டப புனருத்தாரண கும்பாபிஷேக சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

செல்வச் சந்நிதி ஆலயம் எமது மண்ணுக்கும் மக்களுக்கும் கிடைத்துள்ள ஒரு பெருமை மிக்க திருத்தலமாகும். கலியுகக் கந்தனின் பேரருள் மழை அங்கே பக்தி வெள்ளத்தை ஊற்றெடுக்கச் செய்கின்றது. இங்கு பேணப்பட்டு வருகின்ற கிரியை முறைகளும் மற்றும் ஆன்மீக நிகழ்வுகளும் தனிமனித வாழ்க்கைக்கு மட்டுமன்றிச் சமூகத்தின் உயர்விற்கும் ஆதாரமாக அமைகின்றன.

மூர்த்தி, தீர்த்த, தல மகிமைகள் ஒருங்கே அமையப்பெற்று கதிர்காம பூஜை மரபினை கொண்டதான இவ்வாலயத்தின் திருவிழா ஆவணி மாதத்திலே வரும் பூரணையிலே தீர்த்தோற்சவத்தைக்கொண்டு 15 நாட்கொண்ட திருவிழாவாக மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அத்துடன் கந்தசஷ்டி விரதம், பூரணைடலங்கள், சங்காபிஷேகம், சண்முக அர்ச்சனை என்பன சிறப்பான பூசை வழிபாடுகளாக இடம்பெற்று வருகின்றன.

கதிர்காமக் கந்தன் மாணிக்க கங்கை அருகில் இருந்து அருள்பாலிக்க முருகப் பெருமான் தொண்டைமானாற்றங்கரையிலே செல்வச் சந்நிதியில் அன்னதானக் கந்தனாக வீற்றிருந்து அடியவர்களின் இன்னல் தீர்த்து அருள்பாலிக்க அமர்ந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

1986 இல் ஏற்பட்ட பல்வேறு இன்னல்களால் மிகவும் சேதமடைந்த நிலையிலும் ஆலய உரிமையாளர்களின் அயராத முயற்சியாலும் அடியார்களின் ஒத்துழைப்பினாலும் இவ்வாலயம் மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டு 1988 இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று, அடியார்களின் நேர்த்தி வழிபாடுகள் தொடர கந்தவேற் பெருமானின் அருளாட்சி இடம் பெற்று வருகின்றது.

தொடர்ந்து பல திருப்பணிகள் செய்யப்பட்டு 07.04.2008 இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. தற்பொழுது ஆலய உட்புறச் சுற்று மண்டப புனரமைப்புப் பணி நடைபெற்று வருகின்றது. இவ்வாலயத் திருப்பணிகள் பரிபூரணமாக நிறைவுபெற்று இவ்வாலயம் மேலும் சிறப்புற வேண்டும் என்ற விருப்பத்துடன் இம்மலர் வெளியீடு சிறப்பாக அமையவும் வாழ்த்துகின்றேன்.

ஆ. சிவசுவாமி

**ஆ.சிவசுவாமி**
மேலதிக அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்

ஆ. சிவசுவாமி
மேலதிக [illegible]
அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

ஈழமணித்திரு நாட்டின் வடபால் அமைந்துள்ள திருத்தலங்களிலுள் வரலாற்றுச்சிறப்புமிக்கதும் தொன்மையும் மேன்மையும் அருட்பொலிவும் மிக்கதான ஆலயமாக மிளிர்வது "ஸ்ரீ செல்வச்சந்நிதி" ஆகும். இவ்வாலயம் தொண்டைமானாறு ஆற்றங்கரை தனிலே அமைந்திருப்பது வடமராட்சிப்பிரதேசத்துக்கு ஒரு சிறப்பாக விளங்கிறது. இலங்கையில் பிரசித்திபெற்ற வழிபாட்டுத்தலங்களில் ஒன்றாக இவ்வாலயமும் வர்தகமாணியில் பிரசுரிக்கப்பட்டு மகோற்சவ காலங்களில் பிரதேச செயலகத்தின் கருமபீடம் இங்கு அமைக்கப்பட்டு ஆலய உற்சவ கருமங்களுக்கும் ஆலயத்துக்கு வரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்த்தேவையான வசதிகளையும் ஒழுங்கு செய்யப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நல்லருளுடன் சீர் சிறப்புப் பெற்ற ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் சைவ மக்கள் எவருமே சிந்தித்துப்பரா வகையில் 1986ம் ஆண்டில் இருந்து 1988ம் ஆண்டு வரை ஏற்பட்ட இன்னல்களை எவறும் ஜீரனித்திருக்கமாட்டார். இருந்தும் இறைவன் திருவருளினாலும் பெரியோர்களினதும் ஆலய உரிமையாளர்களினதும் பகிரத் பெரு முயற்சிகளினாலும் இவ்வாலயம் புனருத்தரானம் செய்யப்பட்டு 20-03-1986 ல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. மீண்டும் 2008 ல் இவ்வாலயத்தின் முக்கிய திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு ஆலயச் சுற்றுமண்டபமும் நிர்மாணிக்கப்பட்டு மகாகும்பாபிஷேகம் நிறைவடைந்து ஆலயம் புதுப் பொலிவுடன் காணப்படும் இவ்வேளையில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு நிறைவான வாழ்த்துக்கள் வழங்குவதுடன் சந்நிதியானின் பேரருள் கந்தன் அடியார்களுக்கு தங்குதடையின்றிக் கிடைப்பதற்கு அந்தக்கந்தனே அருள் புரிய வேண்டுமென மனதார இறைஞ்கிறேன்

இ.வரதீஸ்வரன்
பிரதேச செயலாளர்.
வடமராட்சி வடக்கு.
பருத்தித்துறை.
08-25-2008.

கிராம அலுவலர் அலுவலகம்.
சந்நிதி (J/383).
தொண்டைமானாறு
20-08-2008.

## தொண்டைமானாறு தெற்கு கிராம அலுவலரின் வாழ்த்துச் செய்தி

செல்வச்சந்நிதி முருகப்பெருமான் திருவருளினால் மலந்திருக்கும் உள் வீதி (சுற்று) மண்டபம் மிகச்சிறப்பான குறையில் குறுகிய காலத்தில் தலைசிறந்த சிற்பவேலைகள் கொண்டு திருப்பணிச்சபையினது. அயராத முயற்சியாலும் செல்வச்சந்நிதி ஆலய குருமார்களினது நல்லார்க்களினாலும் முருகனடியார்களதும் நிதி உதவியினாலும் நிறுவன ஊழியர்களது அயராத உழைப்பினதும் செல்வனே நிறைவேறி முருகப்பெருமான் இவ்வாண்டு மகோற்சவத்தின் போது திரு வீதியுலா வருவதற்க்கு ஏற்றமாக அமைந்துள்ளது. எனவே இம்மண்டபம் சிறப்புற அமைய பங்களிப்பு செய்த அனைவருக்கும் செல்வச்சந்நிதி வேலனுடைய திருவருள் கிடைக்க வேண்டுமென அவன் பாதங்களை வணங்கி வாழ்த்தி ஆசி கூறுகிறேன்.

சேவையில் உள்ள
ந. சேகர் (கிராம அலுவலர்)
தொண்டைமானாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகராட்சி மன்ற செயலாளரின் வாழ்த்துச் செய்தி

ஆற்றங்கரையில் வீற்றிருந்து அருள்பாலித்து வரும் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய கும்பாபிஷேக, சுற்று மண்டப பணி பற்றிய சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஈழவள நாட்டில் காணப்படும் திருத்தலங்களுள் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாக ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம் விளங்குகின்றது. இவ் ஆலயம் வடமராட்சி வடக்குப் பிரிவின் தொண்டமானாறுப் பகுதியில் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் மேற்கு எல்லையில் அமைந்திருந்து சொரிந்து வரும் பக்திப் பரவசத்தால் நாட்டின் நாற்றிசையிலிருந்தும் சந்நிதியான் அருள் வேண்டி அடியார்கள் புடைசூழ்வர். வூரலாற்றுத் தொன்மையும், புதுமைப்பொலிவும், தெய்வத்திருவருட் தன்மையும் கொண்ட செல்வச் சந்நிதியானின் பூசை வழிபாடுகள் தனிச் சிறப்பு மிக்கவையாகும். இவ்வாலய வரலாறானது கந்தபுராண வரலாற்றுடனும் தொடர்பு பெற்றிருப்பமை அதன் பழமைக்கும் மகிமைக்கும் மேலும் வலுவூட்டுகின்றன. மாணிக்க கங்கையருகே வீற்றிருந்து அருள் பாலித்து வரும் கதிர்காமக் கந்தனின் பூசை முறைகளைப் போன்று ஆகம வழிக்கமையாது வாய்கட்டிப் பூசை செய்யும் மரபு சந்நிதியானுக்கே உண்டு. அடியார்களின் நோய், பசி மற்றும் இன்னோரன்ன குறை தீர்க்கும் சந்நிதியானின் மகிமையை இத்திருத்தலத்தில் கூடிவரும் பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் நேர்த்திக் கடன் நிறைவேற்றுதலின் மூலம் அறிந்து கொள்ளலாம். "நம்பினோர் கைவிடப்படார்" எனும் நம்பிக்கைக் கூற்றினால் ஈர்க்கப்பட்டு நாளுக்கு நாள் பெருகி வரும் அடியார் கூட்டத்தின் திரட்சி சந்நிதியானின் அருள்பாலிப்பிற்கு மற்றொரு சாட்சியாகும்.

"அன்னதானக் கந்தன்" என்று செல்லப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டு வரும் செல்வச் சந்நிதியான் மகிமையை அறியாத இந்துப் பெருமக்கள் இலர் எனலாம். மகோற்சவ காலங்களில் கரை புரண்டு வரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கட்கு மட்டுமன்றி சாதாரண பூசைநாட்களிலும் தம் அன்பை நாடிவரும் அடியார்களின் பசி தீர்க்கும் பணியை ஆலயச் சுற்றாடலில் அமைந்துள்ள மடங்கள் மேற்கொள்ள இன்னருள் பாலிப்பதும் அன்னதானக் கந்தனே.

*வரலாற்று நீரோட்டத்தில் இன்னோரன்ன இன்னல்கள் பலவற்றைச் சந்தித்து சவால்களைச் சந்தித்து ஆலயத்தை புனரமைத்த நிர்வாகத்தினரைப் பாராட்டி வேற்பருமானை வணங்கி வாழ்த்துகின்றேன்*

K. [signature]
(கு.அமிர்தலிங்கம்)
செயலாளர்,
நகராட்சிமன்றம்,
வல்வெட்டித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தில்லையம்பலம் ஞாபகார்த்த் திருப்பணி தர்மகத்தா சபை
## Thillaiampalam Memorial Trust Fund

Selvachchannithi,
THONDAIMANARU


**President:**
T. Murugethaasan
18 / 2 , Fernando Road
Colombo - 06.
( 0112361536, 0714879169)
e-mail murugs@sltnet.lk

**Secretary:**
V.R. Shanmugalingam J.P
Main Street
Thondaimanaru
( 0776225085 )

**Treasurer:**
V. Thevendra Iyar J.P
Selvachchannithy,
Thondaimanaru
( 0602212914 , 0773526817)

**Member:**
A. Sivashanmugam Iyar J.P
Selvachchannithy,
Thondaimanaru.
( 0602216997 , 0773154544 )

**Member:**
( Vacant )


### வாழ்த்துரை

தெய்வீக திருவருட் தன்மை கொண்ட பழமை வாய்ந்த ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் சைவப் பெருமக்களின் மதிப்பிற்குரிய ஆலயமாகும். இவ்வாலயத்தில் தொன்றுதொட்டு பக்தி பூர்வமான மௌன பூசை பாரம்பரிய மரபிற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது உலகின் பலபாக சைவ மக்களும் இவ்ஆலயத்தில் அருள்பாலிக்கும் கந்தவேற்பெருமானை தியானித்து திருவருட் பிரசாதத்தை பெறுகின்றனர்.

பழமை வாய்ந்த போதும் காலச்சூழ் நிலைக்கேற்ப மரபு மாறா வகையில் பல்வேறு புனரமைப்பு பணிகளும் நிகழ்வுகளும் நடைபெற்று பொலிவு பெறும் வேளை எதிர்பாரா இன்னல் ஏற்பட்டது பெருமான் அருளால் அவை பனிபோல விலகி 1986ல் மகாகும்பாபிஷேகத்துடன் மீண்டும் வழமைச்செயற்பாடுகள் தொடரப்பட்டன.

பின்னரும் பல பணிகள் உருவாகி அண்மையில் இருபது வருடகாலத்தின் பின் 2006 பங்குனியில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது அத்துடன்உள்வீதியில் பெருமான் வீதியுலாக்கள் கும்ப ஆராதனைகள் அடியார்களின் நேர்த்திகள் மழை வெயில் அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் நிலையைப்போக்க ஸ்திரமான சுற்று மண்டபம் அமைக்கப்பெற்றது அனைவர்க்கும் பரம திருப்தி எனினும் இப்பணிகள் பூரணத்துவம் பெற்று ஸ்திரமான நிலையில் அமைக்க பெருமான் திருவருளும் அடியார்களின் பங்களிப்புகளும் வேண்டியுள்ளன பாரிய பிரயோசனமான என்றும் நிலைத்து நிற்கும் இப்பணிக்கு உதவுவது சிறந்த செயலாகும் எல்லாம்வல்ல பெருமான் திருவருளினால் யாவும் நலமாக அமைய அவன் நல்லருள் கிடைக்க வேண்டுதல் செய்கிறோம்.

தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்
## தொண்டைமானாறு
# வைத்திய சேவை ஆரம்பவிழா



காலம் : 05.03.2010 (மாசி 21) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி

இடம் : ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய [illegible] மண்டபம்

தலைமை : திரு. R. வைதீஸ்வரன் அவர்கள் (பிரதேச செயலாளர், பருத்தித்துறை)

கௌரவ விருந்தினர் : திரு. K. கணேசன் அவர்கள் (வலய அரச அதிபர்)

பிரதம விருந்தினர் : Dr. N. ஜெயக்குமாரன் அவர்கள் (புற்றுநோய் வைத்திய நிபுணர்)

சிறப்பு விருந்தினர் : Dr. K. கணேசானந்தம் அவர்கள் (பிரதேச வைத்திய அதிகாரி, பருத்தித்துறை சுகாதாரப் பிரிவு)

கந்தபுராணத்தொடர்புடையதும் பேரருட் தன்மை கொண்டதும் மூர்த்தி, தல, தீர்த்த மகிமை பெற்றதுமான சைவ மக்களின் பெருமதிப்பிற்குமுரிய ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் ஸ்தாபகர் திரு மருதர் கதிர்காமராலும் அவருக்குப்பின் அவரது சந்ததியினராலும் பூஜிக்கப்படும் தலமாகும். காலத்திற்குக் காலம் அதிகரித்துவரும் பக்தஅடியார்களின் பக்தி அருட் பிரவாகத்தால் ஆலயமும் சுற்றாடலும் புனிதம் பெறவும் சகலவழமைச் செயற்பாடுகள் மேலோங்கவும் பெருமான் திருவருளுடன் ஆலய பரிபாலன சபை நிர்வாகமும் தம்மாலான பங்களிப்புச்செய்ய வேண்டிய நிலைப்பாடுள்ளது. ஆலயத்திற்கு வருகைதரும் அடியார்கட்கு ஏற்படும் அவசர சிகிச்சைக்காகவும் ஆலயசுற்றாடல் மக்கள் நலமாகவாழ இச்சுற்றாடலில் ஒரு மருத்துவ சேவை அவசியமாகின்றது. அதுமட்டுமன்றி 5 கி.மீற்றருக்கு அப்பால்தான் வைத்திய வசதிகள் அமைந்திருப்பதாலும் கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் நிலையான சேவை ஒன்றினை வழங்கும் நோக்கிலும் இவ்வைத்திய சேவை ஏற்படுத்தப்படுகின்றது.

## செயற்பாடுகளும் நல்லுதவிகளும்

இவ்வாலயத்தில் வெள்ளி மற்றும் விசேட தினங்களில் அதிகரித்த வரும் அடியார்கள் நலன் மேம்படுத்தும் நோக்கில் இச்சேவை ஆரம்பிக்கப்படபோதிலும் நாட்டுநிலைமையும் பௌதிகவளக்குறைவு பொருளாதாரத்தில் ஸ்தரமற்ற தன்மையினாலும் இது நடைமுறைப்படுத்த முடியாதநிலையாகிவிட்டது எனினும் தற்போதைக்கு மாதமொருமுறை இச்சேவையினை ஆரம்பித்துப் படிப்படியாக இருமுறை மும்முறை என முன்னேற்றமாக்கி நிலையான கட்டிட மற்றும் வசதிகளுடன் செயற்படுத்த பெருமான் கடாட்சம் நல்லுள்ள, சேவை மனப்பான்மை கொண்டோர் நல்லாதரவுகளும் இன்றியமையாதன. எதிர்காலத்தில் நாமெல்லோரும் இதற்கு எம்மாலான நல்லாதரவுகளை அளிக்க முன்வருவோமாக.

## நன்றி

பல்லாயிரக்கணக்கானோர்வெளிப்படுத்திய இம்முயற்சிக்கு வித்திட்ட யாழ். போதனா வைத்தியசாலை ஊழியரும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆதரவாளருமான திரு.பொ.அருந்தவராசா, தில்லையம்பல ஞாபகார்த்த திருப்பணிச்சபைத் தலைவர் திரு.முருகதாஸன், யாழ் வர்த்தகசங்க உபதலைவர் திரு.R.ஜெயசேகரம், வவுனியா தெற்குகல்வியதிகாரி தொண்டைமானாறு திரு.கி.சிவப்பிரகாசம் ஆகியோருடன் ஆலய பரிபாலனசபை செயற்குழுவினரும் மேற்கொண்ட முயற்சியினை ஊக்குவிக்க ஆலோசனையளித்த கல்வித்திணைக்கள ஆலோசகர் திரு.தணிகாசலம்பிள்ளை அவர்கள் வழங்கிய ஆலோசனையுடன் யாழ் போதனாவைத்தியசாலை புற்றுநோய் வைத்திய சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி திரு.N.ஜெயக்குமார் அவர்களை கலந்தாலோசித்த தன்மையினால் இச்சேவை 05.03.2010 வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப நிகழ்வுகள் கோலாகலமாக நடைபெற்றதுடன் அன்று தொட்டு இச்சேவை மேம்பட தொடர்ந்துபல வைத்திய நிபுணர்களை ஒழுங்கமைத்து நடவடிக்களை மேற்கொள்வதுடன் அவர் மூலம் இச்சேவை என்றும் நிலைபெற வழிவகுக்கும் வைத்திய கலாநிதி திரு.N.ஜெயக்குமார் அவர்கட்கு எமது மனப்பூர்வமான நன்றியைத்தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சிகொள்கிறோம். அத்துடன் வித்திடடு ஊக்குவித்து ஆலோசனை வழங்கியோருக்கும், யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கும் மனப்பூர்வ நன்றிகள் உரித்தாகட்டும். இவ்விபரம் அறிந்து தற்போது லண்டனில் வாழ்ந்துவரும் சைவ சிகாமணி நீதியரசர் திரு.பொன். ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களின் புதல்வியார் டாக்டர் இந்திராசிவயோகம் குடும்பம் ஆலயத்திருப்பணிகளிலும் அக்கறை காட்டியதோடு இச்சேவைக்கும் வைத்திய உபகரணங்கள் அன்பளிப்பு செய்ததோடு லண்டனில் உள்ள மெடிக்கல் இன்ஸ்ரிரியூட் ஒவ்(ப்) தமிழ் (MIOT) நிறுவனம் இச்சேவைக்கு அன்பளிப்பு செய்யவும் பிற ஸ்தாபனங்களிடமும் உதவி பெற முயற்சிப்பதும் அதேபோலஇச்சேவைக்கு வித்திட்டவர்களும் இங்கு பல ஊக்குவிப்புக்களை பெற முயற்சிப்பதும் மிக்க நன்றிக்குரியதாகும் தொடர்ந்து பலரும் ஆக்கபூர்வ உதவியளித்து ஊக்கவிக்குமாறு பணிவுடன் கேட்கப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வைத்திய சேவையின் 1வது..நிகழ்வு

மேற்படி சேவை 05.03.2010ல் ஸ்ரீ செல்வச்சந்நிதி பெருமான் பூஜை வழிபாட்டுடன்ஆரம்பமாகியது. யாழ் போதனா வைத்தியசாலை புற்றுநோய் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி திரு.N.ஜெயக்குமார் அவர்கள் பிரதமவிருந்தினராகவும் அவருடன் Dr.T.சுசிதரன், Dr.சுபத்திரா ஆகியோரும் மற்றும் மருத்துவ உத்தியோகத்தவர்களும் வைத்திய மாணவர்களும் வருகைதந்திருந்தனர். பூஜை வழிபாட்டின்பின் புற்றுநோய் பற்றிய விளக்க விவரணங்களை உரிய படங்களுடன் பொது மக்களுக்க விரிவாக எடுத்துரைத்தனர்.

பின்னர் ஆலய பொது நல்நோக்கு மண்டபத்தில் நடைபெற்ற விசேடகூட்டததிலும் உரையாற்றினர். ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் வந்திருந்த நோயாளர்கட்கும் வேண்டியசிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. யாழ் அரச அதிபர் திரு.K.கணேஸ், பருத்தித்துறை பிரதேச செயலர் திரு.R.வரதீஸ்வரன் ஆகியோரின் வாழ்த்துச்செய்திகளும் இடம்பெற்றன. தொண்டைமானாறு தெற்கு கி.சேவையாளர் திரு.N.சேகர், ஆலய பரிபாலனசபைத் தலைவர் திரு.ஆ.சிவசண்முகஐயர் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கிய இந்நிகழ்வில் தொண்டைமானாறு சமாதான நீதவான் திரு.R.சண்முகலிங்கம், சமாதான நீதவான் திரு.வி.அரியராசா, இளைப்பாறிய இலங்கை வங்கி முகாமையாளர் தொண்டைமானாறு நீச்சல் வீரர் நவரத்தினசாமி இராமச்சந்திரன்,ஆலய திருப்பணிசபைத் தலைவர் திரு .தெ.சசீந்திரன், பொருளாளர் திரு.கு.திருமால் தொண்டைமானறு தெற்கு மாதர் சங்க நிர்வாகிகள் ஆகியோர் கலந்துகொண்ட இக்கூட்டம் பரிபாலனசபைச் செயலாளர் திரு.வி. தெய்வேந்திரஐயர் அவர்கள்நன்றியுரையுடன் இனிது முடிவெய்தியது. பரிபாலனசபை பொருளாளர் திரு வி. சுரேஸ்குமார் யாவரையும் அன்புடன் வரவேற்று உபசரித்தார்

## ஸ்ரீ செலவச்சந்நிதி ஆலய வைத்திய சேவை தொடர்ந்த 2வது நிகழ்வு

மேற்படி நிகழ்வு 09.05.2010ல் ஆலயச் சூழலில் அமைந்த நல்நோக்கு மண்டபத்தில் யாழ் போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி Dr.T.பேரானந்தராசா மற்றம் யாழ் போதனா வைத்தியசாலை சிரேஸ்ட வைத்தியர்களான Dr.M தவனருட் செல்வன் Dr.T.சுபாஸ் Dr.லக்ஸ்மன் Dr.M.H அப்துல் கரீம் Dr.F.R.மொகமின் Dr.B நிசாந்தி Dr நிசாட் மொகமட் Dr.Tதுஸ்யந்தன் ஆகியோர் வருகை தந்து பல்வேறு நோயாளர்கட்கு வேண்டிய சிகிச்சைகளும் இலவச மருந்துகளும் வழங்கப்பட்டன. ஆன்றைய தினம் 145 நோயாளர்கட்கு சிகிச்சையளிக்கப்பட்டபோது வவுனியா தெற்கு கல்வியதிகாரி திரு கி.சிவப்பிரகாசம் கோப்பாய்வலயக்கல்வி அதிகாரி திரு சித்திரவடிவேல் ஆகியோரும் வருகைதந்து மேற்படி சேவைகளை பாராட்டி ஊக்குவித்தனர்.

## ஸ்ரீ செலவச்சந்நிதி ஆலய வைத்திய சேவை தொடர்ந்த 3வது நிகழ்வு

மேற்படி நிகழ்வு 20.06.2010ல் நடைபெற்றபோது யாழ் போதனா வைத்திசாலை பொது வைத்திய நிபுணர்களான வைத்திய கலாநிதி Dr.திருமதி கௌரி செல்வரத்தினம், வைத்திய கலாநிதி Dr.T.குமணன் மற்றும் சிரேஸ்ட வைத்தியர்களான Dr.K.காயத்திரி Dr.K தமயந்தி Dr.அனில் விஜயசிங்க Dr.K.ராஜயந்தி Dr.N பிரதீப் Dr.s.c தென்னக்கோன் Dr.B சயந்தன் ஆகியோர் வருகை தந்து சிகிச்சை மேற்கொண்டபோது 102 பல்வேறு நோயாளர்களும் சிகிச்சைகளும் இலவச மருந்துகளும் வழங்கப்பட்டன.



வைத்திய சேவை ஆரம்பவிழாவில் பிரதம சிரேஸ்ட பூசகர் திரு.க. உலககுருநாத ஐயர் பூசை வழிபாடுகளைநடாத்துகின்றார்



டாக்டர் .என். ஜெயக்குமார் ஆரம்பதினத்தன்று நோயாளரைப் பார்வையிடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வைத்திய சேவை

**நோக்கம்:** இவ்வாலயப் பகுதியிலிருந்து 25 கி.மி தொலைவில் யாழ்போதான வைத்தியசாலையும் 10 கி.மி தொலைவில் மந்திகை ஆதார வைத்தியசாலையும் 5 கி.மி அப்பால் வல்வை ஊறணி(இந்திராணி) வைத்தியசாலை அமைந்திருப்பதால் இப் பகுதி மக்களுக்கும், ஆலயப்பகுதியில் தங்கியுள்ள அநாதைகளுக்கும் திருப்திகரமான வைத்திய வசதி இல்லாத காரணத்தினாலும், ஆலயத்திற்கு வருகை தரும் அடியார்கட்கு திடீரென ஏற்படும் சுகயீனங்கட்கும் வைத்திய வசதியளிப்பதே முக்கிய நோக்கம்.

**ஆரம்பம்:** பல்வேறு முயற்சிகளின் பலனால் இவ் வைத்திய சேவை 05.03.2010ல் யாழ் புற்று நோய் சிகிச்சை வைத்திய நிபுணர் திரு N.ஜெயக்குமார் அவர்களும் மற்றும் அவரது குழுவினராலும் இவ்வாலய பொது நல்நோக்கு மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இச் சேவைமாதமொரு முறை யாழ் போதான வைத்தியசாலை பிரபல வைத்திய நிபுணர்களான DR.T.பேரானந்தராஜா, DR.T.குமணன் DR.S.லக்ஸ்மன்,DR. கௌரி செல்வரட்ணம், DR.P.அச்சுதன் ஆகியோரும் அவர்களது குழுவினரும் மந்திகை ஆதார வைத்தியசாலை DR.B.ஹரிகரன், மந்திகை ஆதார வைத்தியசாலை ஓய்வு பெற்ற மாவட்ட வைத்திய அதிகாரி DR.S கதிரவேற்பிள்ளை ஆகியோரும் மனமுவந்த சேவைகளை வழங்கினர். இச்சேவையின் அனைத்து தினங்களிலும் யாழ் போதான வைத்தியசாலை ஊழியர் திரு.P.அருந்தவராசா மிக்க ஆர்வத்துடன் வேண்டிய சகல உதவிப்பணிகளையும் செய்திருந்தார்..

**உதவிகள்:** இவ் வைத்திய சேவைகள் ஆரம்பிக்க முற்படுகையிலே திரு. முருகதாஸ் திரு.கி.சிவப்பிரகாசம் கல்வி ஆலோசகர் திரு P தணிகாசலம் பிள்ளை ஆகியோர்களது ஆக்க பூர்வமான ஆலோசனைகளும் பல்வேறு உதவிகளும் நல்லுதவிகளாயின.இதன் பிரகாரம் லண்டன் DR.இந்திரா சிவயோகம் அவர்களின் முயற்சியால் லண்டன் மெடிக்கல் இன்ஸ்ரியுட் ஒப் தமிழ் ஸ்கொட் நிறுவனம் ஆகியனவும் DR. இந்திரா சிவ யோகம் லண்டன் ஆறுமுகம் கல்பனா தெண்டைமான் ஆகியோர் நிதி உதவி செய்தமையால் வைத்திய உபகரணங்களும் மருந்து வகைகளும் பெறப்பட்டு சிகிச்சை பெறுவோருக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன

**வளர்ச்சி:** கடந்த ஓராண்டு காலமாக செயற்பட்டு வரும் இவ் வைத்திய சேவை மேம்படும் பொருட்டு ஆரம்ப சுகாதார நிலையம் நிரந்தரமாக அமைக்கப்பட்டு தொடர்ச்சியாகன வைத்திய சேவை நடை பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.இதன் பயனாக சென்ற 10.4.2011ல் அத்திவாரமிடப்பட்டு பலரது அயராத முயற்சியால் கட்டிடம் முற்றுப் பெற்று 27.8.2011ல் பணிகள் ஆரம்பிக்கும் இப்பணியில் வட மாகண சுகாதார சேவைகள் சேவைகள் அமைச்சு செயலாளர் திரு. இ. ரவீந்திரன் அவர்கள் விசேட அக்கறை கொண்டு செயலாற்றுவது பெருமகிழ்ச்சியாகும்.

**முயற்சி:** மேற்படி ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க நீர்ப்பாசன இலாக பொறியிலாளர் திரு K கருணாநிதி அவர்களின் ஆலோசனை பிரகாரம் யாழ் அரசாங்க அதிபர் திருமதி இமெல்டாசுகுமார் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் DR.A கேதீஸ்வரன் ஆகியோரது ஊக்குவிப்பினால் வவுனியா துரித மீளெழுச்சித் திட்ட பணிப்பாளர் திரு S. சிவகுமார் அவர்கள் மூலம் இவ்முயற்சி கை கூடியது இம்முயற்சிக்கு ஆலய உரிமையாளர்கள் அனுசரணையுடன் காணியும் பெறப்பட்டு யாழ் கட்டிட திணைக்கள பிரதம பொறியலாளர் திரு K. குகனேசன் அவர்களின் சீரிய செயல்பாடும் காரணிகள் ஆகின்றன.

**நன்றி:** இப்பகுதியில் வைத்திய சேவை தொடர்ந்து மேம்பட வித்திட்டஅனைவருக்கும் மனப்பூர்வநன்றி.

**நல்வாழ்த்து:** மேற்படி சேவையின் மேம்பாட்டிற்காக நல்லுதவிகள் சேவைகள் வழங்கிய அனைவருக்கும் எமது இதயபூர்மான நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

நன்றி

சுபமங்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வு பெற்ற மாகாண கல்வி பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

"போய் பார்த்தால் தான் தெரியும் சந்நிதியானை, போய் பார்த்தால் தான் தெரியும் சந்நிதியானை" என்ற பாடல் வசனம் நல்லூர் முருகனின் வாசலில் வடக்குப் பக்கத்தில் முருகன் அடியார்கள் வாயில் பக்தி பரவசத்துடன் ஒலித்தவை.

போய் பார்த்த அடியார்கள் அவன் அருளால் அவன் தாள் பணிந்து பரவசமானார்கள். அன்னக்கந்தன், ஏழைகளின் எளிய கந்தன் என்றெல்லாம் உலகம் முழுதும் கருணை வேண்டி என்கித்துதிக்கும் எம் உள்ளம் கவர்ந்த கந்தன்.

ஓலைக்குடிசையில் குடி கொண்ட சேயோன், வாய்கட்டி வீபூதித்தட்டில் கற்பூர ஒளியூட்டி அடியார்களை அரவணைக்கும் அன்னக் கந்தன். ஆலயத்தின் மேற்கே கடல் வடக்கு, கிழக்கு, தெற்கு சூழ அன்னதான மடங்கள். அன்னப்பூசையுடன் வயிற்றுப்பசிக்கு எங்கும் அடியார்க்கு பக்தி யுடன் அன்னத்தையும் அள்ளி வயிராரக்கொடுப்பவர் சந்நிதியான்.

மடங்கள் வழங்கும் அன்னதான பணி போல் ஆலயப்பூசை முடிந்ததும் ஆலயத்தில் வடக்குப்புறத்தே ஆலயத்திலேயே அன்னதானம் வழங்கப்படுகிறது. மடங்களில் அன்னதானம் பெற்றுக்கொள்வதை விட ஆலயப்பூசையுடன் அன்னத்தைப் பெறுவதை ஆலய அடியார்கள் பெரிதாக கருதுகின்றனர்.

ஆலய மடத்தில் ஆலமர இலையில் அமுதும் கறியும் வழங்குவது சுவையை அள்ளித்தருவதாகும்.

இச்சுவையுடன் ஆலய நிர்வாகத்தினர் கல்விச்சேவையான கணணிச் சேவை, சமூகசேவை, வைத்திய சேவை ஆகிய பணிகள் சமூக பணிக ளாக கொள்ளப்படுகின்றன. வைத்திய சேவைக்கென ஆலய பரிபாலன சபையின் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்து, யாழ் போதனா வைத்திய சிறப்பு நிபுணர்கள் வாரமுடிவில் பணியாற்றுகின்றனர். குறிப்பாக, வைத்தியர் T . ஜெயக்குமார் புற்றுநோய் வைத்திய நிபுணர் தலைமைப் பணியை ஏற்றமை பாராட்டுக்குரியது.

இவ்வொழுங்கமைப்பிற்கு பொறுப்பான திரு. வி. தெய்வேந்திரஐயர், செயலாளர் ஆலய பரிபாலன சபை அவர்களின் செயற்பாடு பாராட்டுதற்குரியது.

சந்நிதி அடியான்
Dr. S. N. தணிகாசலம்பிள்ளை
ஓய்வு பெற்ற மாகாண கல்வி பணிப்பாளர்,
மத்திய அமைச்சின் கல்வி ஆலோசகர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம்

தொண்டைமானாறு

ஆலய வைத்திய சேவைக்கான ஆரம்ப சுகாதாரக் கட்டிட

அத்திவாரமிடும் வைபவம்

காலம் : 10.04.2011 பங்குனி 27 ஞாயிறு காலை 9.00 - 10.30

இடம் : [illegible]

தலைவர் : திரு. R. [illegible] அவர்கள் [illegible]

[illegible] - [illegible] (ENREP)

Dr. A. [illegible]

Dr. N. [illegible]

திரு. K. [illegible]

[illegible]

நன்றி

சுபமங்களம்

ஆலய உபயகாரர்கள்

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்

## ஆலய வைத்திய சேவைக்கான ஆரம்ப சுகாதாரக் கட்டிட அத்திவாரமிடும் வைபவம் அழைப்பிதழ் 10.04.2011

## அத்திவாரமிடும் விழாவிற்கு வருகை தந்த பிரமுகர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ENREF திட்டப் பணிப்பளர்
Dr.S.சிவக்குமார் அத்திவாரமிடுதல்



Dr.N.ஜெயக்குமார்
அத்திவாரமிடுதல்



அத்திவாரமிடும் நிகழ்விற்கு தலைமையுரை நிகழ்த்தும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் திரு. ஆர். வரதீஸ்வரன், யாழ்.கட்டிடத் திணைக்கள பிரதம பொறியிலாளர் திரு.கே.குகநேசன் அவர்களும் காணப்படுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம்

தொண்டைமானாறு

ஆலய வைத்திய சேவைக்கான ஆரம்ப சுகாதார
நிலையப் பணிகள்
ஆரம்ப விழா

# ஆலய வைத்திய சேவைக்கான ஆரம்ப சுகாதாரக் கட்டிட திறப்பு விழா அழைப்பிதழ் 27.08.2011

## ஆலய நிர்வாகத்தால் ஆரம்பிக்கப்பட்ட வைத்திய சேவைக்கான பணிமனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப சுகாதார பணிமனை ஆரம்பவிழாவில்
முன்னாள் யாழ்.அரச அதிபர் திருமதி இமில்டா சுகுமார்



ஆரம்ப விழாவில் டாக்டர்.எஸ்.சிவக்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப விழாவில் வட மாகாண
சுகாதாரச் செயலாளர் திரு.ஆர். இரவீந்திரன்




ஆரம்ப விழாவில் சுகாதார சேவை பணிமனை
பணிப்பாளர் டாக்டர். ஏ. கேதீஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப விழாவில் கண் வைத்திய நிபுணர்
டாக்டர் சந்திரகுமார்



ஆரம்ப விழாவில் வடமராட்சி பிரதேச செயலாளர்
திரு.ஆர். வரதீஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயம், தொண்டைமானாறு செயற்பாடுகள்

ஆலய செயற்பாடுக கந்தபுராணத் தொடர்புடைய வரலாற்று மகிமை கொண்ட தொன்மை மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் உலகின் பலபாக சைவமக்களின் பெருமதிப்பிற்குரிய புனித ஆலயமாகும். இவ்வாலயம் சைவ மக்கள் மட்டுமன்றி ஏனைய மத மக்களும் வழிபடும் பக்தித்திருத்தல்மாக உள்ளது ஆரம்பத்தில் ஓலைக்குடிசையாக இருந்த இவ்வாலயத்தை ஸ்தாபகர் திரு மருதர் கதிர்காமரும் அவரது சந்ததியினரும் காலத்திற்குக்காலம் பழையமரபும் அமைப்பும் மாறாவகையில் பிள்ளையார் முன் மண்டபம் ,ஆறுமுகப்பெருமானுக்குகான தேவஸ்தானம் ,வைரவர் பெருமானுக்கான தேவஸ்தானம் அமைந்து ஆலயத்தை மேலோங்கச் செய்தமையால் அடியார்களும் ஆலயப்பணிகளிலும் பூசை வழிபாடுகளிலும் ஈடுபட்டு மனத்திருப்தி பெறுகின்றனர். இவ்வாறான சிறப்புமிகு ஆலயம் துரதிஸ்ட வசமாக 1986இல் ஏற்பட்ட வன்முறைச்சம்பவங்களினால் ஆலயக்கட்டிடங்கள் காண்டாமணி மணிக்கோபுரம் சித்திரத்தேர் மண்டபம் பெருமான்வீதி உலாவரும் வாகனங்கள் யாவும் சேதமாகியதுடன் ஆலய உரிமையாளர்களின் இல்லங்கள் மடங்களும் சேதமாகின. வன்முறை ஓய்ந்தபின் ஆலயம் புனரமைக்கப்பட்டு 20.03.1988 இல் மகாகும்பாபிஷேகத்துடன் வழமைச்செயற்பாடுகள் நடைபெற்றன படிப்படியாக மண்டபங்ள் புணரமைக்கப்பட்டு மணிக்கோபுரம் காண்டாமணி சித்திரத்தேர்கள் பூங்காவன மண்டபம் ஆகியன உருவாகின. அக்காலத்தில் சுண்ணாம்புக்கலவையினால் அமைக்கப்பட்ட ஆலயப்பகுதிகள் சீமெந்துக்கலவையினால் ஸ்திரமாக்கப்பட்டதுடன் காலத்திற்கேற்ப அமைப்பு மாறாவகையில் அழகுற அமைக்கப்பட்டது இதனால் 07.04.2008 இலும் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து உள்வீதிச்சுற்று மண்டபம் 1கோடி81இலட்சம் மதிப்பீட்டில் பணி நடைபெற்றது அவ்வருட மகோற்சவத்தின் முன்பதாகவே 1/3பங்கு முற்றுப்பெற்றது. ஆனாலும் ஒப்பந்த காரருக்கு 65இலட்சம் கடன் பாக்கியாக இருந்து அந்நாளில் நாட்டில் ஏற்பட்ட அனர்த்த சூழ்நிலையால் மிகுதிக்கடன் தீர்க்கப்படாமல் அண்மையில்தான் தீர்க்கப்பட்டது. உள்வீதி சுற்றுமண்டபம் அமைக்கப்பட்டதனால் பெருமான் நிகழ்வுகளும் அடியார்கள் நேர்த்திகளும் வெயில் மழைத் தாக்கமின்றி மனமகிழ்வுடன் நடைபெறுவது யாவருக்கும் பரம திருப்தியாகின்றது. 10.04.2009இல் ஆலயத்திற்கான இணையத்தளம் யாழ் அரச அதிபர் திரு.k.கணேஸ் ,மேலதிக அரச அதிபர் திரு.ஆ சிவசுவாமி பிரதேச செயலாளர் திரு .இ.வரதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்ட சிறப்பு விழாவினால் ஆரம்பிக்கப்பட்டது இப்பணிக்கு மிருசுவில் திரு.சி.பிரதீப் அவர்களின் உற்சாகமும் யாழ் பல்கலைக்கழக மாணவி செல்வி அகிலா அகிலேந்திர ஐயர் அவர்களின் நல்லுதவிகளும் ,மிருசுவில் இளைப்பாறிய அதிபர் திரு .S. நடராசா குடும்பத்தினரின் அன்பளிப்பினால் கணணியந்திரமும் பெறப்பட்டு இன்று திருநெல்வேலி T.T கணிணி ஸ்தாபனத்தால் சிறப்பான சேவைகளும் நடைபெறுகின்றன.

07.04.2008 மகா கும்பாபிஷேக நிகழ்வுகள் 28.08.2008இல் சுற்றுமண்டப திறப்புவிழா நிகழ்வுகள் மற்றும் 10.04.2009 இல் இணையத்தள ஆரம்பவிழா நிகழ்வுகள் ஒலி ஒளிப்பதிவு நாடாக்கள் மூலம் உலகின் பலபாக மக்களுக்கும் அன்பளிப்பாக வழங்கப்பட்டதனால் பேரானந்தம் அடைந்தனர் ஆலய உள் வீதிக்கான சுற்று மண்டபப்பணி பாரிய மதிப்பீட்டைக் கொண்டு அமைக்கப்பட்டதினால் பெருமான் நிகழ்வுகளும் அடியார்கள் நேர்த்திகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயில் மழைத்ததாக்க மின்றி எல்லோருக்கும் மிகுந்த திருப்தியை அளிக்கின்றது இவ்வாலயத்தில் வன்முறைக்குப்பின் மணிக் கோபுர புனரமைப்பு முதல் நந்தி மண்டபம் ஆலய மூலஸ்தானங்கள் சுற்று மண்டபம் திருப்பணிக் காரியாலயம் மடைப்பள்ளி களஞ்சிய அறை ஆகிய புனரமைப்புப்பணிகளை அழகுற அமைத்து ஆலயத்தை மிளிரச்செய்த வடமராட்சி ரூபின்ஸ் ஸ்தாபனம் பாரட்டுதலுக்குரியது. வன்முறைச்சம்பவங்களினால் சேதமான சரஸ்வதிமண்டபம், வாகனசாலை புனரமைக்கப்பட்டன. ஆரம்பகால முதல் பல்வேறு அன்பர்களும் பெருமானுக்குரிய வாகனங்களை அன்பளிப்புச் செய்து உற்சவங்களில் பங்கு கொண்டும் பராமரித்தும் வருகின்றனர்

இதேவேளை ஆலயநிர்வாகத்தின்சிறப்புச் செயற்பாடுகளான நித்திய அன்னதானப்பணியும் வைத்திய சேவைப் பணியும் மேலோங்கி வருகின்றன. இவ்வாலயத்தில்முதலில் பூசை நேர்த்தியை ஆரம்பித்த இவ்வூர் ஆண்டியப்பர் அன்னதானப்பணியையும் ஆரம்பித்து இன்றும் அவரது சந்ததியினரால் கார்த்திகை கடைசி ஞாயிறு தினத்தில் ஆண்டியப்பர் பூசையும் அன்னதான நிகழ்வும்சிறப்பாக நடாத்தப்படுகின்றன. தற்போதுஆலய மதிய பூசை முடிந்ததும் ஆலயத்திற்கு வருகைதரும் அடியார்களுக்கு ஆலயத்திலேயே அன்னதானம் வழங்கப்படுகிறது. வெளிநாட்டிலிருந்து வருகைதரும் அடியார்கள் இவ் அன்னதானப்பணியினை பாராட்டி ஊக்குவிக்கின்றனர். ஓய்வுபெற்ற இலங்கைவங்கி முகாமையாளர் திரு சிவசுப்ரமணியம் அவர்கள் தனக்குரிய சுன்னாகக் கடைகளின் வாடகை வருமானத்தை எமது நித்திய அன்னதானப்பணிக்கு சாசனமாக அளித்துள்ளது பாராட்டுதலுக்குரியது. மடங்களில் அன்னதானத்தைப் 'பெற 'றுக்கொள்வதைவிட ஆலயத்தில் ஆலயத்தில் பெற்றுக்கொள்வதை பெரி தாக அடியார்கள் பலரும் கருதுகின்றனர். இந்நித்திய அன்னதானத்திற்கென பிரத்தியேக மண்டபம் அமைந்து அன்னதானப்பணி மேலோங்க வேண்டும்.

05.04.2010இல் இவ்வாலய விசேடதினங்களிலும் வெள்ளிக்கிழமைகளிலும் இங்குவருகைதரும் அடியார்கட்கும் சுற்றாடல் மக்களுக்கும் வைத்திய சேவை வழங்கும் பொருட்டு யாழ் போதனவைத்திசாலை புற்றுநோய் வைத்திய நிபுணர் **Dr. T.** ஜெயக்குமார் அவர்களால் இலவச வைத்திய சேவை ஆரம்பிக்கப்பட்டு மாதமொருமுறை பிரபல வைத்திய நிபுணர்கள் வருகைதந்து இப்பகுதி மக்களுக்கு வைத்தியவசதியளிக்கப்பட்டது. இத னால் இவ்வைத்திய சேவைக்கென ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் பணி வித்திடப்பட்டு இன்று நிரந்தர நிலையம் அமைக்கப்பட்டு வைத்திய சேவைகள் தொடர்கின்றது. யாழ் அரச வைத்தியசாலை ஊழியர் திரு .இ .பொ . அருந்தவராசா மிகுந்த அக்கறை கொண்டு உதவியும் இச்சேவை ஆரம்பித்த நாள் முதல் இன்று வரை வல்லை வீதி செல்வி இ. தர்ஸினி உற்சாகமாக தற்காலிக உதவியாளராக பணியாற்றுவது குறிப்பிடத் தக்கதாகும். இவரது சேவை நிரந்தரமாக்க மேலதிகாரிகள் கவனம் செலுத்துமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயற்பாடுகளுக்கு நீர்பாசன இலாகப்பொறியியலாளர் திரு **K.** கருணாநிதி அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் யாழ் அரசாங்க அதிபர் திருமதி இமெல்டாசுகுமார் யாழ்பிராந்திய சேவைபணிப்பாளர் **DR. A.**கேதீஸ்வரன் ஆகியோர்களது ஊக்குவிப்பால் வவுனியா துரித மீட்சித்திட்ட பணிப்பாளர் **Dr.S.**சிவகுமார் அவர்கள் மூலம் இம்முயற்ச்சி கைகூடியது. இம்முயற்ச்சிக்கு ஆலய உரிமையாளர்களின் அனுசரணையுடன் காணியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறப்பட்டு யாழ் கட்டிடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் திரு K.குகனேசன் அவர்களின் சீரியசெயற்பாடுகளும் வடமாகாண சுகாதார சேவைகள் அமைச்சுச் செயலாளர் திரு. R. இரவீந்திரன் அவர்களின் நல்லுதவிகளும் காரணிகளாகின்றன இதனால் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் 10.04.2012 அத்திவாரமிடப்பட்டு துரிதகதியில் கட்டப்பட்டு 27.08.2012 இல் நிலையப் பணிகள் ஆரம்பவிழா நடைபெற்றது. ஆரம்ப விழா பரு பிரதேச செயலர் திரு. R. வரதீஸ்வரன் அவர்கள் தலைமையில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் அவர்களும் மற்றும் விசேட சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் திரு. R. இரவீந்திரன், துரித மீளெழுச்சித் திட்டப் பணிப்பாளர் Dr. S. சிவகுமார், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் Dr. A. கேதீஸ்வரன், யாழ். புற்றுநோய் வைத்தியநிபுணரும் ஆலய வைத்தியசேவை ஸ்தாபகருமான Dr. T. ஜெயக்குமார், யாழ். கண்வைத்திய நிபுணர் Dr. சந்திரகுமார், Dr. சுசிதரன், யாழ். கட்டிடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் திரு. K. குகநேசன், வல்வை நகரபிதா திரு. N. அனந்தராஜ், வல்வை உறணி வைத்தியசாலை வைத்திய நிபுணர் Dr. மயிலேறும்பெருமாள் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை பெருமகிழ்ச்சிக்குரியதாகும். இவ் ஆரம்ப சுகாதார நிலைய சேவை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய சமூகசேவை அபிவிருத்திப் பணியில் சிகரமாக விளங்குகின்றது. அத்துடன் யாழ். அரசஅதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் அவர்களின் ஆலோசனைக்கு அமையவும் வடமாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் திரு R. இரவீந்திரன் அவர்களின் பெருமுயற்சியாலும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் Dr. A. கேதீஸ்வரன் அவர்களின் ஒத்துழைப்பினாலும் சென்ற தைப்பூச தினமான 07.02.2012 முதல் இவ் ஆரம்ப சுகாதார நிலையத்தில் வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி தினங்களில் அம்பன் வைத்தியசாலை Dr. K. நடராசா அவர்கள் இப்பகுதி மக்களுக்கு வைத்திய சேவை வழங்கி வருகின்றார். அது மாத்திரமன்றி எமது பரிபாலன சபையின் விடாமுயற்சியால் 14.06.2012 முதல் செவ்வாய் வியாழன் தினங்களில் அச்சுவெலி மாவாட்ட வைத்திய அதிகாரி Dr.N.விமலேந்திரன் அவர்களும் இவ் வைத்திய சேவையை தொடர்கின்றனர். விரைவில் பகல் நேர சேவையும், விசேட கிளினிக்குகளும் ஆரம்பிக்கவுள்ளன. இச் செயற்பாடுகளுக்கு முன்னாள் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. K. சிவப்பிரகாசம் அவர்களின் விடாமுயற்சி பெருந்துணையாக இருந்ததை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க வேண்டியுள்ளது. ஆலயச் சுற்றாடலில் மது விற்பனை ,மது பாவனைத் தொல்லைகள் அத்துடன் அரங்கேறும் இளஞ்சோடிகள் ஆலயச் சுற்றாடலை பொழுது போக்கு பூங்காவாகக் கருதிச் செயல்படுவது இவர்கள் பயணிக்கும் வாகனங்கள் மீது நடவடிக்கை போன்றவை அகற்ற வல்லைப் பொலிசார் மிகுந்த அக்கறை கொண்டு தகுந்த நடவடிக்கை மேற்கொள்வதும் குறிப்பிடத்தக்கதாகும் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை குட்படுத்த அவசர சேவைப்பிரிவு ஒத்துழைப்பு நல்கவுள்ளது

1989 வன்முறையில் அழிக்கப்பட்ட சித்திரைத் தேருக்கு ஈடாக முன்னர் இந்து கலாச்சார அமைச்சர் அமரர் திரு .மகேஸ்வரன் அவர்கள் அன்பளிப்புச் செய்த தேர் பாதுகாக்கும் தேர்முட்டி அமைப்புக்கதவுகள் பழைய தகரங்களாலும் கிடுகுகளாலும் மூடப்பட்டு ஆலய முகப்பு அனைவருக்கும் அதிருப்தியைத் தருின்றது. ஆலய நிர்வாகத்தினரும் அடியார்கள் பங்க ளிப்பினால் பிள்ளையார்,ஆறுமுகசாமி பெருமான்களுக்கான சித்திரத் தேர்களும் உருவாக்கியுள்ளனர். வல்வை திரு. குழந்தை வேலு குடும் பத்தினர் பெருமானுக்கு சப்பறம் அன்பளிப்புச் செய்து ஸ்திரமாக் கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்பெருமாள், பிள்ளையார், ஆறுமுகப் பெருமான் சித்திரத் தேர்களும் சப்புறமும் தற்போது தேர்முட்டிக் கொட்டகையில் பாதுகாக்கப்படுகின் றது அடைப்புக் கதவுகள் அழகுற சிறப்பாக நவீன முறையில் அமை க்க நிர்வாகம் மேற்கொண்டுள்ளது. இப்பணியை மேற்கொள்ள கொழும்பு லான்மார்க் நிறுவனம் 35 லட்சம் மதிப்பீடு செய்து சப்பறம் அன்பளிப்பு செய்த வல்வை திரு.குழந்தை வேலு குடும்பத்தினர் வழங்கிய 5 லட்சம் ரூபா முற்பணமாக வழங்கப்பட்டுள்ளது. மீதிப்பணம் வழங்காமையால் பணி தொடராதிருக்கின்றமை வேதனையாகும். விரைவில் இப்பணி முற்றுப் பெற்று ஆலய முகப்பு அழகுற அமைய அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

அண்மையில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. அ. சண்முகதாஸ் குடும்பத்தினரும் ஹரிகரண் பிறின்ரேஸ் நிறுவனத்தினரும் இணைந்து வெளியிட்ட "ஆற்றங்கரையான்" நூல் வெளியீடு சம்பந்தப்பட்டவர்களுக்கு கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டதுடன் உலகின் பல பாக மக்களுக்கும் உணர்த்தப்பட்டது.

மேலும் ஆலய உள்வீதியில் வாகனங்கள் உட்செல்வதை அனுமதிக்காது அத்திவார கட்டுமானம் அமைத்ததுடன் நிரந்தரக் கடைகள் அமைந்த இடத்திற்கு இப்பால் வியாபாரங்கள் நடைபெறுவதை தடைசெய்யப்பட்டு வருகைதரும் அடியார்கள் மரநிழல்களில் தங்கி வேண்டிய இடங்களிற்கு பிரயாணம் செய்யத்தக்கதாக வசதியளிக்கப்பட்டுள்ளது. இதைவிட மலசலகூட கட்டிட வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. 2009முதல் ஆலயச்சூழலுக்கு யாழ் நீர்பாசன இலாகா பொறியியலாளர் **T.**கருணாநிதி அவர்கள் மூலம் முன்னாள் அரசாங்க அதிபர் திரு **K.** கணேஸ் அவர்கள் நீர் விநியோகத்தை ஏற்படுத்தி அடியார்களுக்கு நீர் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

2007முதல் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தின் வசதிகுறைந்த மாணவர்கட்கு மாதாந்தம் 4500/= தற்பொழுது 5000/=வும் கைதடி கண்பார்வையற்றோர் சங்கத்திற்கு 1000/= வும் வழங்கப்படுகின்றது. 2011முதல் இராமநாதன் பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவில் கல்வி பெறும் நான்கு மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் பணமாக 1000/= வீதம் வழங்கபடுகிறது. தற்போது 10மாணவர்களுக்கு ஊக்குவிப்பு பணமாக 1000 /= வீதம் வழங்கப்படுவதால் இம் மாணவர்களின் எதிர்காலம் சிறப்படைய எமது நிர்வாகம் நாட்டம் கொண்டுள்ளது. சென்ற மகோற்சவ காலத்தில் ஆற்றங்கரைவேலவன் ரக்ரர்சேவைப்பகுதியினரால் (ஆதிபரம் குடும்பம்) ஆலயத்திற்கென தண்ணீர் பவுசர் அன்பளிப்புச் செய்யப்பட்டு மகோற்சவ காலத்தில் தண்ணீர் பற்றாக்குறையை போக்கியதுடன் ஆலயவீதிக்கும் தண்ணீர் வழங்கப்படுகிறது. அது மட்டுமன்றி ஆலய பகல் விசேட நிகழ்விற்கும் ஆலயவீதி தண்ணீரினால் குளிர்மையாக்கப்படுகின்றது. அடுத்து ஆலயத்திற்கான மின்சாரத்தேவைகளை ஆலய நிர்வாகம் சிறப்பாக்கி வருகின்றது. அமரர் செ. விசாகரத்தினஐயர் குடும்பம் வழங்கிய 5**KW** மின்பிறப்பாக்கியும் ஆலய உரிமையாளர் திரு. அ. லோகேஸ்வரஐயர் உதவியுடன் ஆலய நிர்வாகம் பெற்ற 10 **KW** மின்பிறப்பாக்கியும் அண்மையில் தொண்டைமானாறு கே. சம்பந்தமூர்த்தி குடும்பத்தினர் வழங்கிய மின்பிறப்பாக்கியும் மற்றும் திரு. றொபின் மாத்தையா வழங்கிய மின்பிறப்பாக்கிகளாலும் ஆலய நிர்வாகம் மின்சாரத் தேவைகளை சிறப்பாக்கி வருகின்றது. ஆரம்பகாலத்திலிருந்து ஆலயத்திற்கு மின்சாரதேவைகளை வழங்கிய வல்வை பேபிசோடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபனத்தினர் (சிவசுப்ரமணியம் குடும்பத்தினர்) தற்போதும் மகோற்சவ காலங்களிலும் மற்றும் கந்தசஷ்டி தினங்களிலும் தொடர்ந்து வழங்குகின்றனர். சென்ற சில வருடங்களாக தொண்டைமானாறு விநாயகர் மின் அமைப்பினர் ஆலயசுற்றாடலுக்கு மின்சார தேவைகளை வழங்குகின்றனர். 2011முதல் தொண்டைமானாறு வீரமாகாளி அம்மன் மின்அமைப்பினரும் ஆலய சுற்றாடலுக்கு மின்சார தேவைகளை வழங்குகின்றனர். இதனால்மின்சாரசபை அடிக்ககடி ஏற்படுத்தும் மின் தடைபற்றி கவலைப்படாது ஆலய சுற்றாடல் மின்சார வெள்ளத்தில் அலை மோதுகிறது. ஆலய நிர்வாகம் சென்ற மஹோற்சவ காலத்தில் யாழ்.அரசாங்க அதிபர் திரு.அருமைநாயகம் அவர்களிடம் அச்சுவேலி தொண்டைமானாறு பன்னெடுங்காலமாக புனரமைக்கப்படாததை சுட்டிக்காட்டியதன் விளைவாக தற்போது இப்பாதையும் புனரமைக்கப்பட்டுள்ளது

இவ்வருடம் நாகர்கோவில் திரு. அ. அழகராசா குடும்பத்தினர் வழமைபோல் ஆலயத்திற்கு முழுமையான வர்ணப்புச்சுக்களை மிகுந்த பொறுப்புடன் சிறந்த முறையில் செய்துள்ளனர்.. இதனால் இன்று ஆலயம் புதுப் பொலிவுடன் யாவர்க்கும் திருப்தியளிக்கின்றது.

சுற்று மண்டபத்தில் வலது பக்க முகப்பில் பணியினைப் பூர்த்தியாக்க லண்டன் கணபதி ஆலய முகாமையாளர்கள் சுமார் 5 லட்சம் வரை வழங்க முன் வந்துள்ளனர். எஞ்சிய பணிகளும் தேர்க்கொட்டகைப் பணிகளும் முற்றுப் பெற வேற்பெருமான் திருவருளும் அடியார்கள் பங்களிப்புகளும் அவசியமாகின்றது. எதிர்காலத்தில்அடியார்களுக்கு மனத்திருப்தி ஏற்படுத்தி ஆலயப்பகுதி மேலோங்கி அனைவரும் எம்பெருமான் திருவருள் பெறுவோமாக.

சுபமங்களம்

நன்றி

வி. தெய்வேந்திரஐயர் **(JP)**



**வி.தெய்வேந்தி ஐயர் கதிர்காமத்தில் வழிபாடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



**தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பரிபாலன சபை**
**THONDAIMANARU SRI SELVASANNATHY TEMPLE PARIPALANA SABAI**

..............20.....

.....12....2010.

## "ஆற்றங்கரையான்" நூல் வெளியீடு.

1. பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ் அவர்கள்
திருமதி. ச. மனோன்மணி

2. திரு. சி. இராஜ்குமார் அவர்கள்
(ஹரிகணன் பிரின்ரேர்ஸ்)

அன்புடையீர்!

சென்ற 19.10.2010ல் மேற்படி நூல் சம்பந்தமாக எமது ஆதங்கத்தை வெளிப்படுத்தி இரு பகுதியினருக்கும் பதிவுத் தபாலில் கடிதம் அனுப்பியிருந்தேன். பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ் அவர்கள் குறிப்பிட்டிருந்த விலாசத்தில் கடிதம் வழங்கப்படாது திரும்பி வந்தது. பின்னர் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் மேற்பார்த்து என 13.11.2010ல் மேலும் ஒரு கடிதம் பதிவுத் தபாலில் அவருக்கு அனுப்பியும் இரு பகுதியினரிடமிருந்தும் இன்று வரை (05.12.2010) எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. இவை வேதனையாகவுள்ளது. பிரசித்திபெற்ற சைவ மக்களால் பூஜிக்கப்படும் இவ்வாலயத்தை அவசியமற்ற ஆய்வுசெய்யவும் அதனை சந்நிதியான் ஆச்சிரமத்தில் விற்பனை செய்யவும் அதில் பெறப்படும் நிதி சந்நியான் ஆச்சிரம சகல பணிகளுக்குமெனக் குறிப்பிடுவதும் இவ்வாலயத்தை செல்லாக் காசாக கருதுவதும் எம்மாலும் ஏன் இவ்வாலயத்தின்மேல் அதிதீவிர நம்பிக்கை வைத்துள்ள எவராலும் ஜீரணிக்க முடியாது. புகழ் பெற்று விளங்கும் இவ்வாலயத்தை உங்கள் சுயவிளம்பரங்களுக்காக வியாபாரப் பொருளாகக் கருதுவது எவ்வகையிலும் நியாயமாகாது. தங்களது இச்செயற்பாட்டிற்காக உங்கள் இரு பகுதியினர் மீதும் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளோம். இதற்கான பொறுப்புக்களை ஏற்று எமக்கு உரிய பதிலைத் தரவும்.

நன்றி

வி. தெய்வேந்திர ஐயர்
செயலாளர்
ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய பரிபாலன சபை

செயலாளர்
பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
# தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பரிபாலன சபை
## THONDAIMANARU SRI SELVASANNATHY TEMPLE PARIPALANA SABAI

தலைவர் : திரு. ஆ.சிவசண்முகஐயர் (J.P)
President : Mr. A. SIVASANMUGAIYAR (J.P)
செயலாளர் : திரு. வி. தெய்வேந்திரஐயர் (J.P)
Secretary : Mr. V. THEIVENDRA IYAR (J.P)
பொருளாளர் : திரு. வி. சுரேஷ்குமார்
Tresarur : Mr. V. SURESHKUMAR

Phone : 021 3734392
Internet : www.sannathy.com
mail : sriselvasannathy@sannathy.com



பதிவு இல. HA/05/JA/421

நிர்வாக உறுப்பினர்கள் Committee Members
திரு. க. ஆறுமுகசாமி ஐயர்
Mr. K. ARUMUGASAMY IYAR
திரு. த. பாலசுப்பிரமணிய ஐயர்
Mr. T. BALASUBRAMANIYA IYAR
திரு. ஆ. லோகேஸ்வர ஐயர்
Mr. A. LOGESWARAN IYAR
திரு. த. அகிலேந்திர ஐயர்
Mr. T. AKILENTHIRA IYAR
திரு. வ. சுந்தரமூர்த்தி ஐயர்
Mr. V. SUNDRAMOORTHY IYAR

...............20.....

### உலகின் பல பாக சைவப்பெருமக்களுக்கு பணிவான விண்ணப்பம்

மேற்படி எமது ஆலயப்பெயருடன் பல இணையத்தளங்கள் உருவாகியுள்ளன எனினும் அவைகட்கும் இப்புனித ஆலயத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. நிர்வாகங்கள், பூசைவழிபாடுகள் யாவும் இவ்வாலய ஸ்தாபகர் திரு.மருதர்கதிர்காமரின் வழித்தோன்றல்களால் தான் நடைபெறுகின்றன. இவ்விணையதளமே இவ்வாலயத்துடன் தொடர்புள்ள ஒரே ஒரு இணையத்தளமாகும். மேற்படி திரு. மருதர்கதிர்காமரின் வழித்தோன்றல் மூலம் பரம்பரை பரம்பரையாக வழிவந்த பூசகர்களால் இன்று நிர்வாகமும் பூசைவழிபாடுகளும் மற்றும் செயற்பாடுகளும் மேலோங்கி வருகின்றன. அது மாத்திரமின்றி ஆலயத்திருப் பணிகளோடு தினமும் மதிய பூசை முடிந்தவுடன் ஆலயத்திலேயே நித்திய அன்னதானப் பணியும், ஆலயச்சுற்றாடலிலும் அண்மித்த பகுதிகளிலும் உள்ள நோயாளர்கட்கு யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியநிபுணர்கள், மந்திகை ஆதார வைத்தியசாலை நிபுணர்கள மூலம் இலவச வைத்திய சேவைகளும் ஆலயநிர்வாகத்தால் செயற்படுத்தப்படுகின்றன.

எனினும் சென்ற மஹோற்சவத்துடன் " ஆற்றங்கரையான்" என்னும் நூல் வெளியீடு எமக்கு சில பல நெருக்கடிகளை ஏற்படுத்தி விட்டது ஆலயத்தையும் ஆலயப்பூசகர்களையும் இழிவுபடுத்துவும் வகையில் நூல் வெளியிடப்பட்டமையினால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எமது ஆதங்கங்களை வெளிப்படுத்திய போதும் அவர்களிடம் இருந்து உரிய பதில் கிடைக்கவில்லை இதனை அறிந்த பலரும் எமக்கு வேதனை யுடன் நல் ஆலோசனைகளை வழங்கியுள்ளனர். இதனால் விரைவில் நாம் சட்டநடவடிக்கை எடுக்க வுள்ளோம் இதன் விபரங்களையும் நாம் எமது இணையதளமூலம் தெளிவுபடுத்தியுள்ளோம். ஏற்கனவே மேலோட்டமாக பத்திரிகைகளிலும் இதுபற்றி குறிப்பிட்டுள்ளோம்.

எம் பெருமான் ஆலயத்திருவருள் தன்மையும் அடியார்கள் பக்திபிரவாகமும் மேலிட வேண்டுதல் செய்கின்றறோம்

நன்றி

சுப மங்களம்

ஆலய உரிமையாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்

**தொண்டைமானாறு**



ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய ஆய்வுகள், விமர்சனங்கள், விளம்பரங்கள் பற்றிய அறிவித்தல்.

பேரருட்தன்மை கொண்டதும், சைவ மக்களின் போற்றுதலுக்குமுரிய பக்திமிகு புனித ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம் அண்மைக்காலங்களில் ஆய்வுகள், விமர்சனங்கள், விளம்பரங்கள் என்பவற்றினால் அபகீர்த்திகளும், இடையூறுகளும் அமைந்த காரணங்களினால் ஆலய நிர்வாகம் சிலபல நடவடிக்கைகளை மேற்கொள்ளும். எனவே எதிர்காலத்தில் இப்புனிதமிகு ஆலயத்தை கருவூலமாக்கொண்டு ஆய்வுகள், விமர்சனங்கள், விளம்பரங்கள் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்வோர் ஆலய நிர்வாக அனுமதி பெறப்படவேண்டுமெனப் பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இப்புனித ஆலயப் பூஜைவழிபாடுகள், நிர்வாகங்கள் யாவும் இவ்வாலய ஸ்தாபகர் திரு மருதர் கதிர்காமர் அவர்கள் கந்தவேற் பெருமான் பணித்த பிரகாரம் செவ்வனே நடைபெற்றுத் தற்போது திரு மருதர் கதிர்காமர் அவர்களின் வழித்தோன்றலர்களாலுமே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆலய உரிமையாளர்கள்
ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம்
தொண்டைமானாறு

செயலாளர்
பரிபாலன சபை
ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம்
தொண்டைமானாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம பொறியிலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

தொண்டைமானாறு அருள் மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மலருக் கான வாழ்த்துச்செய்தி அன்பளிப்பதையிட்டு பெரு மகிழ்ச்சியடை கிறேன். இவ்வாலயத்தில் நடைபெறும் பணிகளில் நித்திய அன்ன தானப்பணியும் இலவச வைத்திய சுகாதார சேவைப்பணியும் சிறப் பாக நடைபெறுகின்றன.

இவ்வூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைவதற்காக செல்வச் சந்நிதி ஆலய பரிபாலனசபையினர் எடுத்த சீரிய முயற்சி பாராட்டு தற்குரியது.

இவ் சுகாதார நிலையம் தன்னாலான சேவைகளின் மூலம் மக்க ளின் பாராட்டுதல்களை பெற்று வருவது மனநிறைவைத் தருகின்றது.

இதன் நிர்மானப் பணிகளில் எனது பங்களிப்பையும் பெற்று அயராது உழைத்து நிற்கும் பிரதம குருவும் சமாதான நீதவானுமாகிய திரு. தெய்வேந்திரஐயர் அவர்களும் ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப் பாளரும் சமாதான நீதவானுமாகிய திரு. கி. சிவப்பிரகாசம் அவர்க ளும் என்றென்றும் பாராட்டுக்குரியவர்கள்

இதன் சேவைகள் மேன்மேலும் விரிவு பெற்றுப் பிரகாசமடைய எனது நல்வாழ்த்துக்கள்

Dr. S. சிவகுமார்
பிரதம பொறியியலாளர்
விரிவுரையாளர், பொறியியல்கல்லூரி,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வைத்தியத்துறை செயலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

வரலாற்று தொன்மைமிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் மகிமைகளை இலங்கை வாழ் மக்கள் அனைவரும் அறிந்துள்ளார்கள். இவ் ஆலயச் சூழலிலே ஒரு வைத்தியசாலையைக் கட்ட வேண்டும் என்ற எண்ணம் பலகாலமாக இருந்து வந்தது. ஏனெனில் இவ் ஆலயத்தில் வெளியிடத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பக்தர்கள் தங்கியிருந்து தமது நேர்த்திகளையும், தியானங்களையும் செய்து வருகின்றனர். மேலும் இவ் ஆலயச் சூழலில் எந்தவித வைத்திய வசதிகளும் இல்லாத காரணத்தினால் இங்கு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க வேண்டிய தேவை இருந்து வந்தது.

இந்த தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக திரு.வி.தெய்வேந்திர ஐயர் அவர்களினால் அன்பளிப்பாக வழங்கிய காணியில் இவ் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் பணி 10.04.2011ம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்கு துரித மீள் எழுச்சித் திட்டத்தினுடைய (ENRep) நிதியும் ஒதுக்கப்பட்டது. இக்கட்டிட வேலைகள் துரிதமாக முடிக்கப்பட்டு 27.08.2011ல் திறந்து வைக்கப்பட்டது. 2011ம் ஆண்டு திருவிழா காலத்தின் போது சிறந்த சேவையை வழங்கிய இவ் வைத்தியசாலை வைத்தியர் இல்லாத காரணத்தால் தொடர்ந்து செயற்பட முடியாமல் இருந்து வந்நது.

மீண்டும் எம்மால் எடுக்கப்பட்ட பெரு முயற்சியின் காரணமாக 07.02.2012 முதல் வைத்திய சேவையை வழங்க ஆரம்பித்தது. தற்போது வாரத்தில் திங்கள், புதன் , வெள்ளி ஆகிய தினங்களில் Dr.K.நடராஜா அவர்கள் சிறந்த முறையில் வைத்திய சேவையை வழங்கி வருகின்றார். அதேவேளை அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி Dr.S.விமலேந்திரன் அவர்கள் செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய தினங்களில் வைத்திய சேவையை வழங்கி வருகின்றார். இந்த வகையில் இவ் வைத்தியசாலையினூடாக வாரத்தின் திங்கள் முதல் வெள்ளி வரை வைத்திய சேவையை வழங்கக்கூடியதாக இருக்கின்றது.

எனவே இவ் ஆரம்ப சுகாதார நிலையம் தொடர்ந்தும் வைத்திய சேவையை வழங்க எம்மாலான முழு உதவிகளையும் செய்ய தயாராகவுள்ளோம். மேலும் இவ் ஆரம்ப சுகாதார நிலையத்தின் சேவை சிறப்படைய எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இ.இரவீந்திரன்,
செயலாளர்,
சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு,
வடமாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்
ප්‍රාදේශීය සෞඛ්‍ය සේවා අධ්‍යක්ෂ කාර්යාලය, යාපනය
Regional Directorate of Health Services, Jaffna

எனது இல. / මගේ අංකය / My No. NP/04/41/31/01    உமது இல. / ඔබේ අංකය / Your No.    திகதி / දිනය / Date 21/01/2013

## சந்நிதி முருகனின் சமூகப் பணிகள் சாலச் சிறக்கட்டும்

ஆற்றங்கரையோரம் அமர்ந்திருந்து அடியார்களுக்கு அருள் பாலித்துவரும் செல்வச்சந்நிதி முருகப் பெருமானின் சிறப்பு அளப்பரியது. தொன்மை மிக்க வரலாற்றைக் கொண்ட இவ் ஆலயச்சூழல் எப்போதும் பக்திமயமாகவே காட்சி தரும். இயற்கை எழிலின் பின்னணியில் எளிமையாக எழுந்து நிற்கும் இவ் ஆலயம் ஓர் தனித்துவமானது.

அன்றாடம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தங்கள் குறை தீர்க்க ஆற்றங்கரை முருகனை நாடி வருகின்றனர். அவர்கள் அனைவருக்கும் அபயக்கரம் நீட்டி அருள் பாலித்து வருகிறார் முருகப்பெருமான். வருடம் முழுவதும் தன்னை நாடி வரும் அடியார்களின் பசி தீர்க்கும் அன்னதானக் கந்தனாக விளங்குவது இவ் ஆலயத்தின் தனிச்சிறப்பு. ஒரு வகையில் இது ஓர் அதிசயமும் கூட.

இவ் ஆலயச் சூழலிலேயே நூற்றுக்கணக்கான பக்தர்கள் நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றனர். இங்கு தங்கியுள்ள மக்களினதும், முருகப்பெருமானை தரிசிக்க வரும் அடியார்களினதும் நலன் கருதி பல சமூக நலத்திட்டங்கள் ஆலய அறங்காவலர் சபையினரால் முன்னெடுக்கப்படுகின்றன. இச் சமூக நலப் பணிகளில் ஒன்றாக இம் மக்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்க ஆலயச் சூழலிலேயே ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வடக்கு துரித மீள் புனரமைப்பு திட்டத்தின் (ENReP) கீழ் இதற்கான கட்டிடம் அமைக்கப்பட்டது. இதற்கான காணி ஆலயக் குருக்கள் அவர்களால் மனமுவந்து அன்பளிப்பாக வழங்கப்பட்டது. தற்போது இந் நிலையத்தில் சிறப்பாக மருத்துவ சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

இவ் ஆலயம் மேலும் சிறப்பாக வளர வேண்டும். அருள் பாலிக்கும் அற்புதக் கடவுளின் அன்னதானப் பணி என்றென்றும் தொடர வேண்டும். இவ்வாலயத்தின் சமூக நலப்பணிகள் சிறப்பாக தொடர வேண்டும். அதன் மூலம் இம் மக்களின் வாழ்வியல் மேம்பட வேண்டும். அனைவரும் நலமாக இன்புற்றிருக்க இறைவனை இறைஞ்சுகின்றேன்.

நன்றி.

வைத்திய கலாநிதி. ஆ. கேதீஸ்வரன்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

Address: 572/3, Hospital Road, Jaffna.
Telephones Numbers: General 021 222 2278
RDHS 021 222 3725
A.O 021 222 9972
Accountant 021 222 6253
Fax: 021 222 9971
E-mail: dpdhsjf1@sltnet.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்றுநோய் நிபுணர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

ஈழத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க சைவ ஆலயங்களுள் செல்வச்சந்நிதி ஆலயம் ஒரு தனி இடத்தை வகிக்கின்றது எனக் கூறலாம்.
இவ் ஆலயத்தில் அன்னதானம் வழங்கி அடியார்களின் வயிற்றுப்பசி தீர்ப்பதுடன் அவர்கள் ஆன்மீக ரீதியாக மேன்மையடைய வயோதிப காலத்தில் ஆலய சூழலில் அரவணைத்து அங்கு முருகப் பெருமான் அருள் பாலித்து வருவது எல்லோரும் பல ஆண்டுகாலமாக அறிந்த தொன்றாகும் இவ்வாலயத்தை அண்டிய சூழலில் வைத்தியசாலை இல்லமையையிட்டு இவ்வாலயத்தின் பரிபாலன சபையின் செயலாளரும் பிரதம குருவுமாகிய வி.தெய்வேந்திர ஐயா அவர்கள் பெரிதும் கவலையடைந்து யாழ் போதனா வைத்தியசாலையின் புற்றுநோய்ப் பிரிவுக்கு வருகை தந்து எம்மிடம் உதவியும் வேண்டினார். இவ்வாறாக ஐயா அவர்கள் எம்மை வழங்கிய ஒரு அரிய சந்தர்ப்பமாக நாம் உடனே மனமுவர்ந்து ஏற்று பல துறைசார் வைத்திய நிபுணர்களையும் வைத்திய நிபுணர்களையும் வைத்தியர்களையும் உள்ளடக்கியதான வைத்திய சேவையை வழங்க ஆரம்பித்தோம்.
எல்லாம் அவன் செயல் அவனே செய்விக்கின்றான் என்பதற்கிணங்கினால் போல் சந்நிதி முருகனின் திருவருட் பயனாக முருகப் பெருமானின் காலடி பதித்த நிலப்பரப்பில் அரச செலவில் வைத்திய சாலை அமைப்பதற்கான அனுமதியம் கிடைக்கப் பெற்றமை தெய்வேந்திர ஐயாவின் முயற்சிக்குக் கிடைத்த ஒரு பெரு வெற்றி யாகும்.
தற்போது வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் செயலாளர் திரு.சு.இரவீந்திரன் முதற் கொண்டு சகல அதிகாரிகளின் ஒத்துழைப் பால் இவ் வைத்திய சாலையானது கிரமமான வைத்திய சேவையை ஆலய சூழலில் செய்த வருகின்றமை உண்மையிலேயே பெரிய மனத் திருப்தியை அளிக்கின்றது.
இவ்வாறான பல சேவைகளை சந்நிதி முருகன் அருளுடன் மக்களுக்கு செய்யப்படுகின்றமையானது ஒரு பெரும் பாக்கியமாகும் அவ்வாறான சேவைகள் யாவும் மேலும் விஸ்தரிக்கபட்ட எல்லாம் வல்ல சந்நிதி முருகனிடம் மனதார வேண்டுவோமாக!
"இன்பமே சூழ எல்லோரும் வாழ்க"

நன்றி

டாக்டர் . ந.ஜெயகுமாரன்
புற்றுநோய் வைத்திய நிபுணர்
யாழ் போதான வைத்திய சாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி இந்திரா சிவயோகம் அவர்களின் வாழ்த்துச் செய்தி



[illegible]
திருமதி இந்திரா சிவயோகம் [illegible]
[illegible]

கண்டிடக் கடம்புடன் சந்த மகுடங்களும் கஞ்சமலர்ச் செங்கையில் சிந்து வேலும்,
கண்களும் முகங்களும் சந்திர நிறங்களும் கண் குளிர எந்தன் சந்தியாவோ!
செல்வச் சன்னதி வேலவர், தன் கருணாகடாட்சத்தினால் நடாத்தி வைத்த கும்பாபிஷேகப் பெரு விழாவின் பின் பல்வேறு துறைகளில் விசேட முன்னேற்றங் கைள நிறுவும் ஆற்றைலயும் ஆலய உரிமையாளப் பெரியார்களுக்கும் வழங்கியது கண்ணூடாகத் தென்படுவது ஆட்சேபைனயற்ற முடிவே. இவற்றுள் அழகிய சிற்ப வேலையுடன் அமைக்கப்பெற்ற சுற்று மண்டபமும் அடியாருக்கு வெய்யில் மழையாகிய இயற்கை ஆவேசங்களிலிருந்து பாதுகாப்பு அளிப்பதுடன், அமைதி யான சித்தத்தெழும் தியானப் பேற்றுக்கும் உதவுகின்றது.

அத்துடன் எம்பெருமானின் அருளை நாடி வரும் அடியார்க்குப், பசி தீர்க்கும் அன்ன தானப் பணியை முன்னெடுத்து பல்வேறு பாகங்களிலுள் நன் கொடையாளர்கள் அறியும்படி வங்கி விபரங்கள் தெரிவிக்கப்படும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பது போற்றத்தக்கது.

பசிப்பிணி தீர்ப்பதுடன் உடல்ப்பிணி தீர்ப்பதற்கும் நிரந்தர சுகாதார நிலையம் தன்னுடைய சொந்த நிலத்திலேயே அமைத்து, அச்சேைவைய தொடர்ந்து நடாத் துவதற்கு வைத்தியைரயும், தாதியையும்,சேைவயாளைரயும் அங்கு அமர்த்தி,
செல்வச்சன்னதியானுடைய வளாகத்தில் வசிப்பவர்களுக்கும்,தரிசிக்க வருபவற்குக் காத்திராப் பிராகாரம் ஏற்படக்கூடிய இன்னல்களுக்குத் தக்கசிகிச்சைை வழங்கு வதற்கும் ஏற்பாடு செய்து ஓயாது பாடுபட்டு வரும் திரு விசாக தெய்வேந்திர ஐயர் ஆவார். யாழ் போதனா வைத்திய சாலையில் பணிபுரியும் வைத்திய நிபுணர்கள் மாதத்திற்கு ஒருமுறை சேவையில் ஈடுபடுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தெய்வேந்திர ஐயருடைய தந்தையார்,முருகப் பெருமானுடைய ஒப்பற்ற பூசகர் அமரர் விசாகரத்தின ஐயராவார். அத்தம்பதிகைள அடியேனுடைய அன்புப் பெற்றோர் அமரர் சைவசிகாமணி சுப்ரீம் நீதியரசர் பொன் ஸ்ரீ ஸ்கந்த ராஜா திருமதி கண்மணி ஸ்ரீஸ்கந்த ராஜா பலகாலம் நெருங்கிப்பழகியது யான் அறிவேன். திரு விசாகரத்தின ஐயருடைய பரம்பைர அன்னதான மடமும் அண்மையில் மிக வசதி ஏற்பாட்டு அம்சங்களுடன் புதுக்கக் கட்டுப்பட்டு சிறப்பாக அன்னதானம் புரிந்து வருவதும் மகிச்சியூட்டுகின்றது.அக்காலத்தில் மிகவும் பக்தியுடன் பூஜைகளில் ஈடுபட்ட திரு செல்.பொன்னுத்திரை ஐயர் வழக்கறிஞரா கவும் இயங்கியுளார் அன்னாரின் புத்திரி குடும்பம் எம்பெருமானுக்கு அண்மையில் மிக அழகிய வெள்ளிமயில் வாகனம் வழங்கியது போற்றுதற்குரியது.

செல்வச்சன்னதிவாழ் முருகா வருக, மலராறு முகவா வருக, திருமாலின் மருகாவருக,மயிலேறுமன்னா வருக, அடியாரகள் வாழ்வே வருக, தெய்வசிகாம ணியே வருக வருகேவ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி இந்திரா சிவயோகம் அவர்களின் வாழ்த்துச் செய்தி



திருமதி இந்திரா சிவயோகம். FRCS(Eng.)FRC.Ophth

Oh Lord Muruga please reveal to thy devotee thine gracious self adorned by Kadambu flower garlands, thy lustrous crowns, thy Lotus like hand holding the power packed VEL- Spear, thy gracious six faces and eyes with lustrous colours!

When recalling how Lord Murugan of Sri Selva Sannithy, by virtue of His munificence has bestowed on the religious clerical hierarchy the necessary initiative to enact important projects to ensure lasting benefits to the faithful devotees who throng the famous Temple throughout the year.These projects that have been successfully completed include the brick and mortar roofed hallway around the Sanctum Sanctorum, with sculptured Entrance Arch,ensuring protection from sun and rain.Reconstruction of the Madapalli{Kitchen}, and the storage hall for the decorativevehiclesVahanams} for precessions of the Lord have also been completed. Further, in an effort to appease the hunger pangs of the devotees , a system of providing Annadhanams throughout the year, financial donations by desiring benefactors, bank accounts have been established and publicised, Besides alleviating hunger, system of providing hospital service on location has also been established.Initially this was conducted on Fridays, Weekends, and special festive days by doctors from the Jaffna Teaching Hospital. However, a permanent building has been constructed for this Service on land owned by Visaga.Theivendram Iyer J.P,and is staffed by a medic,a nurse an attendant, in order that services are available to those living permanently in the precincts of the Temple, and those who may suffer emergencies on a visit to the Temple and the community resident in Thondaimanar who would experience difficulty to travel to Point Pedro or Valvetiturai. Theivendram Iyer being the son of the renowned late VisakaRatna Iyer who served the Lord efficiently for many years, It is indeed not surprising.My dear late parents Saiva Sigamani Supreme Court Justice Pon. Sri-Skanda-Rajah and Mrs Kanmany Sri- Skanda-Rajah had been well acquainted with Late Visagaratna Iyer for many years, and we as children would with our grand parents stay at their residence during the entire festival period to perform humble services at the Temple.The Annadhana Madam that existed for many years with the VisakaRatna Iyer family has recently been demolished and reconstructed to a very high standard. Yet another personage of the past who cannot be forgotten was the Late Chelliah Ponnuthorai Iyer who was a solicitor as well, and remarkably devoted to SelvaSannithy

Velan and whose Daughter and husband have recently do



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதான நீதவான் சிவக்கொழுந்து அவர்களின் வாழ்த்துச் செய்தி

சரித்திரப் பிரசித்தி பெற்றதும் பல பல அற்புதங்களை தன் அடியார்களுக்கு மௌனமாகவும் காத்திரமாகவும் அள்ளி வழங்கி வரும் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் கந்தபுராண காலத்துடன் தொடர்புடையது என இவ்வூர் அடியார்கள் இன்னும் நினைவு கூருகின்றார்கள். இடையிடையே இரண்டொரு தரம் கோவிலில் சிறிய அசம்பாவிதம் நடந்தது. ஒரு சில மாதங்கள் இம் மாபெரும் ஸ்தலத்தில் நித்திய நைவேத்திய காரியங்கள் நடைபெறாதது அடியார்களால் தாங்க முடியாத தொன்றாகும்.

1987ம் ஆண்டு கோவில் ஸ்தாபகரும் ஆரம்ப கர்த்தாவும் ஆகிய மருதர் கதிர்காமரின் ஆறாவது பரம்பரையைச் சேர்ந்த உயர் திரு. விசாகரத்தின ஐயா தெய்வேந்திர ஐயா- சமாதன நீதாவானும் பிரதம பூசகருமாகிய அவர் ஏனைய கோவில் உரிமைகாரரையும் இணைத்து மகா கும்பாவிஷேகத்தை தலைமை தாங்கி முன்நின்று சிறப்பாக நடாத்தி முடித்தார்.

இவ் ஐயரே பல பழைய முறைகள் கையாள்வதினை அடியார்கள் இன்றும் உற்று நோக்கலாம். குறிப்பாக விநாயகப் பெருமானுக்கு பூசை நடக்கும் பொழுது அங்கே முன்னுக்கு இருக்கும் கல்லை சுத்த சலத் தால் அபிஷேகம் பண்ணி பிள்ளையார் வாசலுக்குள் பிரவேசிப்பார். இன்றும் பற்பல அடியார்கள் கண்டும் அனுபவித்தும் கொள்ளத்தக்கதாக இருக்கும்.

அடுத்தாக இரண்டாவது மகாகும்பாபிஷேகம் புதுப் பொலிவுடன் பழைய முருகன் வாசல் துப்பரவாக மாற்றப்பட்டு இதே கும்பாவிஷேகத்தையும் தானே முன்நின்று நடாத்திய பெருமை இப் பெருமகனைச் சார்ந்தது.

பூசாரியார், ஆறுமுகஐயா, முத்துக்குமார்ஐயா, செல்லையாஐயா, விசாகரத்தினஐயாவின் சிரேஷ்ட புத்திரனும் பிரதம பூசகரும் எழுதும் இந்நூலுக்கு ஒரு சிறு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

விசாகரத்தின ஐயாவும் தங்கமயில் ஐயாவும் இணைந்து பூங்காவனத் திருவிழா எழுபது வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற வருவது குறிப்பிடதக்கது.

தற்பொழுதுள்ள கோவில் கட்டமைப்பு மிக நேர்த்தியாகவும் அமைவாகவும் அழகாகவும் இருக்கின்ற போதிலும் சில உள்ளூர் வெளியூர் அடியார்கள் சந்நிதி முருகன் பழைய தோற்றம் இல்லையே என்று எண்ணபவர்களும் உள்ளனர். அத்துடன் சந்நிதி கலாச்சாரம் என்று ஒரு தனித்துவம் உண்டு. இங்கே கோவிலில் ஆலமிலையில் தான் அமுது படைத்து அடியார்களுக்கு அமுது வழங்கும் நிலை பெற்று வருகின்றது ஆனால் இரண்டொரு வெளி மடங்களை தவிர்த்த ஏனைய மடங்களில் வாழையிலை தவிர்த்து அடியார்களுக்கு தற்கால நவீன முறையில் அன்னம் பரி பாலிப்பதாக அறியத் தக்கதாக உள்ளது. இதை தவிர்க்க வேண்டும்

திரு. சிவக்கொழுந்து
சமாதான நீதவான்
செயலாளர் உடுப்பிட்டி பண்டகை விநாயகர் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தின் பங்களிப்புகள்

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் ஆதியில் ஓலைக்கொட்டிலாக இருந்து பின் மண்டபமாக மாறி அரைநூற்றாண்டு முதல் விமானம் அமைத்து கலசங்களும் ஸ்தாபிக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெற்றன. முருகப்பெருமான் மூலஸ்தானத்தையும் இணைந்த மண்டபத்தையும் கம்பர்மலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பரியாரியார் குடும்பத்தினரும், பிள்ளையார் மூலஸ்தானத்தை தொண்டைமானாறு தம்பா குடும்பத்தினரும். பிள்ளையார் குளத்தை வியாபாரிமூலை சின்னமுருகுப்பிள்ளை குடும்பத்தினரும். வள்ளியம்மன் மூலஸ்தானத்தை தொண்டைமானாறு முருகேசு குடும்பத்தினரும். நாகதம்பிரான் மூலஸ்தானத்தை வல்வை முருகுப்பிள்ளை குடும்பத்தினரும். தீர்த்த மண்டபத்தை வல்வை பரஞ்சோதி குடும்பத்தினரும். மடைப்பள்ளி களஞ்சிய அறை மற்றும் மணிமண்டபம் ஆகியனவற்றை திரு.வே.முருகேசு சுவாமியார் அவர்களும் அவரது அடியார்களும் மடைப்பள்ளி கிணற்றை வல்வை திரு.சீவரத்தினம் அவர்களும் ஆறுமுக சாமி மூலஸ்தானத்தை வல்வெட்டி திரு.நா.அருணாசலம் அவர்களும் வைரவப்பெருமான் ஆலயத்தை மயிலியதனை சின்னத்துரை பூமணி குடும்பத்தினரும். வைரவப்பெருமான் வெளிமண்டபத்தை உடுப்பிட்டி ஆதியாமலை திரு.இராசதுரை குடும்பத்தினரும். அமைக்கப் பங்களிப்புச் செய்தனர். 1976 முதல் இவ்வாலயம் புது மிருகில் வர்ண அலங்காரங்கள் செய்தமை அமரர் ஆ.அழகராசா (நாகர் கோயில்) அவர்களும் அவரது சகோதரர்களும் என்பது விஷேடமாக குறிப்பிடத்தக்கது.

பெருமானுக்குரிய வாகனங்களை அன்பளிப்புச் செய்தும் இன்றும் பலர் மகோற்சவ காலங்களில் உற்சவ உபயத்தினையும் செய்து வருகின்றனர். இவற்றுள் கேடகத்தை தொண்டைமானாறு திரு.மயில்வாகனம் குடும்பத்தினரும். வெள்ளைக்குதிரையை கதிரிப்பாய் மக்களும். சிவப்புக்குதிரையை திரு.நாகலிங்க ஐயரும். சோடி வெள்ளைக்குதிரைகளை கொக்குவில் அன்பரும். காராம் பசுக்களை தொண்டைமானாறு. தம்பசிட்டி மக்களும் பறவை மயிலை மயிலிட்டி வனிதசிங்கம் அவர்களும் கந்தரோடை மக்கள் மாடு வாகனத்தையும். மற்றொரு கேடகத்தை அன்மையில் கைதடி திரு.அ.சிற்றம்பலம் குடும்பத்தினரும். இரத்தின பீடத்தை வல்வை திரு.இராமசாமிப்பிள்ளை அவர்களும் இந்திர விமானத்தை வல்வை திரு. செல்லத்துரை குடும்பத்தினரும். பழைய தேரை வல்வை திரு.வெங்கடாசலம் சின்னத்தங்கம் குடும்பத்தினரும். சப்பறத்தை வல்வை திரு. குழந்தைவேல் குடும்பத்தினரும். கையிலாய வாகனத்தை இருபாலை திரு.இராசையா குடும்பத்தினரும். அன்மையில் அழகிய தாமரை மலர் வாகனத்தை கெருடாவில் திருமதி. செல்லப்பாக்கியம் குடும்பத்தினரும். யானை வாகனத்தை பூக்காரத் தொண்டர்களும் அன்னவாகனத்தை திரு.சு.செல்வச்சந்திரராசா குடும்பத்தினரும். தற்போது சிங்க வாகனத்தை தொண்டைமானாறு திரு.தங்கவடிவேல் (வெள்ளை) குடும்பத்தினரும். அப்பளிப்புச் செய்தனர்.

கம்பீர தோற்றத்துடன் கலையழகு மிளிரும் சூரன் தொண்டைமானாறு திரு.கந்தசாமி(ஹிட்லர்) அவர்கள் இந்தியாவிலிருந்து தருவித்து சூரசம்ஹாரதினத்தன்று அவரும் சகோதரர்களும் சூரன்போர் நிகழ்வுகளை ஏனையோருடன் அடியார்கள் திருப்தியுற வருடம்தோறும் வழமையாக்கி இன்றும் அவர்களது சந்ததியினரால் பேணப்படுகின்றது சிலகாலங்களுக்கு முன்பதாக தொண்டைமானாறு திரு.வே.தில்லையம்பலம் அவர்கள் சந்தனம் வழங்கும் தொண்டினை ஆரம்பித்து இப்பணி தொடர தில்லையம்பலம் ஞாபகார்த்த திருப்பணிச் சபையினையும் நிறுவி அத்தொண்டும் தொடர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலத்தில் இவ்வாலயத்திற்கு மகோற்சவகாலங்களில் வல்வை இளைய பெருமாள் மின்னொளி அமைப்பு வழங்கினார். பின்னர் மகோற்சவ காலங்களிலும் விசேட தினங்களிலும் மின்னொளி அமைப்புக்களை மேற்கொண்ட திரு.சிவசுப்பிரமணியம் அவர்கள் (வல்வை பேபி சோடா) நாளடைவில் ஆலயத்திற்கு தனி இயந்திரத்தையும் அமைத்து மின்சாரசபையின் இணைப்பு வழங்கப்பட்ட நேரத்தில் இணைப்பையும் ஏற்படுத்திவீதிகளில் குடிநீர் வசதிகளையும் செய்து கொடுத்தமை குறிப்பிடத் தக்கதாகும் இவர் ஆட்டுக்கடா வாகனத்தையும் அன்பளிப்பு செய்து மகோற்சவத்திலும் பங்கு கொள்கிறார். 1986ல் குடிநீர்வசதி வன்முறைகளில் சிதைவுற்ற பின் இந்திய இராணுவ புனரமைப்பு பணியினர் அதனைபுனரமைப்பு செய்தனர்.ஆனாலும் ஒரு சில காலம் மட்டுமே தொடர்ந்தது தற்போது மீண்டும் ஆலய உரிமையாளர்களது கோரிக்கைக் கிணங்க யாழ் அரச அதிபர் திரு.K.கணேஸ் அவர்கள் முயற்சியால் நீர்பாசன இலாகாவினர் ஆலயவீதிகளில் குடிநீர் வசதிகள் வழங்கும் பாரிய பணியைத் தொடர்ந்துள்ளனர்.

1986ல் சேதமாக்கப்பட்டு இராணுவத்தினர் வசதிமிகுந்த ஆலயத்தை ஆலய உரிமையாளர்களின் அக்கறையான ஊக்கத்திற்கு மதிப்பளித்து மீண்டும் ஆலயத்தை உரிமையார்களிடம் கையளிக்க பெரிதும் உதவியவர் பிரிகேடியர் திரு.ரூபசிங்கா அவர்களாவார்.அந்த நாட்களின் மகஜர்களை தயாரித்து உதவியவர்கள் தொண்டைமானாறு வீ.பி.ம.வி அதிபர் திரு.செ.யோகச்சந்திரன்.பரு.சித்திவிநாயகர் மகா வித்தியாலய அதிபர் திரு.ந.அனந்தராஜ் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி உப அதிபர் திரு.விநாயகமூர்த்தி ஆகியோர் அத்துடன் பரு.பாராளமன்ற உறுப்பினர் திரு.க.துரைரத்தினம் பரு பிரதேச செயலர் திரு.Y.வேலுமயிலும் அவர்கள் அடிக்கடி ஆலய உரிமையாளர்களுக்கு ஆறுதல் கூறி ஆலோசனைகளையும் வழங்கினார்கள்.

ஆனாலும் அரசிடமிருந்து எவ்வித நிவாரணமும் பெறமுடியாது போகவே பிர பல வர்த்தகரும் ஆண்டியப்பர் சந்நிதியினருமாகிய திரு.V.R வடிவேற்கரசன் அவர்கள் இந்திய உயரஸ்தானிகர் திரு.J.N டிக்சிற் அவர்கட்கு மகஜர் அளித்து சில உதவிகள் பெற உதவினார் அது மட்டுமின்றி 1982ல் முதன் முதலாக தேர் ஒலிபரப்பினை நேரடியாக அஞ்சல் செய்யக் காரணகர்த்தாவானார் இவரே தற்போது சரஸ்வதி மண்டபத்தை புனரமைத்துள்ளார். இவரோடு பொப்புலர். மொட்டர் உரிமையாளர் திரு.இ.ஜெயசேகரம் அவர்களும் அம்மண்டபபூர்த்திக்கு உதவியுடன் இன்று ஆலயத்தில் பிரதி கார்த்திகை நட்சத்திரதினத்தில் பெருமான் வீதியுலாக்களுக்கு ஏற்பாடு செய்து ஆலய நடவடிக்கைகளில் அக்கறை கொண்டு அடிக்கடி ஆலோசனைகளையும் வழங்கிக் கொண்டிக்கின்றார்.

அரச உதவி கிடைக்காத போது எமது சிறு தொகைப்பணத்துடன் 1986ல் ஏற்பட்ட சேதங்களை புனரமைத்ததுடன் பல பணிகளையும் அமரர் தெல்லிப்பழை திரு.இரத்தினம் என்பவர் அவர்கள் மேற்கொண்டமை அந்நாளில் பேருதவியாக அமைந்தது திருயோகசிகாமணி ஆலய நிர்வாகத்தை மாற்றம் செய்ய முயற்சித்த திரு நடராசா அவர்களின் முயற்சியையும் முறியடித்து ஆலய முன்னேற்றங்களை அடிக்கடி அவதானித்தார்.

இவ்வாலயத்திற்கான பூத்தேவைக்காக பூக்கொல்லை ஒன்றை அமைத்து கண்ணும் கருத்துமாக அவதானித்தார்கள் தொண்டைமானாறு பொன்னுச்சாமி தையல்சந்ததியினராவர் அதிலும் இன்று சண்முகராசா சோதிராசா பூக்கொல்லையை நவீன முறையில் ஆலயத்திற்குப் போதிய பலன் கிடைக்கவழி செய்தமை பாராட்டுக்குரியது ஆலய மகோற்சவ காலத்தில் அடியார்களின் பாதுகாப்பு போக்குவரவு போன்ற சேவைகளை இளைப்பாறிய அதிபர் திரு.கோ.செல்வநாயகம் திரு.ந.அனந்தராஜ் கலட்டி முதலுதவிசங்க நிர்வாகி திரு.பொ.அருந்தவராசா மற்றும் செஞ்சிலுவை அமரர் திரு.ரவி ஆகியோரும் நன்கு வழங்கியதும் இன்றும் திரு.பொ.அருந்தவராஜா அவர்கள் தொடர்ந்து இவ்வாலய நிகழ்வுகளில் சேவைப்பணியாற்றுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் யாழ் அரச அதிபரும் இந்து ஒன்றியத்தலைவருமான திரு.யோகேந்திரதுரைசாமி அவர்கள் 1986ல் ஆலயம் பாதிக்கப்பட்டபோது நிவாரணம் கிடைக்காதவிடத்து இந்து ஒன்றிய மூலம் எமது ஆலயத்திற்கு 50 ஆயிரம் பெற்றுத்தந்தார். அத்துடன் இலங்கையின் ஐந்து ஆலயங்கள் புனிதநகராக்கவும் அதில் எமது ஆலயத்தையும் ஒன்றாக தெரிவு செய்து சிபாரிசு செய்திருந்தார். திருமதி சிவாநந்தினி துரைசாமி அவர்களும் அச் செயல்பாட்டில் கவனம் செலுத்திய போதும் அவை பின் தொடரப்படவில்லை.

சென்ற சில வருடங்களில் அமரர் திரு. மகேஸ்வரன் அவர்கள் முயற்சியால் புதிய சித்திரத்தேரும் பூங்காவன மண்டபமும் அன்பளிப்பு செய்யப்பட்டது. அடியார்களின் ஆக்க ஊக்கத்தினால் விநாயகர். ஆறுமுகப்பெருமான் சித்திரத்தேர்கள் உருவாகியுள்ளன. மூன்று தேர்களையும் திரு.ஜெயகாந்தன் அவர்களின் குழுவினர் உருவாக்கினார்கள்.

மேலும் 1968ன் போது கும்பாபிஷேக நிகழ்வுகளுக்கு பெரும் பங்களிப்பு செய்த திரு.வே.முருகேசு சுவாமிகள் மற்றும் அவர்களது அடியார்களுக்கும் சிறுப்பிட்டி திரு. கந்தைய்யா உபாத்தியார் குடும்பத்தினருக்கும் பின்பு மணிக்கோபுர புனரமைப்புப்பணிகளில் பெரும் பங்களிப்பு செய்த வைரமாளிகை திரு.முருகமூர்த்தி தொண்டைமானாறு திரு.சின்னராசா (கறுவல்க்குட்டி) இரத்தினவாசகம்(குட்டிக்கிளி) ஆகியோருக்கும் 2008ல் நடைபெற்ற கும்பாபிஷேகப் புனரமைப்புப்பணியில் பங்களிப்பு செய்த கைதடி அமரர் திரு.த.வேலாயுதம் அவர்கள் உறவினர்க்கும் பிள்ளையார் மூலஸ்தானப்பணியில் பங்களிப்பு செய்த தம்பா குடும்ப சுசீலாதேவி தனநாயகம். ஜெயஸ்ரீ முருகதாசன் உஷா ஜெயதீஸ்வரன். சுரேஸ்குமார் தனநாயகம் கலைச்செல்வி சசிகலா-விஜயராகவன் குறிஞ்சிக்குமரன். நல்லைநுவன்.இராஜகுமார் நல்லையா பாலேந்திரா-ஜெயக்குமார் சர்வேஸ்வரன் குகராணி தயாபரன் ஆகியோருக்கும் வள்ளியம்மன் மூலஸ்தான பணியில் பங்களிப்பு செய்த தொண்டைமானாறு திரு.சிவகாமி ஆண்டார் யோகலிங்கம் அவர்களும் நாகதம்பிரான் ஆலயப்பணியில் பங்கு கொண்ட வல்வை திரு.முருகுப்பிள்ளை குடும்பத்தினருக்கும்.ஆறுமுகசாமி மண்டபப்பணியில் பங்கு கொண்ட திரு.நா.அருணாசலம் அவர்களுக்கும் மற்றும் பெருமான் அடியார்க்கும் இக்கும்பாபிஷே தினத்தில் பூசகர்கள் .தொண்டர்கள் பணியாட்கள் வேட்டி சால்வை உபயம் செய்த கைதடி திரு.சிற்றம்பலம் குடும்பத்தவர்க்கும் சுற்றுமண்டபப்பணியை அத்திவாரமிட்டு ஆரம்ப அன்பளிப்பு வழங்கிய திரு.இராஜகுரு அவர்கட்கும் என்றும் பெருமான் பணிகளில் ஆக்க ஊக்கங்களை நல் மனதுடன் வழங்கும் பேராசிரியர் திரு.கா.சிவத்தம்பி டாக்டர் திருமதி இந்திரா சிவயோகம் அம்மையார். திரு.சரவணப்பிரபு திரு.புவனேந்திர ஐயர் து.வேலும்மயிலும் டாக்டர் பொ.சிவபாலன்.திரு.வி.சண்முகலிங்கம் மற்றும் மகாகும்பாபிஷேகத்தின் போதுகலாபிஷேகத்திற்குறிய புனித தீர்த்தங்கள் கிடைக்க பணியாற்றிய திரு.வித்தகம் சுவாமிகள் அவர்கட்கும் அவரது தொண்டர்களான நெல்லியடி திரு.தங்கராசா திரு.திருநாவுக்கரசு மற்றும் திரு.சண்முகலிங்கம் அத்துடன் ஆலய கும்பாபிஷேகத்திலும் மண்டலாபிஷேகத்திலும் ஏனைய விஷேட தினங்களிலும் பெருமானுக்குரிய அபிஷேக ஏனைய விஷேட தினங்களிலும் பெருமானுக்குறிய அபிஷேக பஞ்சாமிர்த பழவகைகளை வழங்கிய உரும்பிராய் திரு.புஸ்பமநாதன்.தங்கராசா மற்றும் அடியார்க்கும் பெருமான் அடியார்கட்கும் இம்மணங்கமழ் மலருக்கு கருத்துரைகள் ஆசிகள் வழங்கிய அன்பர்கட்கும் ஆலயப்பணிகளின் வளர்ச்சியிலும் அடியார்கள் நலன் கருதியும் இன்முகத்துடன் சேவைகள் செய்து எமக்கும் உதவும் யாழ் அரச அதிபர் திரு.K.கணேஸ் அவர்கட்கும் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி அவர்கட்கும் பரு பிரதேச செயலர் திரு.சி.வரதீஸ்வரன் அவர்கட்கும் வல்லை நகராட்சி மன்ற செயலாளர் திரு.கு.அமிர்தலிங்கம் அவர்கட்கும் எமது பகுதி கிராம அலுவலர் திரு.சேகர் அவர்கட்கும் பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் திரு.N.சுதாகரன் அவர்கட்கும் நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு.கருணாநிதி அவர்கட்கும்

நீண்டகாலமாக புனரமைக்கப்படாத அச்சுவேலி - தொண்டைமானாறு பாதையினை புனரமைக்க வழிவகுத்த யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அவர்களுக்கும்

அண்மைக்காலமாக தொண்டைமானாறு திரு. ஆர்.பாலேந்திரா அவர்கள் ஆலயத்தின் அன்றாடப் பணிகள், திருப்பணி காரியாலய செயற்பாடகளில் ஈடுபாடு கொண்டு ஊழியராக சிறப்பாக செய்து வருகின்றார்.

எமது ஆலயப் பணிகள் விபரங்களை அவ்வப்போது E.MAIL மூலம் கொழும்பு.கனடா.லண்டன் ஆகிய நாடுகளுக்கு தெரிவித்த மிருசுவில் திரு.சி.பிரதீப். தி.முருகதாசன் ஆகியோருக்கும் பின்னர் உலகின் பல பாகங்கட்கும் தெரிவித்த து.பாலசுப்பிரமணியம் அவர்கட்கும் இம்மலர் பதிப்பு வேலைகளை கணனி மூலம் உதவிய உடுப்பிட்டி செல்வா பதிப்பகத்தாருக்கும் அவரது ஊழியர்களுக்கும் மலரை வெளியீடு செய்த நாவலர் மட லெட்சுமி ஒவ்செற் ஸ்தாபனத்தார்க்கட்கும் மனமார்ந்த நன்றிகளை ஆலய உரிமையாளர்கள் சார்பில் விசேடமாக தெரிவித்துக்கொள்கின்றோம்.யாவர்க்கும் பெருமான் நல்லருள் நல்கப் பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07-04-2008 மகா கும்பாபிஷேகத்தின் ஏக கலசம் செய்த அபிஷேகம் செய்த சந்ததி விபரம்
### ஸ்தாபகர் மருதர் கதிர்காமர்

01) ஆறுமுகம் -01) முத்துக்குமார் + பொன்னம்மா.தங்கன்.செல்லாச்சி.பாக்கியம்.செல்லையா + அன்னக்கண்டு → விசாகரத்தின ஐயர் + நேசம்மா

02) இளையதம்பி பொன்னம்மா

03) சுவாமிநாதன் ஆத்தப்பிள்ளை

↓

கணபதிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை

↓

ஆறுமுகசாமி ஐயர், 01) இரத்தினேஸ்வரி 02) ஜெகதீஸ்வரி

↓

ஜெகதீஸ்வரன்.வள்ளிநாயகி.விஜயசிறீசினி.சிவகுமார்

02) வேலுப்பிள்ளை + 01) மாணிக்கையர் → கதிரிப்பிள்ளை ஆறுமுகசாமி ஐயர் + வேதநாயகி

சிவசண்முக ஐயர் J.P + தெய்வரதி

(வள்ளியம்மன்) பங்கையச்செல்வி

02) சங்கரப்பிள்ளை, கந்தசாமி ஐயர் + மனோரஞ்சித மணி

உலக குருநாத ஐயர் + புஸ்பராணி

(ஆறுமுகப்பெருமான்)

ஜெயந்தி. விசிதா

வனிதா + சுந்தரமூர்த்தி

ரமணன்.ராகவன்.கார்த்திகேயன்

03) பிள்ளையினார் -01) இரத்தினசாமி - பவளக்கொடி

தங்கராசா - இராசமணி

அகிலேஸ்வரஐயர் - இரத்தினகுமாரி

அகிலா.அமலா.அகிலேஸ்

02) சின்னராசா + செல்லம்மா

தர்மரத்தின ஐயர்; + கேதாரீஸ்வரி

பாலசுப்பிரமணி ஐயர் + மாலினி

நிஷாந்தி.பவித்திரா.சரவணன்.வேணியா

04) முருகர் → ஆத்தாள் + செல்லையா → சுப்பிரமணிய ஐயர் + வள்ளியம்மாள் → வடிவேற்கரசு + சரோஜினிதேவி → சுந்தரமூர்த்தி + வனிதா → துவாரகன். ஸ்ரீசாளினி

↓

### 07.04.2008 கும்பாவிஷேகம்

தெய்வேந்திர ஐயர் J.P + மாணிக்கம்

மணிக்கோபுரம் ,

முருகப்பெருமான் மூலஸ்தான கலசாபிஷேகங்கள்

01. மகேந்திராணி + சிறிறஞ்சன் → கபிலன, லோகஜன்

02. ஜெயந்திரன் + சசிகலா → கணேந்திரன், ஹரீந்திரன்,யுகேந்திரன்

03. சுசீந்திரன் + ஜெயந்தி → வைஸ்ணவி

04. ரவீந்திரன் + சுகிர்தா → மயூரதி, தீபிகா, சுதர்சினி, கிருஷ்ணேந்திரன்

05. அமரர் துஷியேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7ஆம் தலைமுறை பூசகர் திரு.தெ.சசீந்திர ஐயர்



திரு.தெ.சசீந்திர ஐயர் உற்சவ உபயகாரர்களுக்கு
காளாஞ்சி வழங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60 வயது பூர்த்தியின் போது திரு.தெய்வேந்திர ஐயருடன் மனைவி



அமரர் துஷியேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமரின் 6வது, 7வது, 8வது சந்ததி



கதிர்காமரின் 6வது, 7வது சந்ததி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகப் பெருமான் அநுக்கிரகத்தால் திட்டமிடும் திரு.வி.தெய்வேந்திர ஐயரும்
திட்டடும் பணிகளை திறம்பட ஒப்பேற்றும் ரூபினான்ஸ் தாபன உரிமையாளர்
திரு. சிவசேகர மூர்த்தி அவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருமான் தொண்டன்

20ம் நூற்றாண்டின் கந்தபுராணத் தொடர்புடைய அருள் மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய ஸ்தாபகர் தேவலோக பிரகிருதிதவத்திரு மருதர் கதிர்காமர் அவர்களுக்கு திருக்காட்சியளித்து வேற்பெருமான் தமக்குப்பூஜை வழிபாடுகளை மேற்கொள்ளுமாறு பணித்த பிரகாரம் புனித மிகு கதிர்காம ஆலயப்பூசையை ஒத்த பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன திரு மருதர் கதிர்காமருக்குப்பின் அவரது சந்ததியினர் அனைவரும் அவர்களுக்குப்பின் இன்றைய சந்ததியினரும் அவ்வாறே மேற்கொள்ளுகின்றனர்

அந்த வகையில் தவத் திரு கதிர் காமரின் மூத்த இரண்டாவது சந்ததியாக திரு ஆறுமுக ஐயரும் மூன்றாவது சந்ததியாக திரு முத்துக்குமாரு ஐயரும் நான்காவது சந்ததியாக திரு செல்லையா ஐயரும் ஐந்தாவது சந்ததியாக தந்தையார் திரு திரு.விசாகரத்தினஐயரும் ஆறாவது சந்ததியாக திரு தெய்வேந்திர ஐயராகிய நானும் ஏழாவது சந்ததியாக மகன் திரு சசீந்திர ஐயரும் ஸ்தாபகரின் மூத்த சந்ததி வழியில் பெருமான் பூஜை நிகழ்வுகளையும் சுற்றாடல் சேவைகளையும் கவனித்து ஆலய சுற்றாடல் மேம்பாட்டில் அக்கறை கொண்டுள்ளோம் சகோதர சந்ததியினரும் பேருதவியாகப இருக்கின்றனர்

எனது தந்தையார் சிவபத மெய்திய பின் அவரின் பூஜை நிகழ்வுளையும் எமது சந்ததியினரும் தந்தையாரும் பராமரித்து வந்த முன்னைய தகர மடத்தையும் புனரமைத்து மன நிறைவைப்பெறுகின்றேன். அது மாத்திரமன்றி பெருமான் அநுக்கிரகத்தால் 1980முதல் 81 வரையிலும் பின் 1986 முதல் 1992 வரையிலும் பின் 2008 ஆடி முதல் இன்று வரை ஆலய நிர்வாகச்செயலாளராக விருந்தமையால் நற்பணிகளை மேற்கொள்ள முடிந்தது அது மாத்திரமன்றி இம்மலரில் ஆலய செயற்பாடுகள் பகுதியில் அடங்கிய பணிகளில் 75 வீதமானவை எனது எண்ணப் பிரகாரமே அமைந்து ஆலயத்தையும் சுற்றாடலையும் யாவர்க்கும் திருப்தியை அளிப்பதும் சந்தோஷமே ஆரம்பகாலத்தில் தெல்லிப்பழை அமரர் திரு இரத்தினம் என்ஜினியரும் பின்னர் இவ்வாலய 75 வீத அமைப்புப்பணிகளை கரவெட்டி ரூபின்ஸ் ஸ்தாபனப் பொறுப்பாளர் திரு சிவசேகரமூர்த்தி அவர்களும் எனது எண்ணங்களை சரிவரப் புரிந்து அருள்மிகு, அழகுற, ஸ்திரத்தன்மை கொணடு மரபு மாறா வகையில் ஒப்பேற்ற பெருமான்அநுக்கிரகமும் அடியார்கள் ஆதரவுமே காரணியாகின்றது

தமிழ் மற்றும் சிங்களம்,ஆங்கிலம் ஓரளவு சரளமாக தெரிந்த தன்மையினால் பல்வேறு அதிகாரிகளையும்,அரச நிர்வாகிகளையும் ,அடியார்களையும் அணுகி அநுகூல மாக்கக் காரணியாகின்றன பிறந்த நாள் முதல் இன்று 71ம்வயது வரை ஆலயச் சூழலிலே எனது வாழ்க்கையும் பின்னிப்பிணைந்து பல்வேறு சிரமங்கள், துன்பங்கள், அனத்தங்களை சந்தித்து சலியாது நல்வதையே செய்ய நாட்டமுள்ளது எனினும் இயலாதத்தன்மையும் வயது முதிர்ச்சியும் ஆங்காங்கே சிற்சில நெருக்கடிகளும் தலை தூக்குவதால் எதிர் காலத்தில் எமது சந்ததிப் பூசை நிகழ்வுகளையும் தந்தையார் பராமரித்த மடத்தையும் கவனித்து சிவனே என்ற செயல் பட சித்தமாயுள்ளது அந்நாள் முதல் இந் நாள்வரை பெருமான் அநுக்கிரகமும் அன்பர்கள் உறுதுணைகளும் எதிர்காலத்திலும் நிலைக்கப் பெருமானைப் பிராத்தித்து யாவர்க்கும் நல்லருளும் நல மும் கிடைக்க வேண்டுதல் செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரத்தியேக நன்றி

வரலாற்றுப் பெருமையும் தொன்மை மிக்க கந்தபுராணத் தொடர்புடையதும் சைவ மக்களின் பெரு மதிப்பும் பெற்ற பக்தித் திருத்தலமான அருள் மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் ஸ்தாபகர் தேவலோக தவத்திரு மருதர் கதிர்காமர் காலமுதல் இன்றுவரை இவ்வாலயம் யாவர்க்கும் அருள் மிகுந்த திருப்தியை அளிக்கின்றது அவ்வப்போது பெருமான் திருவருள் தன்மையும் அடியார்களின் இறைபக்தியும் இடையிடையே சிற்சில அனர்த்தங்கள் கஷ்டங்கள் சுபீட்சங்கள் யாவும் சக்கரம் போல சுழன்றும் இன்றும் திருத்தலமும் தவத்திரு மருதர் கதிர்காமர் சந்ததியினரும் நிலைத்து நின்று மேலோங்கும் நிலையில் உள்ளது. இறைபக்தியும் பெருமான் மீதுள்ள பக்திப்பற்று மிக்க அனைத்து அடியார்கட்கும் உளமகிழ்ந்த நன்றியுரித்தாகட்டும். இவ்வாலய விபரங்களை முதலில் நல்லூர் பிள்ளையார் அச்சகத்திலும் பின்னர் நெல்லியடி லெட்சுமி ஒவ்செற்றிலும் தற்போது திருநெல்வேலி தாயகம் டிஜிற்றல் பதிப்ப கத்தார் மூலமும் யாவரும் அறிந்து தெரிந்து கொள்ள வாய்ப்பளித் தமையால் அவர்கள் யாவர்க்கும் எமது மனப்பூர்வ நன்றியைத் தெரி விக்கின்றோம்

நன்றி

**பிரதம சிரேஸ்ட பூசகர்**
**வி.தெய்வேந்திர ஐயர்**
**சமாதான நீதவான்**

## அர்ச்சனை

அருள் மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி வேற்பெருமான் மீது அன்று முதல் இன்று வரை பக்தி மேலோங்க வழிபாடு செய்யும் அடியார்கள் அன்பர்கள் யாவரும் எதிர்காலத்திலும் இவ்வாறே நம்பிக்கையுடன் வழிபட தேவலோக பிரகிருதி மூலமும் அவர் சந்ததியினர் மூலமும் எம் எல்லோரையும் ஆட்கொளும் வேற் பெருமானுக்கு எவ்வாறும் நன்றி தெரிவிக்க முடியாது எனவே தூய மனமலரினால் அர்ச்சித்து வேற் பெருமான் எம் எல்லோருக்கும் எதிர்காலத்தில் நல்லருள் பாலித்து கலமாக சுபீட்சமாக வாழப் பிராத்திப்போமாக!

**சுபமங்களம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலழகன் பாமலர்

ஆறடிநிலமே சொந்தமடா
ஓரடிதானும் அசைக்க அவன் அருள் வேண்டுமடா.

ஓரடிதானும் அசைக்க அவன் அருள் வேண்டுமடா
பாரடி மாந்தரிங்கே ஆடுகின்ற ஆட்டமதை
கூறடி உண்மை எது? சந்நிதி வாழ் அப்பனல்லோ! (ஆறடி)

தொண்டைமான் ஆற்றருகே தொண்டர்களை காக்க
கண்டவர்கள் விண்டில்லாத வேதப் பொருளாகி
கதிர்காமர் மனம்கொண்டு அமைத்த நற்கோயிலிது
செல்வச் சந்நிதி எம் செல்வத்தின் சந்நிதியே (ஆறடி)

வள்ளிக்குற மாதுடன் துள்ளி விளையாட என்று
சோலைகள் சில சமைத்தார் சாலைகள் பல அமைத்தார்
அடியவர் குறைதீர்க்க அன்னதானம் படைக்க
இடங்கள் பலவைத்தே மடங்கள் பல அமைத்தார் (ஆறடி)

கற்பூரச் சட்டிமேல் கந்தன் முகம் தெரியுதய்யா
காவடி ஆட்டத்திலே உந்தன் எழில் தோணுதப்பா
தீ மிதித்த பக்தரில் உன் திருக்கோலம் தெரியுதப்பா
திருநீற்று மகிமை ஐயா திக்கெட்டும் பரவுதய்யா (ஆறடி)

தீராத நோய்தீர்க்கும் மாமருந்து இங்குண்டு
வாராத மனிதரில்லை தீராத நோயில்லை
மாறாத மனத்தோடு சோராமல் நம்பினவர்
கூறாமல் குறை தீர்ப்பான் செல்வச் சந்நிதியான் (ஆறடி)

எங்கிருந்தோ வந்த என்னை இங்கழைத்த மர்மமென்ன
ஆறாக ஓடி இங்கே கடலாக மாறுகின்ற ய்
பிறவிக் கடலினிலே தத்தளிக்கும் பிள்ளையய்யா
பிறப்பை அறுத்து என்னை ஈடேற்றும் நாளெப்போ (ஆறடி)

***தேவாரம்*** (சிவஆறுமுகம்)

பொன்னார் மேனியனே புலித்தோல் அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னே மாமணியே மழர்பாடியுன் மாணிக்கமே
அன்னே உன்னையால்லாலொனியாரை நினைக்கிலேனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

077 2440642
Bா கோர்ப்ஜையா

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குற மாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசனொடு ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினைதீர்க்குமுகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகமொன்றே
ஆறு முகமான பொருள்நீ அருளவேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## செல்வச் சந்நிதி திருப்புகழ்

இடையராய் வந்து கதிர்காமரை இரட்சித்த முகமொன்று
கதிர்காமம் தன்னில் பூசைமுறை காண அழைத்தமுகமொன்று
கதிரமலைக் கொடியேற்றச் சென்றமுக மொன்று
களைத்துத் துவையல் உண்ண ஓடி வந்த முகமொன்று
அடியார்க்கு அன்னதான மளிக்குமுகமொன்று
புண்ணியனார் சமாதி கண்ட பூவரச மரத்தருகே கோயில் கொண்டு
வீற்றிருந்த முகமொன்று
ஆறுமுகமாகி மயிலேறிவள்ளிதெய்வமங்கையுடன் வேலாகி நிற்க
அடியவர்களும் தேவர்களும் அகமகிழ்ந்து வாழும்செல்வச்சந்நிதி
வேலவா சரணம்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் நற்றவம் வேள்லி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.


## போற்றி.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி
அன்னை பராசக்தியே போற்றி
அம்பிகை கண்ணகியே போற்றி
ஆலமரத்தடியே அமர்ந்து அடியாரைக் காக்கும் கடவுளே போற்றி
பல்கலை பயக்கும் வேளமுகத்து விநாயகனே போற்றி
வல்வினை அகற்றும் பூவரசப் புனிதா போற்றி - நண்ணினார்க்கு
நல்வினையருளும் சந்நிதி வேலா போற்றி போற்றி.

சுப மங்களம்

அருள்மிகு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம் - 2013 மலர், 323, பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள தாயகம் டிஜிற்றல் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு திரு.வி.தெய்வேந்திர ஐயர் அவர்களால் 25.2.2013 இல் வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**வி.தெய்வேந்திர ஐயர் (ஜே. பி)**
பிரதம சிரேஸ்ட குரு,
செல்வச்சந்நிதி ஆலயம்.

වි. තෙය්වේන්තිර අය්යර්

**V. THEIVENDRA IYER - JP**
High Priest, Selva Sannithi Temple,
Thondaimanaru.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அமரர் திரு.செ.விசாகரத்தின ஐயர் மடம்

## (முன்னைய தகரமடம்)









தாயகம் Digital
021 222 0321

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org